

# புருஷ வேட்டை

இந்திரா செளந்தர்ராஜன்

திருமகள் நிலையம்

வைக்கும் நாவல். ஆண்களின் நல்ல மனத்தைப் பார்க்காமல் இரண்டாம்தாரம் என்ற ஒன்றை மட்டும் வைத்து திருமணத்திற்கு மறுத்து விடும் பெண்களுக்கு இந்நாவல் ஒரு நல்ல படிப்பினை. கலைமகள் மாதப் பத்திரிகையில் வெளியான சிறிய நாவல் என்றாலும்—கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

'தூண்டிலில் ஒரு திமிங்கிலம்' ரம்யா—தனஞ்செயனின் நிறைவேறாத காதல் கதை. காதலுக்கு தடை அந்தஸ்து. அவர்கள் காதலைத் தடுக்க தனஞ்செயனின் தந்தை கிருஷ்ணமோகன் செய்யும் சதி வேலைகள்—ஒரு தந்தை தன் மகனின் நல்வாழ்வை விரும்பாமல்—தன் கௌரவத்தை மட்டும் பார்த்து எந்த எல்லைவரை செல்வார் என்பதற்கு எடுத்துக்காட்டு. கடைசியில் அவராவது அதில் வெற்றி பெறுகிறாரா என்றால் அதுவுமில்லை. மாலைமதியில் வெளியான நாவல் என்பதால் விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லை.

இந்திரா சௌந்தர்ராஜன் நாவல்களைத் தேடிப் படித்து மகிழ்ந்து வரும் வாசகர்களுக்கு இந்நூல் இன்னுமொரு கதை விருந்து. படித்து மகிழுங்கள். நிச்சயம் பாராட்டுவீர்கள்.

பதிப்பகத்தார்.

# புருஷவேட்டை

## 1

ஒரு வழியாகக் கல்யாண நிச்சயதார்த்தம் களேபரமாக முடிந்தது. எல்லோரும் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். சின்ன வீடு- ஆனால் நல்ல கூட்டம்-அதனால் உரசாமல் கொள்ளாமல் நடக்க முடியவில்லை.

''எல்லார்க்கும் மறக்காம வெத்தல பாக்கு, பழம் வெச்சுக் கொடுத்துடும்மா...'' ராமச்சந்திரன் தன் மனைவி தர்மாம்பாளிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''எல்லாம் நான் பாத்துக்கறேன். நீங்க போய் சம்பந்தியோட பேசிண்டிருங்கோ. தனியா உக்காந்திண்டுருக்கார் பாருங்கோ...''

சம்பந்தி பிச்சுமணி அய்யர் தனியாகத்தான் உட்கார்ந்திருந்தார்.

பார்க்கப் பூர்ணம் விஸ்வநாதன் ஜாடை! கண்களில் தொடிக்கொரு சிமிட்டல்.

ஆமாம் எங்கே மாப்பிள்ளைப் பையன் கல்யாணராமன்?

அவர் பார்வைத் துழாவலில் அவன் அவனோடு வந்திருந்த நண்பர்களோடு வீட்டுக்கு முன்னால் தெருவில் நின்று பேசிக் கொண்டிருந்தான்.

நல்ல உயரம், பருமன்!

ஒரு ஸ்டண்ட் நடிகனுக்குண்டான தோரணை...

பொதுவில் பிராம்மண இளைஞர்களில் இப்படி ஒரு திடகாத்திரம் அசாத்யம். கூடவே பூரியா போட்டு வளர்த்த மாதிரி மீசை. அதோடு கையைக்காலை ஆட்டிக் கொண்டு அவன் பேசிக் கொண்டிருப்பதை ராமச்சந்திரன் ஒரு சில வினாடி நின்று ரசிக்கிறார்.

பின் அவனது அப்பாவும் தனது சம்பந்தியாகப் போகிறவருமான அந்தக் கண்சிமிட்டல்காரரை நெருங்கிப் பணிவாகப் பேச ஆரம்பிக்கிறார்.

''எதுவும் குறைபாடில்லியே?''

''குறையா...சேச்சே! ரொம்பப் பிரமாதம்.''

''காபிதான் கொஞ்சம் சரியில்லை. கொட்டையச் சரியா வறுக்காம அரைச்சிப்பிட்டான் போலிருக்கு.''

''இதெல்லாம் விஷயமான்ன ஸ்வாமின். நிச்சய தார்த்தம் தானே?''

''ஆனா அதையே ஒரு கல்யாணம் மாதிரி நடத் தணும்கறது என் ஆசை. ஒரு பொண்ணு-அவ விஷயத்துல எல்லாத்தையும் பார்த்துண்டா தானே?''

''நன்னா பாரும்... ஆமா ரஞ்சனிகிட்ட அந்த விஷயத்தப் பேசிட்டேளோ?''

சம்பந்தி ஸ்வாமி கண்சிமிட்டல் குன்றாதபடி கேட்க வும், ஸ்பீட் பிரேக்கரில் முட்டிமோதிய டூவீலராட்டம் ஒரு கணம் தடுமாறுகிறார் ராமச்சந்திரன்.



''என்ன சொல்லலியா?''

சம்பந்தியிடம் கணிசமான பதட்டம்.

''சொல்லச் சரியான வேளை வரல அதான்...''

''ஐய்யய்யோ...என்னய்யா இப்படிப் பண்ணிட்டீர். அவகிட்ட சொல்லாத நிலைல பாக்கு வெத்தலை மாத்திண்டுட்டோமே?''

''அதனால என்ன...நான் சமயம் பாத்துச்சொல்லிக் கறேன்.''

''என்னய்யா நீர்...படிச்சுப் படிச்சுச் சொன்னேனே 'முதல்ல இந்த விஷயத்தைச் சொல்லுங்கோ. கோர்ட் ஆர்டரையும் காட்டுங்கோ. அத்தனைக்கும் பிறகு ஒரு பொண்ணுக்கு ஆட்சேபனை இல்லைன்னாதான் என் பிள்ளை தாலிகட்டுவான்னு..''

இப்படிப் பண்ணிட்டீரே...?''

''மெதுவா...மெதுவாப் பேசும். இப்ப என்ன ஆய்டுத்து. நான்தான் சொல்லிக்கறேன்னுட்டேனே..''

''நிச்சயதார்த்தம் முடிஞ்ச நிலைல சொல்லி என்ன பிரயோஜனம். அந்தப் பெண்ணோட விருப்பத்துக்குத் துளிகூடச் சந்தர்ப்பமே இல்லாமன்னா போய்டுத்து.''

''அவ விருப்பம்னு ஒன்னு தனியா கிடையாது ஸ்வாமின். எனக்குத் தெரியாதா நல்லது கெட்டது.''

''இவ்வளவு சொல்றவர் ஏன் முன் கூட்டியே சொல்லலை. இத்தனை நன்னா நடந்த இந்த நிச்ச யத்துல! திருஷ்டி மாதிரி இப்படி ஒரு குறையை வெச்சுட் டீரே...''

இரண்டு பெரியவர்களும் சிலர் திரும்பிப் பார்க்கச் சிலர் புரியாது விழிக்கப் பலர் அவரவர் காரியமாய்

இருக்கும் வீட்டின் வராண்டாவில் அமர்ந்து மும்முரமாய்ப் பேசியபடி இருக்கும் போது அந்த வீட்டின் தனி அறை ஒன்றில் கொஞ்சமாய்த் திறந்திருக்கும் ஜன்னல் வழியாக ரஞ்சனி வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தப் பார்வையில் மாப்பிள்ளைப் பையன் அகப்பட்டிருந்தான்.

அவள் கண்கள் அவனையே சுருட்டி விழுங்கிக் கொண்டிருந்தது. கூடவே அவளது ஸ்னேகிதிகள்.

''ரஞ்சா—சரியான பீமசேனன்டி உன் ஆளு—''

''இவளுக்கு ஏத்த ஆள்தான். உனக்கும் வாச்சிருக்கே ஒரு தயிர்வடை தேசிகன்.''

''வாயமுட்டி...என் ஆள் எலும்புதான். ஆனா மனசுல அவர் ஒரு கோலார்.''

''அவர் கோலாரா இருக்கலாம். மத்த எல்லாமே உன் வரைல கோளாறுதானே?''

''கோளாறா—என்னடி சொல்றே?''

''ராட்சஸ மாமியார், ரவுடி நாத்தனார், பொறாமை பிடிச்ச ஓரகத்திகள், ஒண்டுக் குடித்தனம்—''

ஸ்நேகிதிகளின் பேச்சில் எதெல்லாம் பிரச்சினை என்பதை அவர்கள் பட்டியலிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நல்ல வேளை—இதெல்லாம் ரஞ்சனிக்கு இல்லை. மாமனார் மட்டும்தான். மாமியார் போய்ச் சேர்ந்து விட்டாள். ஒரே ஒரு நாத்தனார். அவளும் ஒரு வடநாட்டுவாசி. நினைத்தால் வந்து போகக் கூடிய தூரத்தில் இல்லை.



மாப்பிள்ளைப் பையனுக்கும் டி.வி.எஸ். குரூப்பில் பர்சனல் ஆபீசர் உத்யோகம். ஆபீசிலேயே வீடு, கார் எல்லாம் தந்திருக்கிறார்கள். வருடச் சம்பளம் லட்சங்களில்...

வாய்க்குமா இப்படிப் பிக்கல் பிடுங்கல் இல்லாதபடி ஒரு வரன்?

நினைத்து நினைத்துப் பூரித்து போகிறாள் ரஞ்சனி.

அவள் அப்படிப் பூரிப்பது அவளது தோழிகளிலேயே ஒருத்திக்குப் பொறாமையைத் தருகிறது.

அவளது கணவன் ஒரு மோட்டார் மெக்கானிக். கிட்டே வந்தால் தலை முதல் காலடி பாகம் வரை இருப்பு வாடை அடிக்கும். அவனது காக்கி யூனிஃபார்மை அடித்துத் தோய்ப்பதற்குள்ளேயே ஆவி ஆலவட்டம் அடித்துவிடும். கஷ்டப்பட்டு ஒரு டி.வி.எஸ். 50-ஐ செகண்ட் ஹாண்டில் வாங்கியிருக்கிறான். அது போடும் சப்தமும், விடும் புகையும்...

அந்தப் பெண் இப்படி ஒரு வரன் தனக்கு மாட்டாமல் போய் விட்டதே என்பதைத் துல்லியமாகக் கண்களில் காட்டிக் கொண்டிருக்கிறாள்.

அப்பொழுதுதான் ரஞ்சனியை ராமச்சந்திரன் அழைத்தபடி உள்ளே பிரவேசிக்கலானார்.

''ரஞ்சா என்னடா பண்ணிண்டிருக்கே?''

''வாங்கோ மாமா...உங்க பொண்ணு ஜன்னல் வழியா மாப்பிள்ளையை சைட் அடிச்சிண்டிருக்கா. நாங்கள்ளாம் அதை ரசிச்சிண்டிருக்கோம்.''

''மாப்ள எப்படி...உங்களுக்கெல்லாம் புடிச்சிருக்கா?''

''சூப்பர் மாமா. ரஞ்சனி யோகக்காரி.''

''நீங்க சொல்றேள். ரஞ்சனி என்ன சொல்றா?''

''ஜொள்ளு விட்டுண்டு நிக்கறதுலையே தெரிய லையா? விட்டா இப்பவே பையனைத் தள்ளிண்டு ஓடிப் போயிடுவா...''

''சந்தோஷம். கொழந்தைகளா செத்த அன்னண்ட போங்களேன். ரஞ்சாவோட சம்பந்தி ஸ்வாமின் செத்த தனியா பேசணுமாம்...''

ராமச்சந்திரன் தடவித் தடவிச் சொல்லி முடிக்கவும் ரஞ்சனியிடம் சொல்ப அதிர்வு. தோழிகளிடமும்—சாதாரணமாக இந்த மாதிரி சமயங்களில் மாப்பிள்ளை பையன்தான் தனியாகப் பேசவேண்டும் என்பான்—இதென்ன ஆச்சரியம்—அப்படி அந்தக் கிழடு பேச என்ன இருக்கிறது?

ஸ்னேகிதிகள் இப்படியான கேள்விகளோடு விலகிக் கொள்ள சம்பந்தி பிச்சுமணி ஐயர் உள்ளில் நுழை கிறார் அவரைப் பார்க்கவும் உடுத்தியிருக்கும் புதுப் பட்டு சரசரக்க பக்தி, பவ்யம் என்று அடங்கிச் சுருங்கு கிறாள் ரஞ்சனி.

ராமச்சந்திரன் அவருக்கு ஒரு நாற்காலியை எடுத்துப் போடுகிறார்.

''சும்மா இருக்கட்டும்... இருக்கட்டும்.''

''இல்ல ஸ்வாமின் உக்காந்து பேசுங்கோ...''

''அட விடுமய்யா... இந்த நிமிஷம் உம்மப் போலத் தான் நானும் இந்த சம்பந்தி மரியாதையெல்லாம் வேஸ்ட்டாயிடப் போறது சும்மா இரும்.''

அவர் ராமச்சந்திரனை அதட்டி அடக்குகிறார். ரஞ்சனிக்கு எல்லாமே ஆச்சரியமாக இருக்கிறது.



''அம்மாடி உன்னண்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும். அதுக்குத்தான் வந்தேன். உன் அப்பா கிட்ட உன் ஜாதகம் வந்தப்பவே சொல்லச் சொல்லி யிருந்தேன். ஆனா அவர் உன்னண்ட சொல்லாம விட்டுட்டார். உனக்கும் விஷயம் தெரியாமலே கல்யாண நிச்சயதார்த்தம் நடந்து முகூர்த்தமும் குறிச்சாச்சு.

நல்லவேளை— செத்த முந்திதான் கூப்பிட்டு விசாரிச்சேன். அவர் எதையும் சொல்லலைங்கறது தெரிய வந்தது. தப்புப் பண்ணிட்டார். நானும் அதைப் பண்ண விரும்பலை...''

அவரிடம் விஸ்தாரமான பீடிகை. ரஞ்சனியிடம் ஏராளமான வியர்வை. இவர் எதைச் சொல்ல இப்படிச் சுற்றி வருகிறார். அவளுக்குச் சாதாரணமாகவே கக்கம் நிறைய வேர்க்கும். இப்பொழுது சொட்டுகிறது. எந்த குண்டைத் தூக்கிப் போடப் போகிறது இந்தக் கிழடு?''

'என் பிள்ளை கல்யாண ராமன் ஏற்கனவே கல்யாணமாகி விவாகரத்தும் பண்ணினவன்மா?''

அவர் பிள்ளையார் தேங்காயாக அந்த நிஜத்தைப் போட்டு உடைக்கிறார்.

ரஞ்சனிக்குள் விலா எலும்பில் மிளகாயை அரைத்துப் பூசின மாதிரி ஒரு வித எரிச்சல்.

அவர் தொடருகிறார்.

''அவன் முதல் கல்யாணம் ஒரு விபத்து மாதிரி நடந்து முடிஞ்சிடித்து கல்யாணமே பிடிக்காத ஒரு பொண்ணை அவ அப்பா, அம்மா என் பிள்ளை கழுத்துல கட்டிவச்சுட்டா. அந்தப் பொண்ணும் பேருக் குத் தாலியக் கட்டிண்டுது. மத்தபடி எந்த ஒரு சந்தோஷமும் அவா வாழ்க்கைல இல்ல.

இப்படியே எத்தனை நாள் போக முடியும்? என் பிள்ளையே அதுக்கு ஒரு முடிவு கட்ட அவகிட்ட பேசினான். கடைசில மியூச்சுவலா விவாகரத்துப் பண்ணிக்கறதுன்னு முடிவாச்சு. ஒரு வருஷம் ஃபேமிலி கோர்ட்டுக்கு நடந்து டைவர்சும் வாங்கியாச்சு. அதுக்கப்புறம் அவனுக்கும் கல்யாண ஆசையே விட்டுப் போச்சு. நான்தான் வற்புறுத்தி உன்னைப் பெண் பாக்கக் கூட்டிண்டு வந்தேன்.

எனக்கு கொள்ளிபோட என் பிள்ளை.

அவனுக்கு ஒரு பிள்ளை வேண்டாமா...? அதுக்குத்தான் இந்தக் கல்யாணம். ஏனோ உன் அப்பா உன்னண்ட இதை எல்லாம் மறைச்சுப்பிட்டார். ஆனா நான் மறைக்க விரும்பல. நீ என்ன சொல்றே?''

பிச்சுமணி அய்யருக்குக் கண்களில்தான் தடுமாற்றம் பேச்சில் அப்படி எல்லாம் இல்லை. அருவிச் சரிவாக இருந்தது அது.

ரஞ்சனியிடம் பேச்சு மூச்சில்லை.

சற்று முன் வரை ஆகாய மேகத்துக்கு நடுவில் அன்னப் பட்சியை விரட்டிக் கொண்டு ஒடியாடிக் குதூகலித்தது போலிருந்தது.

இந்த நொடி தானொரு !இரண்டாம் தாரம் என்கிற நிஜம் வந்து முன்னால் நின்று என்ன சொல்றே? என்று கேட்கிறது.

''யோசிக்க என்னடா இருக்கு... அப்பா எல்லாத்தையும் பார்த்துத்தான் ஒத்துண்டேன். மாப்பிள்ளை தங்கம். அந்த முத கல்யாணம் காச்சல், குளிர் மாதிரி வந்துட்டுப் போன ஒரு சமாச்சாரம்டா. அதப் பெரிசா நினைக்கறது மடத்தனம்.''



ராமச்சந்திரன் இடையில் புகுந்து அவளது மௌனத்தை உடைக்க முயலுகிறார். ஆனால் அவளிடம் இறுக்கம் தளரவேயில்லை. நின்று கொண்டேயிருக்கிறாள்.

எதிலுமே இரண்டாவது பிடிக்காத ஜென்மம் அவள்.

தன் தாவணியை தவிர்க்க முடியாதபடி ஒரு சமயம் வீட்டிற்கு வந்திருந்த அத்தை மகள் கட்டிக் கொண்டு விட அதன் பிறகு அதை அவள் உடுத்தவேயில்லை.

தான்...தன்னுடையது என்பதில் அப்படி ஒரு கிறிஸ்டல் சுத்தம். ஆனால் வாழ்க்கை இப்படியா அவள் முன் ஒரு அடிபட்ட புருஷனைக் கொண்டு வந்து நிறுத்தும்?

நட்புக் கொள்ள மறுக்கிறது மனது

தோழிகள் சிரிக்கப் போவது அப்போதே காதில் கேட்கிறது. ''சோலார் - கோளாறு'' என்று பேசியவர்கள் இது தெரிந்தால் என்னெல்லாம் பேசுவார்கள்.?

தான் எதில் குறைந்தவள்?

இந்த இரண்டாம் தாரமெல்லாம் நொண்டி, முடம், சண்டி, சாம்பிராணிகளுக்குத்தானே...?

நேற்றுக் கூட வீதி விடலைப் பசங்கள் வைத்த கண் வாங்காமல் பார்த்தார்களே..

ரஞ்சா நீ சினிமால நடிச்சா சிம்ரன், கிம்ரன் எல்லாம் அவுட். என்றாளே பக்கத்தாத்து மாமி . அப்பா எதை நம்பி இப்படி ஒரு ஏற்பாடு செய்தார்? அவளுக்கு கேள்விகளின் ஊர்வலம். அழிச்சாட்டியமான ஒரு வகை மௌனம்.

பிச்சுமணி அய்யர் புரிந்து கொள்கிறார். ''பார்த்தேளா உங்க பொண்ணுக்கு இஷ்டமில்ல. அதான் எப்படிச் சொல்றதுன்னு தவிக்கறா. தப்பொண்ணுமில்ல அதுல..'

'இல்ல ஸ்வாமின்...அவ கொழந்த. மறைச்சு வெச்சுச் சொன்னதிலே அதிர்ச்சி அவ்ளோதான். மத்தபடி பெரிசாக் கவலைப்பட ஒண்ணுமில்ல. நான் பாத்துருக்கற மாப்ள தங்கம். அது அவளுக்கும் தெரியும் இல்ல ரஞ்சா...?''

ஊஹூம்.

அவளிடம் பதிலேயில்லை. திரும்பத்திரும்பத் தோழிகள் சிரிப்பதுதான் காதில் விழுகிறது.

''ஏழை பாழையா இருந்தாலும் எம் புருஷன் என்னை மட்டும்தான் தொட்டவர்...''

''என்ன கண்றாவியோ...முதல் இதே வாழ கொடுத்து வைக்கல—இதுல இரண்டாவதுக்கு ஆசை வேற. பாவம் ரஞ்சா அவ தலை எழுத்தைப் பார்த்தியா?''

'ஒரு தடவை தவறினா மூணு தடவை தவறுமாமே! ரஞ்சா கதி என்ன ஆகப்போகறாதா? ஆம்பளைகளுக்கு என்ன வந்தது. ஆயிரம் தாலிகூடக் கட்ட அவா சளைக்கமாட்டா. கழுத்த நீட்ற நமக்குதானே புத்தி இருக்கணும்?'

விதம் விதமான கருத்துக்கள் அவள் மனப் பிராந்தியத்தில் ஒலித்து அடங்குகின்றன. அதன் எதிரொலியாகத் திட சித்தத்தோடு நிமிர்கிறாள். கிளம்பத் தயாராகிவிட்ட பிச்சுமணி அய்யரைப் பார்த்து சொல்கிறாள்.

'சாரி மாமா...எனக்கு இந்த கல்யாணத்துல ஒப்புதல் இல்லை!

## 2

இந்தக் கல்யாணத்தில் ஒப்புதல் இல்லை என்று சொன்ன ரஞ்சனியைப் பேயறைபட்டவராட்டம் பார்க்கிறார் ராமச்சந்திரன்.

''ரஞ்சா... என்னதிது பைத்தியமாட்டம் பேசிண்டு. நான் உண்மையை உங்கிட்ட மறைச்சது தப்புதான். அதுக்காக நடந்த நிச்சயத்தை மறந்து ஒப்புதல் இல்லேங்கிறியே உனக்கே இது நன்னா இருக்கா?''

பதட்டம் வெடிக்க மகளைப் பார்த்து கேட்கிறார். ரஞ்சனியிடம் பதிலில்லை. மாறாகப் புடவை முந்தி அவள் விரல்களில் வதைபடத் தொடங்கியிருக்கிறது.

சம்பந்தி பிச்சுமணி அய்யர் முகத்திலும் கலவரம். ஆனாலும் ஒரு தீர்மானம்.

''சரி ஸ்வாமிகள் நாங்க கிளம்பறோம். ரஞ்சனி விருப்பப்படியே தயவு செய்து நடந்துக்கப்பாரும். எனக்கு ஒண்ணும் வருத்தமில்லை ''

எப்படி பிச்சுமணி அய்யரால் அப்படி பேசமுடிகிறதோ தெரியவில்லை?

''இல்ல ஸ்வாமிகள் நீர் இப்படிப் பேசப்படாது. அவதான் புரியாம பேசறான்னா நீரும் சேர்ந்து அவளுக்கு தோதாப் பேசறீரே... கொஞ்சம் பொறுமையா இரும் ''

''புரியறது ராமச்சந்திரன். உங்க பதட்டம் எனக்குப் புரியறது. ஆனா உண்மையை மறைச்சது உங்க தப்பு. அதுதான் இப்பப் பிரச்சினையா மாற ஆரம்பிச்சிருக்கு

பாதகமில்ல... லக்னப் பத்திரிகை தானே எழுதிருக்கோம். என் பிள்ளை என்ன தாலியா கட்டிட்டான்?

''ஐய்யோ பெருந்தன்மை காட்ட இதுவா இடம்? ஊரறிய நிச்சயம் நடந்து முடிஞ்சாச்சு. நடந்து அரை மணி ஆகல. அதுக்குள்ளையே அதுக்கு ஒரு பாதகம்னா என்னால நினைச்சுக் கூட பார்க்க முடியலையே.''

''ஒரு பாதமும் இல்லை...ரஞ்சனிக்கு என்ன வேற ஒரு நல்ல மாப்ளப் பையன் கிடைக்காமலா போயிடுவான்?''

பிச்சுமணி அய்யர் சாதாரணமாகப் பேசுகிறார். அப்படியே துண்டை உதறியபடி வெளிக்கிளம்பும் தோரணை வேறு...

ரஞ்சனி காதில் இரு கிழடுகளின் பேச்சும் விழுந்த மாதிரியே தெரியவில்லை. மாறாக முகத்தில் கடுவன் பூனையின் உருமாற்றங்கள்.

ஓடி வருகிறாள் தர்மாம்பாள் அம்மா.

''என்னடி இது இப்படிப் பண்ணிப்பிட்டே... ரஞ்சா சரின்னு சொல்லுடி...'' என்று அவள் அவளைப் பிடித்து உசுப்ப எத்தனை மூடி மறைக்கப் பார்த்தும் விஷயம் அந்த அறைக்கு வெளியில் கசிந்து பரவுகிறது.

எல்லோரிடமும் அதிர்ச்சிப் பிரவேசம். வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த மாப்பிள்ளை கல்யாண ராமன் அதிகமாகவே பாதிக்கப்பட்டு அதன் எதிரொலிகளை முகத்தில் காட்டுகிறான்.

இனி ஒரு நிமிடம் கூட அங்கு இருக்கக் கூடாது என்று முடிவு கட்டியவனாக அப்பா பிச்சுமணி அய்யரைக் கூட மறந்து தான் வந்த காரில் ஏறுகிறான்.



ஸ்டார்ட் செய்து விட்டவனை ஓடி வந்து மறிக்கிறார் ராமச்சந்திரன்.

''மாப்ள மாப்ள செத்த இருங்கோ. எல்லாம் என்னால வந்தது. என் பொண்ணை நிச்சயம் நான் சமாதானப்படுத்திடுவேன். நீங்க கிளம்பாதீங்கோ. அப்புறமா என்னால தாங்கமுடியாது. செத்த நில்லுங்கோ... காரை நிறுத்துங்கோ...

எச்சில் தெளிபடப் பதறி வெடிக்கிறார். பின்னாலேயே மச்சினன், சகோதரன், ஷட்டகன் என்று உறவுக் கூட்டம்.

''ஆமாம் சார் ப்ளீஸ் கொஞ்சம் நில்லுங்கோ. இதைப் பெரிசு படுத்த வேண்டாம். ப்ளீஸ்... ப்ளீஸ்...''

அவன் அவர்களை சற்றுப் பெருமூச்சுடன் ஏறிட்டான். கார்ச் சாவியின் காதைத் திருகி எஞ்ஜினையும் நிறுத்தினான்.

''இதுக்கு மேல இங்க நான் இருந்தா எனக்கு அது மரியாதையா நீங்களே சொல்லுங்கோ...'' என்று எதிர்க் கேள்வி கேட்டான்.

''இதுல மரியாதை பங்கம் எங்க வந்தது? அப்படியே வந்தாலும் கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங்கோ... ப்ளீஸ்''

''போதும்... இதுக்கு முந்தி அப்படிப் பெரிய மனசு பண்ணித்தான் நான் இப்ப இங்க பாதிக்கப்பட்டிருக்கேன். எனக்குக் கல்யாண ராசியே இல்லைங்கறது தெரிஞ்சுபோச்சு. சில விஷயங்களை ஃபோர்ஸ் பண்ணக் கூடாது. இதுவும் அப்படித்தான். நல்ல வேளை தாலி கட்றதுக்கு முந்தியே இப்படி ஆனதுக்காக நான் அந்த கடவுளுக்கு நன்றி சொல்லிக்கறேன். ப்ளீஸ் நகருங்கோ...'':

அவனது தீர்மானமான பேச்சு அவர்களை ஓரம் கட்டுகிறது. அவனது காரும் கிளம்புகிறது. நண்பர்கள் உறவினர்கள் பார்த்துக் கொண்டிருக்க அது தெரு முக்கில் வளைந்து மறைந்தும் போகிறது.

பிச்சுமணி அய்யர் வாசலுக்கு வருகிறார்.

இடி விழுந்த நிலமாட்டம் பிளந்து போய்த் தூணை ஒட்டி நின்றபடி இருக்கும் ராமச்சந்திரனை ஆறு தலாய்த் தட்டிக் கொடுத்து விட்டு எதிரில் ஓரம் கட்டி இருக்கும் ஆட்டோவில் போய் ஏறி அமருகிறார். கூடவே அவரது உறவினர்கள் சிலரும்...

ஆட்டோ வளைந்து அந்த வீட்டு வாசல் தாண்டும் போது ஒரு நிமிஷம் என்றதால் ஆட்டோ நிற்கிறது. சுரத்தில்லாமல் நிற்கும் ராமச்சந்திரனை எட்டிப் பார்த்தபடி சொல்கிறார்.

'மிஸ்டர் ராமச்சந்திரன் நான் இன்னிக்கு நடந்த நிச்சயத்தை அறுத்துக்கலை. ஒதுங்கி வழி தான் விட்டுருக்கேன். ஒருக்கால் உங்க பொண்ணு மனசுமாறி மனசாரச் சம்மதிச்சா இந்தக் கல்யாணம் நடக்கும்-எத்தனை வருஷமானாலும் சரி... ஆட்டோவ எடுப்பா...''

அந்த வீட்டின் மயான அமைதியைத் தவறி விழுந்த காபி தம்ளர் சப்தம் கெடுக்கிறது.

ராமச்சந்திரனின் கைகள் நடுங்கித் தடுமாறியதால் வந்த வினை.

கிட்டத்தட்டப் பதினைந்து நாட்கள் ஓடி விட்டன. இருந்தும் அவர் பாதிப்பில் இருந்து மீண்டிருக்க வில்லை. ஆணாக இருப்பதால் சவரம் செய்யப்படாத தாடிமீசையில், வாரப்படாத தலைமுடியில் அவரது சோகம் பளிச்சென்று தெரிகிறது.



பெண்கள் எப்படி இப்படிச் சோகத்தை வெளிக் காட்ட முடியும்? அதனால் தர்மாம்பாளிடம் இப்படி அடையாளங்கள் இல்லை. ஆனால் அவர்களுக்கு கண்ணிரண்டும் போதுமே...

அதில் அந்த பாதிப்பு புதைந்து கிடப்பதும், கண்ணை ஒட்டிய கறுப்பு வளையத்தில் அது விரவிக் கிடப்பதும் நன்கு தெரிகிறது.

ரஞ்சனி எதைப்பற்றியும் கவலையின்றி புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறாள். ஒரு பெரிய அநீதியைத் தவிர்த்து விட்டதாகத்தான் நினைத்துக் கொண்டிருக் கிறாள்.

எதிரில் டி.வி. அதிகம் சத்தம் போடாதபடி ஓடிக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது டி.வி. யையும் ஒரு பார்வை பார்த்துக் கொள்கிறாள். அவளது அந்தச் செய்கை பிச்சுமணி அய்யரைப் பிசைந்ததோ என்னவோ? பிரஷர் ஏறியவராட்டம் கத்த ஆரம்பித்தார்.

''தர்மா இது என்ன வீடா இல்லை சத்ரம் சாவடியா?'' ரஞ்சனி திரும்பிப் பார்க்கிறாள். எழுந்து போய் டி.வியை அணைக்கிறாள். புத்தகத்தையும் விட்டெறிகிறாள்.

மாடிப்படிகளில் ஏற ஆரம்பிக்கிறாள்.

''நான் பொண்ணைப் பெக்கலை...பிசாசைப் பெத்துருக்கேன்'' என்று திரும்ப பலமாகக் கத்துகிறார் ராமச்சந்திரன்.

''ஐய்யோ மொள்ள...அக்கம் பக்கம் திரும்பிப் பாக்கப்போறா...'' தர்மாம்பாள் இடையிட்டுத் தணிக்கப் பார்த்தும் இயலாது போகிறது.

''பாக்கட்டுமே... நன்னாப் பாக்கட்டும்... இனி என்ன இருக்கு? அதான் எல்லாம் முடிஞ்சு போச்சே.

எனக்கு இன்னும் சாவு வரலை. அது ஒண்ணுதான் பாக்கி...''

''கொஞ்சம் புலம்பாம இருங்களேன்...'

''எப்படிடீ இருக்கறது? இனி எவண்டி இவளைக் கட்டுவான். இந்தக் காலத்துல நல்ல மாப்பிளை கிடைக் கறது என்ன லேசுப்பட்ட விஷயமா? எவ்ளோ கஷ்டப் பட்டு அந்த வரனைப் பார்த்தேன். இப்படிப் பண்ணிப் பிட்டாளோ? இனி எவன் வருவான். இது சரியான சண்டிக்குதிரைன்னுல்ல எல்லாரும் சொல்வா.''

''இதையே எத்தனை தடவை சொல்வேள். கேட் டுக் கேட்டு காது புளிச்சுப் போச்சு தப்புப் பண்ணினது நீங்க. அவளை ஏன் சொல்றேள்?''

''நீயும் இப்ப அவ கட்சியா...பேசுடி பேசு... நா ஒண்ணும் மிட்டா மிராசு கிடையாது. தெரியாத்தனம பட்டணத்துல இந்தவீடும் ஏதோ பென்ஷனும் வந்துண் டிருக்கு. நமக்கெல்லாம் ஸ்டேட்டஸா ஒரு இட கிடைக்கவே கிடைக்காதுடி. என் பொண்ணு கஷ்ட படக்கூடாது. காய்கறி வாங்கக் கூட கார்ல போ ணும்னு நினைச்சு ஏற்பாடு செஞ்சேன் பாரு... எனக் இதுவும் வேணும்-இன்னமும் வேணும்.''

''விடுங்கோ... அதெல்லாம்தான் முடிஞ்சுபோச்சே வேற இடம் பாருங்கோ...''

''ஐய்யோடி... இன்னொரு இடமா? அதுல என் ஒட்டையைப் பார்ப்பாளோ உன் பொண்ணு''

கீழே அப்பாவும் அம்மாவும் அடித்துக் கொள்வ மாடியில் ரஞ்சனி காதிலும் விழுந்து கொண்டுதானிரு கிறது. கண்ணிரண்டிலும் சிந்தட்டுமா என்று வின்ன பித்த நிலையில் நீர்த்துளிகள்.



மனதில் குமுறலான குமுறல்.

'இந்தப் பெற்றோர்கள் மட்டும் ஏன் புரிந்து கொள்ளவே மறுக்கிறார்கள். நான் என்ன பெரிதாகத் தவறு செய்து விட்டேன். கல்யாண வாழ்க்கையைப் பொறுத்த மட்டில் பிரத்யேக அபிப்ராயங்கள் ஆசாபாசங்கள் பெண்ணுக்குக் கூடவே கூடாதா?

எப்பொழுதும் அமைவதைப் பொறுத்தே அவள் வாழ்க்கையா... அமைத்துக் கொள்ள அவளுக்கு உரிமையே கிடையாதா?

கேள்விகளை அடுக்கிக் கொண்டு விடைக்குத் தவிக்கும் அவளுக்குள் புதிதாக திடும்மென ஒரு முடிவு. சட்டென்று எழுந்தாள். விறுவிறுவென்று கீழிறங்கினாள். அப்பா எதிரில் போய் நின்றாள்.

''அப்பா இனி என் கல்யாணம்பத்தி நீங்க கவலைப் படாதீங்கோ...அது இனி என் கவலை. எனக்கான மாப்பிளை நானே தேடிக்கறேன்—தேடிக்கறது மட்டுமில்ல அந்த வாழ்க்கைல நான் சந்தோஷமாவும் வாழ்ந்து காட்றேன். அதுல தோத்துட்டா தூக்குல தொங்கிடுவேன் இது சத்யம்...!''

ரஞ்சனி எந்தத் தைரியத்தில் இப்படிப் பேசுகிறாள். வாழ்க்கையைப் பற்றித் தெரிந்துதான் பேசுகிறாளா?

ராமச்சந்திரன் விக்கித்துப் போய் விட்டார்!

ஆபீஸ் கிளம்பிக் கொண்டிருந்தான் கல்யாண ராமன். காபி போட்டு எடுத்து வரும் அப்பாவை டை-கட்டியபடியே பார்த்தான். பேசவும் செய்தான்.

''ஏம்ப்பா நான் போட்டு சாப்டுக்க மாட்டேனா?''

''இருக்கட்டும்ப்பா... நான் என்ன வெட்டியா முறிக்கறேன்''

''தேங்க்ஸ்ப்பா... சமையலையும் நானே பண் றேன்னு ஏதாவது பண்ணி வைக்காதீங்கோ. ஒரு மாமியை ஏற்பாடு செய்திருக்கேன்.''

''எதுக்குப்பா...நான் எதுக்கு இருக்கேன்? ஆத்துல இந்தக் காரியம் கூடப் பண்ணலைன்னா எனக்குப் பைத்தியமே பிடிச்சுடும்.''

''பிடிச்சா பிடிக்கட்டும் பேசாம இருங்கோ. நீங்க சிரமப்படக்கூடாது.''

''இதாடா சிரமம்? மாமியும் வேண்டாம் கீமியும் வேண்டாம். அவசியம் ஒரு பொண்ணுதான் இந்த ஆத்துல சமைக்கணும்னா எனக்கு ஒரு பொண்ணைப் பார். நான் கல்யாணம் பண்ணிக்க ரெடி...''

காபியை விளாவிக் கொண்டு அவர் பேசியதில் அவனுக்குள் சிரிப்பின் பெருக்கம். கூடவே சிந்தனையின் சுருக்கமும்.

''எங்க என்னை பண்ணிக்கச் சொன்னா நான் கத்துவேனோன்னு நீங்க உங்களுக்குச் சொல்லிக்க றேளாப்பா?'' சரியாகவே கேட்கிறான்.

''இல்லடா கல்யாணம்... உனக்கு நான் சொல்ல மாட்டேன். அது பகவான் சித்தம். நான் செஞ்ச இரண்டு முயற்சியும்தான் பட்டுப் போச்சே?''

அவர் காபியை நீட்டுகிறார். கண்களில் ஈரம்பட... அவனை அது என்னவோ செய்கிறது. எதுவும் பேசாமல் வாங்கி விழுங்குபவன் மெல்ல அவர்முன் கமறியபடி கேட்க ஆரம்பித்தான்.

''பொண்ணாத்துல இருந்து ஏதாவது தகவல் வந்த தாப்பா?'' அவர் உடனடி ஆச்சரியத்தை அவனுக்குக் காட்டியபடி ஏறிட்டார்.

''இல்ல கல்யாணம்... எதுக்கு கேக்கறே?''

''இல்ல சும்மா கேட்டேன்.''



''சும்மாவா... உனக்கு அந்தப் பொண்ணு மேல கோபம் இல்ல?''

''எதுக்குப்பா... அவ துணிச்சல் தீர்மானம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''பிடிச்சிருக்கா?''

''ஆமாம்ப்பா... சின்ன பழி பாவத்துக்கெல்லாம் பெரிசா அஞ்சறவா பொண்கள். நூத்துக்குப் பத்து கல்யாணம்தான் அவாளோட முழு விருப்பப்படி நடக்கறது. மத்ததெல்லாம் பெரியவா விருப்பம். அப்புறம் தானா அமையறது இப்படித்தானே?''

''அதனால...''

''அந்தப் பொண்ணு விருப்பப்படி அவளுக்கு கல்யாணம் நடக்கணும்ப்பா...''

''அது அவா கவலை கல்யாணராமா...''

''வாஸ்தவம்தான். இருந்தாலும் நடந்த அந்த நிச்சயதார்த்தம் அந்தப் பெண்ணுக்கு ஒரு தடையா இருக்குமோன்னு தோன்றது.''

''நிச்சயம் தடைதான். அதுல சந்தேகம் என்ன?''

''என்ன பாவம் பண்ணினேனோ எனக்குத்தான் கல்யாண வாழ்க்கை சரியா அமையல. இந்த நிலையில நான் குறுக்க பூந்து அவளுக்குத் தடையாயிட்டேனேப்பா...''

''நீ என்னப்பா சொல்றே... நீ எங்க தடையானே? அந்தப் பெண்ணோட பிரத்யேக ஆசைன்னா எல்லாத்தையும் தடைப்படுத்தித்து...?''

''இருக்கலாம். அதுல தப்பில்லையே.''

''உன்னண்டையும் தப்பில்லையே...''

யார்மேல தப்புங்கற ஆராய்ச்சிய விட்டுட்டு அந்தப்பொண்ணு கல்யாணத்துக்கு உதவினா என்ன?''

கல்யாணராமன் ஒரு புதிய கோணம் காட்டிப் பேசியதில் பிச்சுமணி அய்யரிடம் சிலிர்ப்பு.

# 3

சிலிர்ப்புக் கலையாதபடி தன்னைப் பார்க்கும் அப்பாவைப் பார்க்கிறான் கல்யாணராமன். அவரது சிலிர்ப்பும், பார்க்கும் விதமும் அவனைச்சற்று நெருடு கிறது.

''என்னப்பா அப்படிப் பாக்கறேள்?''

''வேற எப்படிப் பாக்கறது கல்யாணராமா— உன்னைப் பாக்க எனக்குப் பெருமையா இருக்குடா...''

''என்னப்பா இது பெரிய வார்த்தையெல்லாம் சொல்லிண்டு...''

''பெரிய குணத்தைப் பெரிய வார்த்தைகளால தானே பாராட்டியாகணும்?''

''சரிப்பா...என் முடிவுல ஒண்ணும் தப்பில்லையே முதல்ல அதுக்குப் பதில் சொல்லுங்கோ...''

''இல்லப்பா—ரொம்ப நல்ல முடிவுதான். ஆனா செயல்படுத்த முடியும்னு நினைக்கறே?''

''ஏம்பா முடியாது—?''

''எப்படிப்பா முடியும்? உன்னையே வேண்டாம்னு சொன்ன அந்தப் பொண்ணு உன் உதவிகளைத் தானா ஏத்துக்கப் போறா? அப்படியே ஏத்துக்கறதுன்னாலும் என்ன மாதிரி உதவிகளை உன்னால செய்ய முடியும்—?''



ஒரு பேச்சுக்காக எல்லா விதமான உதவிகளையும் நீ செய்யறே—அந்த பொண்ணும் ஏத்துக்கறான்னே வெச்சிப்போமே...உதவி செய்ய நீயார்னு அவளுக்கு வரப்போற புருஷன் கேக்காம இருப்பானா?

கேள்விகளாய் அடுக்கும் பிச்சுமணி அய்யர் சற்றே அவனைக் கூர்ந்து பார்த்துவிட்டுச் சிரித்தபடி ''வேலில போற ஓணானை எடுத்து விட்டுண்ட கதையாயிடும் கல்யாணராமா. போய் ஆகற காரியத்தப் பாரு. நம்மால முடிஞ்சதெல்லாம் பிரார்த்தனைதான். அதுதான் சரியும் கூட.''

என்று நறுக்குத் தெரித்த மாதிரி பேசிவிட்டு நகர்ந்து கொள்கிறார். அவனும் கசங்கின முகத்துடன் ஆபீஸ் கிளம்ப ஆரம்பித்தான்.

கார் கிளம்பும் சப்தம் கேட்டு எட்டிப் பார்ப்பவர் பெருமூச்சு விடுகிறார்.

கல்யாணராமன் என்று பெயரை வைத்து விட்டு பிரம்மச்சாரி ராமனாய் அவனைக் காலம் வைத்திருப் பதன் நிமித்தம் மனதில் துளி பிசைவு.

கண்களிலும் ஜலக்கூடு.

'பகவானே...தன்னைத் தூஷிச்ச பொண்ணுக்குக் கூட நல்ல வாழ்க்கை அமையணும். தான் தடையா இருந்துட்டோமேன்னு நினைச்சுக் கவலைப்படற ஒரு பிள்ளைக்குக் கல்யாணப் பிராப்தில மட்டும் ஏன் இத்தனை குறை? உனக்கே இது நியாயமா?'

மனதில் தெய்வங்களிடம் கேள்வி எழுப்பி விட்டுக் கண்களை மூடிக் கொண்டு அப்படியே நாற்காலியில் விழுகிறார்.

வாழ்க்கை ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றைக் கொடுக்கிறது. அதிலும் சிலருக்குச் சீக்கிரமாக—சிலருக்

குத் தாமதமாக—சிலருக்கோ எதையும் அளிப்பதே இல்லை! எல்லாம் பெற்றவனும் இல்லை—எதையும் பெறாதவனும் இல்லை.

அதன் கண்ணாமூச்சி விளையாட்டில்தான் எத்தனை எத்தனை திருப்பங்கள்?

இன்டர்காம் சிணுங்கியது. கல்யாணராமன் எடுத்த போது காதில் பாய்ந்தவர் மேனேஜிங் டைரக்டர்.

''மிஸ்டர் கல்யாணராமன் கொஞ்சம் என் ரூமுக்கு வரமுடியுமா?''

அழைப்பைத் தொடர்ந்து பறந்து செல்லாக் குறையாக அவர் முன் போய் நின்றான். அங்கே ஜெனரல் மேனேஜர் மல்லிகார்ஜுனாவும் இருந்தார்.

''உக்காருங்கோ—''

''தேங்க்யூ சார்...''

''புது பிளான்ட் விஷயமாப் பேசலாம்னு...உங்க ஒபீனியன் படிச்சேன். புது பிளான்ட்டுக்குக் கம்ப்யூட்டர் செக்ஷனுக்கு ஆர்ட்னரி அண்டர்போஸ்ட் கிராஜுவேட்ஸை எடுத்து அவங்களைக் கம்ப்யூட்டர்ல ட்ரைன் பண்ணி வெச்சுக்கலாம். சம்பளம் சலுகைங்கற வகையறால நைன்பர்சன்ட் வரை மிச்சப்படுத்தலாம்னு சொல்லியிருக்கீங்க. ஐ திங்க் இட் ஸ் எ குட் ஐடியா.''

''ஆமாம் சார்—கம்ப்யூட்டர்ல போஸ்ட் கிராஜுவேட் முடிச்சு டிப்ளமா வாங்கியிருக்கறவன் எக்ஸ்பீரியன்ஸ் ஆன கையோட வேற வேலைகளுக்கு ஜம்ப் ஆகச் சான்ஸ் இருக்கு. அண்டர் போஸ்ட் கிராஜுவேட்ஸுக்கு வாய்ப்பே இல்லை. நம்மகிட்டையே இருப்பாங்க. கூடவே அவங்களை மோட்டிவேட் பண்ணினதுக்காக ஒரு ரிச்ஃபீலிங்கும் அவங்களுக்கு இருக்கும். அது கம்பெனி மேல லாயல்டியா கன்வெர்ட் ஆகும்.''



''நிச்சயமா—ஆனா அண்டர்போஸ்ட் கிராஜுவேட்ல நல்ல டேலன்டடிஸ் கிடைக்கணுமே?'

''அதை இன்டர்வியூ பண்ணும்போது கண்டுபிடிச்சுடலாம் சார்...''

''உங்களுக்கு நம்பிக்கை இருக்கா?''

''நிறைய்ய...''

''அப்ப பிரஸ்சுக்குக் கொடுத்துடுங்க. நீங்களே செலக்ட்டும் பண்ணுங்க. பைதபை அதுல எக்ஸ்ட்ராட்னரியா யாரும் இருந்தா நம்ம நியூயார்க் டிவிஷனுக்குக் கூட எடுத்துக்கலாம்.''

''ஃபன்டாஸ்ட்டிக் சார்—''

''ஓ.கே. டூ இட் இம்மிடியட்லி. ஆல்தபெஸ்ட்'' விஷயம் வாழைக்காய் சீவினது போலச் சட்டென்று முடிந்து போனது. கிளம்பக் காலெடுத்தவனை ''ஒன் செகண்ட்'' என்று தடுக்கிறார் எம். டி.

''யெஸ் சார்—''

''வாட் அபவுட் யுவர் பெட்ராத்தல்...'' அவர் அவன் நிச்சயம் பற்றிகேட்ட கேள்வி முன் அவன் மிடறு விழுங்கினான்.

''நானும் கேள்விப்பட்டேன். இப்படியும் பெண்கள் இருக்காங்களா?''

''என்ன கேள்வி சார் இது... இது இன்டர்நெட் யுகம். பெண்கள் நல்ல சுதந்திரத்தோடதான் எதையுமே அப்ரோச் பண்றாங்க. பர்ட்டிகுலர்லி என் பெட்ராத்தல்ல தப்பு அந்த பொண்ணுமேல இல்ல. அவங்க அப்பா பேர்ல...''

"இருக்கலாம்...அது எனக்குப் பெரிசா தெரியல... "இருக்கலாம்...அது எனக்குப் பெரிசா தெரியல. உங்ககிட்ட என்ன குறையப் பார்த்தா அந்த பெண்..."

எம்.டி. இத்தனை பர்சனலாகக் கேள்விகளை இதுவரை கேட்டதோ பேசியதோயில்லை...

ஆச்சர்யமூட்டுகிறார்.

அவனும் தடுமாறி வழிகிறான்.

ஜெனரல் மேனேஜரோ சற்று நெளியத்தான் செய்கிறார்.

"இட்ஸ் ஆல் ரைட்...அவ இல்லேன்னா இன்னொரு பொண்ணு மிஸ்டர் கல்யாணராமன். டோன்ட்ஒர்ரி..."

"தேங்க்யூ சார்..." அவன் அங்கிருந்து நகர்ந்தான்.

எம்.டி.யின் பார்வை ஜி.எம். மல்லிகார்ஜுனா பக்கம் திரும்புகிறது. 'மிஸ்டர் மல்லிகார்ஜுனா வாட் யு திங்க் அபவுட் கல்யாணராமன்."

"நைஸ் கை சார்."

"நல்ல எனர்ஜெடிக் பர்சனாலிடி. குட் ஹார்ட் ஆல்சோ."

"ஆமாம் சார்..பட் கல்யாண ராசிதான் இல்லை."

"ப்ச்ச்சி..."

அந்தப் பெரிய மனிதர்கள் கூட அவனுக்காக வருந்தினார்கள். ஆனால் அவன் மனதிலோ வேறு மாதிரி சிந்தனைகள்.

ஒரு ஆணுக்கே இத்தனை வருத்தம் ஏற்படுமானால் பெண்ணுக்கு இதைப்போல எத்தனை மடங்கு ஏற்படும்? கேள்விச் சுமையோடு சில வினாடிகள் அல்லாடிவிட்டு அசிஸ்டெண்ட் ரங்கராஜைப் பார்க்கிறான்.



"யெஸ் சார்..."

"ரங்கராஜ்... நம்ம கிட்ட ஜாப் அப்ளிகேஷன்ஸ் இப்ப எவ்வளவு இருக்கும்?"

"இருக்கும் சார்—எப்படியும் நாலாயிரம் அஞ்சாயிரம் தேறும்."

"அதுல அண்டர் போஸ்ட் கிராஜுவேட்ஸ் அப்ளிகேஷன்ஸ் எவ்ளோ இருக்கும்—?"

"சரி பாதி இருக்கும் சார்..."

"எடுங்களேன்."

அடுத்த முப்பதாவது நிமிடத்தில் அவ்வளவு அப்ளிகேஷன்களும் அவன் டேபிள் மேல் குவிக்கப்பட்டது. பிரஸ்சுக்கு வான்டட் காலத்துக்கு அனுப்பும் அவசியமே ஏற்படாது போல தோன்றியது.

அப்ளிகேஷன்களை எடுத்துத் தூசு தட்டும்போது சில அப்ளிகேஷன்களிலேயே போட்டோவோடு தென்பட்டது ரஞ்சனியின் அப்ளிகேஷன்.

சற்றுத் தூக்கியடித்தது.

இவளென்ன வேலைக்கு அப்ளிகேஷன் போட்டிருக்கிறாள்? எதற்கு—? தேதியைப் பார்த்தான். போன வாரம்தான் போட்டிருக்கிறாள்.

அப்ளிகேஷனைப் பார்த்ததில் அது ஒரு ஜெராக்ஸ் நகல் போல தெரிந்தது. அப்படியானால் நிறைய அப்ளிகேஷனை ஜெராக்ஸ் எடுத்து, அனுப்பும்கம்பெனி அட்ரஸை மட்டும் பேனாவில் எழுதி அனுப்பியிருக்கிறாள்.

எங்கிருந்து வேலை கிடைத்தாலும் சரி என்கிற முடிவில் இருக்கிறாள் போலும்?

கல்யாணராமன் முகத்தில் சிந்தனை மின்னல். காலையில்தான் இவளுக்கு உதவ வேண்டும் என்று ஆசைப்பட்டோம். அப்பா கூட முடியாது என்றார். ஆனால் மதியமே அதற்கான வாய்ப்பு கண்ணடிக்கிறதே! அவன் மனதில் சந்தோஷமாக ஒரு பூ பூக்கத் தொடங்கியது!

இன்டர்வியூவின் போது கல்யாணராமனை அவள் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

சரி இந்த வேலை கிடைக்கப் போவதில்லை என்று தீர்மானித்தபோது அப்பொழுதே அப்பாயிண்ட்மென்ட் ஆர்டரைத் தந்து அவளை அசத்தினான் கல்யாணராமன்.

ஆனால் அவளுக்குள் வேறு விதமாகவும் எண்ணங்கள். அதை அவள் அவனோடு தனியாகப் பேசும் சமயம் சொல்லவும் செய்தாள்.

"எனக்கு வேலை போட்டுக் கொடுத்து என் மனசை மாத்தப் பாக்கறேளா?"

"சத்யமா இல்ல ரஞ்சனி."

"என்னால நம்பமுடியல. என் மேல கோவிச்சுண்டு அன்னிக்கு உங்கப்பாவைக் கூடக்கூட்டிக்காம சர்ருன்னு கிளம்பிப் போனவர்தானே நீங்க..."

"உன் மேல கோவிச்சுண்டு இல்ல ரஞ்சனி. என் விதி மேல கோவிச்சுண்டுன்னு சொன்னாதான் அது சரி. உன்மேல எனக்கு கோபமேயில்லை."

"எப்படிக் கோபமில்லாம போகும்...போற வர்றவாள்ளாம் என்னைக் கரிச்சுக்கொட்றா. இத்தனைக்கும் அவாளுக்கு பாதிப்பு ஒண்ணும் இல்ல. ஆனா உங்களுக்கோ பயங்கர பாதிப்பு கோபமில்லேன்னா எப்படி?"



"உனக்கு எப்படிச் சொல்லி புரியவைப்பேன். என்ன நம்பு. இப்பகூட உனக்கு வேலை கிடைக்கக் காரணம் உன் தகுதிதான். நான் காரணம் இல்ல. வேணும்னா உனக்குத் தாமதமில்லாம வேலை கிடைக்க உதவி செய்திருக்கேன்னு சொல்லலாம்."

"சரி... அதை எதுக்கு நீங்க செய்யணும்."

"ஒரு அனுதாபம் தான்."

"எனக்கு என் மேலே அனுதாபப்பட்றவாளைக் கண்டாலே பிடிக்காது. நான் என்ன நொண்டியா மொடமா?"

"நொண்டி மொடத்தப் பார்த்துதான் அனுதாபப் படணுமா... சுயமா முடிவெடுத்து வாழ நினைக்கற தைரியமான பெண்களைப் பார்த்து சமூகமே ஒரு மாதிரிப் பேசும் போது நான் சரியாப் புரிஞ்சுண்டு இப்படி இருக்கேசமூகம்னு அனுதாபப்பட்றது தப்பா—"

"அப்ப அனுதாபம் என் பேர்ல இல்ல .. என்னைச் சுற்றி இருக்கறவா பேர்ல... அப்படித் தானே?"

"உன் பேர்லையும் உண்டு தெரிஞ்சோ தெரியாமலோ நமக்கு நடந்த நிச்சயதார்த்தம் நின்னு போயிடுத்து. நானும் அதுக்கு ஒரு வகைல காரணமா இருந்துட்டேன். இந்த நிலைல உனக்கு ஒரு கல்யாணம் அத்தனை சீக்கிரமா நடக்கும்னு நான் நம்பல. ஏற்கனவே ஒரு பொண்ணு என்னைக் கல்யாணம் பண்ணிண்டு இப்ப விவாகரத்துப் பண்ணிட்டுத் தனி மரமா நிக்கறா. நீ கல்யாணம் பண்ணிக்கலையே தவிர கிட்டத்தட்ட நீயும் தனி மரம்தான். உனக்கொரு கல்யாணம் ஆனாதான் எனக்கு மனசு சமாதானமாகும். அது எப்ப நடக்குமோ எனக்குத் தெரியாது. குறைஞ்சபட்சம் ஒரு வேலை கிடைக்க உதவி செய்து உனக்குப்

பொருளாதார ரீதியாக உதவி செய்ய நினைக்கறது தான் தற்சமயம் என் கையில இருக்கற ஒண்ணு. அதைத் தான் செஞ்சிருக்கேன். இதுல தப்பென்ன?'' அவன் சளைக்காது சொன்ன பதிலைத் தொடர்ந்து அவள் அவனை ஆச்சரியமுடன் பார்த்தாள். அவன் பொய் பேசுகிற மாதிரித் தெரியவில்லை, ''தேங்க்ஸ்'' என்றபடி அந்த அப்பாய்ன்ட்மென்ட் ஆர்டரை எடுத்துக் கொண்டாள்!

## 4

அப்பாயின்ட்மென்ட் ஆர்டரை வாங்கிக் கொண்ட ரஞ்சனியைக் கல்யாணராமனும் நிறைந்த நெஞ்சோடு பார்த்தான்.

''காலைலதான் உங்களுக்கு எதாவது உதவணும்னு நினைச்சேன். அப்பா கூடப் பரிகாசம் பண்ணினார். ஆனா மனசார நினைச்சதாலேயே அது இப்ப நடந்துடுத்து'' - அவன் சற்றுச் சிலிர்த்தான்.

''அப்ப மனசார நினைச்சா எதுவும் நடந்துடுமா?'' - அவள் உடனே நறுக்கினாள்.

''டெஃபனட்டா... ஆனா அந்த எண்ணம் ரொம்ப நோபிலா இருக்கணும்.''

— அவள் அதைக் கேட்டுச் சிரித்தாள். அதையே அசைபோட்டபடி அங்கிருந்து நகர்ந்தாள்.

அவளுக்கான சீட்டைக் காட்டி அவள் சம்மதித்ததன் பேரில் அன்றே அவளை அதில் உட்கார்த்தியும் வைத்தான் கல்யாணராமன்



அப்பாயின்ட்மென்ட் ஆர்டரில் ஸ்டார்டிங் சேலரியே மூவாயிரம் என்று இருந்து அது அவளை சற்று மிதக்க வைத்தது. ஆறுமாதம் ட்ரெயினிங் பீரியட். அதன் பின் புரபேஷன், அப்போது இன்னும் இரண்டாயிரத்துச் சில்லரை ஏறும். அதன் பின் சம்பளம் கிட்டத்தட்ட எட்டாயிரத்தைத் தொட்டுவிடும்.

நினைக்க நினைக்கச் சுகமாக இருந்தது.

பலமான ஆதாரம் கிட்டி விட்டதுபோல பலமாகவும் இருந்தது.

''வேலைக்குப் போய்ச் சம்பாதிக்க வேண்டும் என்று மனதார நினைத்தேன். அதனால்தான் கல்யாணராமன் சொன்னது போலக் கை கூடிவிட்டதா?''

இனி யார் தயவும் தேவையில்லை. இந்த வேலை இதன் சம்பளம் நூறு மாப்பிள்ளைகளைத் தன் பக்கம் திருப்பும்.

அப்பாவின் தொச்சும் இனிக் குறையும். போட்ட சபதத்தில் இருந்தும் ஜெயித்து விடலாம்.

மனதில் கணக்குகள்.

முகத்தில் அதற்கான ஜொலிப்பு.

* * *

வீட்டிற்குள் நுழையும்போது பை நிறையக் காய்கறி பழங்கள் காபிபொடி ஹார்லிக்ஸ் என்று வாராந்திர தேவைகள்.

ஈஸிசேரில் சாய்ந்திருந்த அப்பா ராமச்சந்திரனுக்குக் கண்ணைப் பிடுங்கியது.

''ஏது இவ்வளவு பணம்?''

அந்த மாலை வேளையில் ஸ்லோக முணுமுணுப்போடு ஊதுபத்தி ஏற்றி அதை ஸ்வாமி படம் முன் செருக வந்த அம்மா தர்மாம்பாளிடமும் அதே ஆச்சரியம்.

ஆனால் நிச்சயதார்த்தத்திற்குப் பிறகு நிலவும் ஒரு வகை இறுக்கம் காரணமாச் சட்டென்று சௌஜன்யமாக எதையும் கேட்பதோ பேசுவதோ இல்லாது போய் விட்டதால் ஆச்சரியத்தோடு சங்கடமும் சேர்ந்து கொள்கிறது.

'வாடி இங்க...''—ராமச்சந்திரன் மனைவியை அழைக்கிறார். தர்மாம்பாளும் நெருங்குகிறாள்.

''நீ எதுனா பணம் கொடுத்து அவளை இதை எல்லாம் வாங்கிண்டு வரச் சொன்னியா?''

''ஐய்யய்யோ...என்னண்ட ஏது பணம்?''

''அப்ப எப்படி அவளுக்கு இதை எல்லாம் வாங்கப் பணம்?'' கேள்விக்குப் பதிலாக நைட்டிக்கு மாறிய ரஞ்சனியே எதிரில் வந்தாள்.

''நான் வேலைக்குச் சேர்ந்துட்டேன். காமாசோமான்னு துணிக்கடை, ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், டைப்ரைட்டிங் இன்ஸ்ட்யூட்னு கிடைச்ச இடத்துல வேலைக்குச் சேர்ந்துடல. நல்ல கௌரவமான உத்யோகம். டி.வி.எஸ். கம்பெனில...''

ராமச்சந்திரன் நெற்றியில் அடுத்த க்ஷணம் ஒரு ஆச்சரிய மின்னல். கூடவே கேள்வி.

''டிவிஎஸ்னா...? அவாள்ள பல க்ரூப் இருக்கே...''

''அதுல ஒண்ணுல.''

''அதுல ஒண்ணுலன்னா...எதுல...என் காதுல என்ன பூ சுத்தப் பாக்கறியா?''



''அதெல்லாம் உங்க வேலை. எனக்கு அது தெரியாது. ஏன் அங்க உத்யோகம் கிடைக்காதோ?''

''பொம்மனாட்டிகளுக்கு டிவிஎஸ்ல எங்க இருக்கு உத்யோகம். அது ஒரு மெக்கானிக்கல் ஆட்டோமொபைல் இண்டஸ்ட்ரியாச்சே?''

''காலம் மாற ஆரம்பிச்சாச்சு. வெளில என்ன நடக்கறதுங்கறதே தெரியாம ஆத்துக்குள்ள ஈஸிசேர்ல கிடந்தா இப்படித்தான் பேசச் சொல்லும். ஜப்பான்ல புல்லட் ட்ரெயினையே பொம்மனாட்டி ஓட்றா...''

சொல்லிக் கொண்டே அப்பாயின்ட்மென்ட் ஆர்டரைத் தூக்கிப் போட்டாள். ஆர்டரில் கல்யாணராமனின் கையெழுத்தைப் பார்க்கவும் சுளிர் என்றது.

''அட...இதுமாப்ள கம்பெனி. அவர் எப்படி உனக்கு...?''

''நான் அப்ளிகேஷன்தான் போட்டேன். எல்லாக் கம்பெனிக்கும் போட்டிருக்கற மாதிரி. அவர்தான் கூப்டுக் கொடுத்தார்.

''உன் லைஃப்ல தெரிஞ்சோ தெரியாமலோ நான் ஒரு தப்புப் பண்ணிட்டேன். அதைச் சரி பண்ண இது ஒரு பிராயச்சித்தம்னு சொன்னதால ஒத்துண்டேன்.''

''நிஜமாவா?'' கேட்கும்போதே ராமச்சந்திரன் கண்களில் ஜலம்.

''வேணும்னா நீங்க நேர்லையே கேட்டுக்கலாம். அவர் கூட என்னைப் புரிஞ்சு வெச்சுண்டிருக்கார். ஆனா நீங்கதான் என்னை இன்னும் புரிஞ்சுக்கல.''

''நாங்களா?'' அம்மாவும் அப்பாவும் ஒரு சேர அவளிடம் கேட்க, அவளிடம் கித்தாப்பான தலையசைப்பு. தொடர்ந்து அவர்களிடம் ''ஈஸ்வரா...'' என்கிற முணுமுணுப்பு.

''ஆமா நீ எல்லாரையும் புரிஞ்சிண்டுருக்கியா?'' தர்மாம்பாள் மடக்கினாள்—சாதாரணமாகத்தான்.

ரஞ்சனி சற்றே நெருப்பைக் கண்களில் காட்டி னாள்- 'புரிஞ்சுக்காம...'' என்றது அவள் உதடுகள். கேட்ட ஜோரில் பாத்ரூம் பக்கம் போய்விட்டாள்.

ராமச்சந்திரன் கணகளில் கண்ணீரின் பாய்ச்சல் ''நீங்க ஏன்னா அழறேள்.'' தர்மாம்பாளும் இலேசாகப் பதறினாள்.

''அந்தப் பிள்ளையை நினைச்சேன் தர்மா... அழுகை வந்துடுத்து. இப்படி எல்லாம் கூடப் பசங்க இருக்க முடியுமாடி?''

''எனக்குள்ளேயும் அந்த எண்ணம்தான். இந்த மூதேவிக்குப் புரியலியே...''

தர்மாம்பாள் சடைப்பில் சற்று அநாகரீகம் தெரிந் தாலும் அதில்தான் வெப்பத்தின் அளவு துல்லியமாக தெரிந்தது.

* * *

ஆபீஸ்.

நல்ல லட்சணத்தோடு ரஞ்சனி பி.சி. முன்னால் விண்டோஸை ராவியபடி இருக்கும்போது பக்கமாய் சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான் கௌசிக். நீல பேண்ட், வெளிர் நீலச் சட்டை நேம்பேட்ஜ், கழுத்தில் டை, நல்ல பிரஷ் மீசை, ஃபேர் அண்ட் லவ்லியால் சிவந்திருக்கும் சதை பூசிய குண்டு முகம் என்று அரவிந்தசாமி லட்சணங்களை அள்ளிக் காட்டினான்.



''ஹாய்...''

''ஹலோ சார்...''

''என்ன பண்றீங்க...பி.சி. ஆபரேட் பண்ணத் தெரியுமா?''

''தெரியும். லட்டர் டைப் பண்ணிப் பிரிண்ட் எடுப் பேன்.''

''குட்...இது ஒரு சமுத்ரம். டெய்லி ஒரு அவர் நான் சொல்றதக் கேட்டுக்குங்க. நன்னா அப்சர்வ் பண் ணுங்கோ. மூணுமாசம் போதும். நீங்க தனியா சாஃப்ட் வேர் பிசிபேர் பண்ணலாம்.''

''ஷ்யூர் சார்...''

சொன்னதோடு கம்ப்யூட்டர் திரையில் வர்ண ஜாலம் காட்ட ஆரம்பித்தான். மௌஸ் பட்டனை நசுக்கி அம்புக் குறியைத் திரையில் ஒட விட்டு மெமரி பக்கங்களைச் சுண்டி இழுத்துப் பதுங்கியிருக்கும் விஷயங்களைக் கண்ணுக்குக் காட்டித் தாண்டிக் கொண்டே போனான்.

ஒரு சாண் அளவு சமீபத்தில் அமர்ந்திருந்ததில் அவனது வாசனை ஸ்ப்ரே லெவண்டர் என்பதில் இருந்து நியூயார்க் ஒரு கோடி இந்த கம்ப்யூட்டர் விஷயமாகப் போய் படித்து விட்டு வந்தவன் என்பது வரை எல்லாமே மெல்லத் தெரிய ஆரம்பித்தன.

கைவிரலில் R என்கிற இன்ஷியலில் மோதிரம் அவன் இனிஷியலும் R இல்லை. கௌசிக் என்கிற பெயரிலும் R இல்லை என்றால் இந்த R யார்?

முதலில் மண்டைக்குள் இப்படி க்யூரியாசிட்டி கிளம்பினாலும் பின்னால் யாராக இருந்தால் என்ன என்றும் சொல்லிக் கொண்டு அடக்கிக் கொண்டான்.

சாதாரணமாக அவளைப் பார்க்கும் எந்த ஒரு
ஆணும் இரண்டாவது முறை பார்க்காமல் இருந்ததே
யில்லை. இவன் விதிவிலக்காக இருக்கிறான் முகத்
தைக்கூடப் பார்க்காமல் பேசுகிறான். ஒரு வேளை
ஜூனியரிடம் வழியக் கூடாது என்கிற கட்டுப்பாடு
காரணமோ?''

நடுநடுவே இப்படியும் கேள்வி எழும்பிற்று. அதை
யும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

ஒரு மணி நேரம் போனதே தெரியவில்லை.

பி.சி.க்குள் அவன் போட்ட கரணங்கள், காட்டிய
பாய்ச்சல்கள், அளித்த விளக்கங்கள்- அந்த விளக்கங்
களில் ஆங்கிலம் வெளிப்பட்ட விதம் எல்லாமே கிறக்
கியது. மயக்கியது.

என்ன ஒரு நாலெட்ஜ் என்று பிரமிப்பு மூட்டியது.

நடுவில் கல்யாணராமனையும் பார்க்க நேர்ந்த
போது கேட்டான்.

''என்ன ரஞ்சனி வேலை பிடிச்சிருக்கா?''

''ரொம்ப...''

''ஆத்துல அப்பா அம்மா என்ன சொன்னா?''

''முதல்ல நம்பல. அப்றமா ஆர்டரைப் பார்த்துட்
டுப் பொளந்த வாயை மூடலை.''

''சந்தோஷமா இருக்கு கேக்க...வரேன்.'' அவன்
விலகிக் கொண்டான். அவளுக்கு உற்சாகமாக இருந்
தது. ஆபீசில் நிறைய இளைஞர்கள். எல்லோருமே
டைகட்டிய விஜய்கள்-பிரஸாந்துகள்.

இதில் ஜொள்ளர்களுக்கு இடம் கொடுத்து விடவே
கூடாது.



தேவையே இல்லாத தீர்மானங்களெல்லாம் அவள்
மனதில். நடையே மாறிவிட்டது. அனிச்சையாகப்
புடவை மாராப்பைச் சரிசெய்து கொள்கின்றன கைகள்.
கர்ச்சீப்பால் முகத்தை ஒத்திவிட்டுக் கொள்கிறாள்.

சீட்டில் வேலை உடனே பிடிபட்டு விடவில்லை.

தடவித் தடவிப் பேப்பர்களைப் பார்த்துக் காரியம்
பண்ண வேண்டியிருந்தது. நடைமுறையில் பேசப்
படும் ஆங்கிலமே எங்கும் இல்லை. ஃபைல்களில் புதுப்
புதுச் சொற்கள் மிரட்டின. டிக்ஷனரியை அடிக்கடி
பார்க்க வைத்தன.

கான்வென்ட்டிலும் மெட்ரிக்குலேஷனிலும் படிக்க
முடியாமல் போனதற்காக மனதை நோக வைத்தன.

தினத்தந்தி தினமணியோடு தினசரி இனி ஹிந்து
படிக்கும் தீர்மானம் சேர்ந்து கொண்டது.

விவேகானந்தாவுக்கு கூட அப்ளை செய்யலாம்
போல தோன்றியது.

சில சமயங்களில் இங்கே வேலையில் தாக்குப்
பிடிக்க முடியுமா என்றெல்லாம்கூட தோன்றியது.
அப்பொழுதெல்லாம் கல்யாணம் ஆண்கள் அழகு
மிடுக்கு என்று எல்லாமே ஒரு க்ஷணம் நின்று டான்ஸ்
ஆடிக்காட்டின.

வாழ்வின் கடைக் கோடிப் பெண்ணாக, ஓட
முடிந்த உலகத்தில் உதிர்ந்து விழுந்து நொண்டியாகி
விட்டதாகவெல்லாம் மனதில் பிரமை தட்டியது.

அப்பொழுதெல்லாம் கல்யாணராமன் கைகொடுத்
தான்.

''வாக்காப்லரில ப்ராப்ளம் இருந்தா என் கிட்டவா
ரஞ்சனி. ஐ வில் டீச் யூ.'' என்றான்.

சொன்னது போலவே அவள் தடுமாறி நின்ற கட்டங்களில் பக்கமாய் நின்று தாங்கிக் கொண்டான். Aeiou என்னும் வவ்வல்ஸ் கூட மறந்து போயிருந்தது. எல்லாவற்றையும் சீர்படுத்தி விட்டான். மெல்ல கௌசிக்கிடம் சொல்லி கௌசிக்கை அவளது கோச்சிங் மாஸ்டராக பி.சி.க்கு மட்டுமல்லாமல் இங்கிலீஷிற்கும் மாற்றினான்.

கௌசிக்கும் நிறைய உரிமை எடுத்துக் கொண்டான். வாங்க போங்கவிலிருந்து வா போ நீக்கு மாறி விட்டான்.

''என்ன ரஞ்சனி...இன்னும் தேறலியே நீ. Seeks to be ங்கறதுக்கு Seems to be ன்னு அடிச்சிருக்கே. அர்த்தம் எவ்வளவு மாறிடும் தெரியுமா?'' - என்று கேட்டுச் சன்னமாக கோபித்துக் கொள்ளவும் செய்தான்.

பதிலுக்கு மதிய லஞ்ச்சில் ''புலாவ் பண்ணி எடுத்துண்டு வந்துருக்கேன் சாப்ட்டுதான் தீரணும்'' என்று அவனுக்குத் தர அவனும் சாப்பிட்டுவிட்டு ஒண்டர்ஃபுல் என்று பாராட்ட இமாலயம் தலைக்கு இடம் பெயர்ந்தது அவள் வரையில்...அவளது சின்னச்சின்ன அழகுணர்ச்சிகளை அவன் பாராட்டும்போது அது கரைந்து காது மூக்கெல்லாம் ஜில்லிட்டுப் போனது.

''என்ன கலர் புடவை உடுத்தணும்-எந்த சைஸ் பொட்டு வெச்சுக்கணும்கறது வரை நீ ரொம்ப க்யூட்'' என்றான் ஒரு முறை,

''உனக்கு வியர்க்கவே வியர்க்காதா ரஞ்சா. எப்பவும் பூ மாதிரி ஃப்ரெஷ்ஷா இருக்கியே'' என்றான் இன்னொரு முறை.

''விரல்ல நகக்கண்ல இருந்து குதிங்கால் வரை துளியும் அழுக்கில்லாம பளிச்சின்னு இருக்கே. பை த வை



எனக்குத் தெரிஞ்சு இடுப்பத் தொட்டுக் கூந்தல் பானுப்ரியாக்குப் பிறகு உனக்குத்தான்னு நினைக்கறேன்'' என்று நெருங்கியதில் இவன்... இவன் தான் எனக்கேற்றவன் என்பதுபோல பலமுறை நினைத்து மகிழ்ந்தாள்.

மறக்காமல் அந்த R மோதிரம் யாருடையது என்பதிலும் நிறைய நெருடினாள். ஊசலாடினாள்.

சரி முதலில் அதைக் கேட்டு வைப்போம் என்று ஒரு நாள் கேட்டும் விட்டாள்.

''கௌசிக் தப்பா எடுத்துக்கமாட்டேளே...''

''என்ன ரஞ்சா?''

''இந்த மோதிரம் யார் போட்டது?''

''ஓ— இதுவா என் அத்த பொண்ணு. பேர் ராதா. அவ ஞாபகமா போட்டிருக்கேன்.'' ரஞ்சனிக்கு இதயத்தைக் கிள்ளினமாதிரி வலித்தது.

''ஐ.சீ...'' என்றாள் சுரத்தில்லாமல். வேலையும் அதன் பின் ஓடவேயில்லை. கௌசிக் மெல்ல இடம் பெயருகின்றவனாக மாறியிருந்தான்.

கூடவே இந்த ஜென்மத்தில் நீ விரும்பும் ஒருவன் உனக்குக் கிடைக்கப் போவதில்லை. ராசியில்லாத ஜென்மம் நீ என்பது போலும் அவளுக்குள்ளேயே உளைச்சல்கள்.

அது அவள் அடித்த கடிதத்திலும் எதிரொலித்தது. கிலாசிக் என்று அடிக்க வேண்டிய இடத்தில் எல்லாம் கௌசிக் கௌசிக் என்று அடித்துத் தள்ளியிருந்தாள்.

டிக்டேட் செய்யும் போது கல்யாணராமனால் புரிந்து கொள்ள முடிந்தது. அழைத்து நேராகவே கேட்டுவிட்டான்.

''என்ன ரஞ்சனி கௌசிக்க லவ் பண்றியா?'' திணறத் தொடங்கி விட்டாள் ரஞ்சனி. இது என்ன இத் தனை நேராக என்று கூச்சம் குழப்பம் எல்லாம் காட்டினாள்.

''ஒரு யூகமா உங்க பழக்கத்தைப் பார்த்துட்டு நான் இதை கேக்கல. இந்த லெட்டர்ல ஏழு இடத்துல அவர் பேர் இருக்கு. அதான் கேட்டேன்.''

காட்டினான். அவள் ஆமோதிப்பைப் பல விதங் களில் உணர்த்தினாள். கூடவே கண்களில் கொஞ்சம் ஈரத்தையும்.

''ஏன் கலங்கறே... கௌசிக் உன்னை லவ் பண்ணலியா?''

''அப்படித்தான் நினைக்கறேன். நானும் என் காதலைச் சொல்லலை—''

''சொல்றதுக்கென்ன... எவ்வளவு துணிச்சலான பொண்ணு நீ.''

''சொல்லத்தான் போனேன். ஆனா அவர் அத்தை பொண்ணை...''

''கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னுட்டாரா...?''

''அப்படித்தான் நினைக்கறேன். அவ போட்ட மோதிரத்தப் போட்டுண்டு இருக்காரே...''

''ஐ. சீ. நான் பேசிட்டுச் சொல்றேன்.''

கல்யாணராமன் இப்படி காதல் தூதுக்குத் தன் னையே தயார் படுத்திக்கொள்வான் என்று அவள் துளி கூட எதிர்பார்க்கவில்லை.

பிரமிப்பைக் கண்களில் காட்டினாள்.

''மோதிரம்கறதப் பல காரணங்களுக்காகப் போட் டுண்டு இருக்கலாம். அத ஏன் நாம வெட்டிங் ரிங்



மாதிரி நினைக்கணும். கௌசிக் நைஸ் பாய். உங்க ஜோடிப் பொருத்தமும் நன்னாத்தான் இருக்கும்.''

அவன் பெரிய மனதுக்கு இலக்கணம் எழுதுகின்ற வனாக அவள் முன் நிமிர்ந்தான்.

''தைரியமா இரு...'' அவனது ஆறுதலைத் தொடர்ந்து அவள் அங்கிருந்து கௌசிக்கைத் திரும்ப வும் கிலாசிக்காக்கும் முனைப்போடு கிளம்பினாள்.

அவன் கௌசிக்கிற்கு ஒரு கால் போட்டான் ''கௌசிக் கொஞ்சம் வாயேன்.''

## 5

கல்யாணராமனின் அழைப்பைத் தொடர்ந்து அடுத்த இரண்டாவது நிமிடமே கௌசிக் எதிரில் வந்து நின்று விட்டான்.

''உட்கார் கௌசிக்.''

''பரவால்ல சார். என்ன விஷயம் சொல்லுங்கோ.''

''உட்காரு சொல்றேன்.''

''சொல்லுங்கோ...''

''What you think about Ranjani?''

''எதுக்கு சார் இப்ப அவங்களப் பத்தி...?''

''காரணமில்லாம நான் கேக்க மாட்டேங்கறது உனக்குத் தெரியாதா கௌசிக்?''

''நைஸ் லேடி சார்...''

''அவ்ளோதானா?''

''வேற என்ன சார் சொல்றதுக்கு இருக்கு...எனக்கு நீங்க கேக்கறது புரியல...''

ஆகாதவன்-அவளும் ஆகாதவள்.

''நீ கல்யாணம் ஆகாதவன்-அவளும் ஆகாதவள். உங்களுக்குள்ள இந்தத் தொடர்பால எந்தச் சலனங் களும்...?''

''சாரி சார்— ட்யூட்டியத் தவிர எனக்கு வேறு சிந்தனை இந்த கேம்பஸ்ல வந்ததில்லை. வந்தாலும் அதை நான் வர விட்டதில்லை.''

''ஸோ...வந்துருக்கு. But you will not allow is it?''

''அஃப் கோர்ஸ்.''

''அந்த வந்த எண்ணம் ரஞ்சனி பத்தி என்ன சொல்றதுன்னு நான் தெரிஞ்சிக்கலாமா?''

''சார்...எங்க இரண்டு பேரைப் பத்தி யாராவது எதாவது கம்பளைண்ட் கிம்ப்ளைண்ட் பண்ணிட்டாளா ...அதான் நீங்க இப்படி எல்லாம் கேக்கறேளா?''

''நோ கௌசிக்...இட் ஈஸ் பியூர்லி பர்சனல். அதான் லஞ்ச் டயமாப் பாத்து இப்பப் பேசிண் டிருக்கேன்.''

''சார்...ரஞ்சனியை எனக்குப் பிடிச்சிருக்கு. தட்ஸ் ஆல். மத்தபடி நான் அவளுக்கு சீனியர்-கிட்டதட்ட இம்மிடியட் பாஸ். எனக்கும் அவளுக்கும் நேரிட்ட இந்தப் பழக்கம் இந்த வேலையாலதான் அதனால நான் இந்தப் பழக்கத்தை advantageஆ எடுத்துண்டு என் ஆசையைச் சொல்ல விரும்பல. அது தப்புங்கறது என் அபிப்ராயம்.''

''ஸோ—நீ அவளை ஏதோ ஒரு வகைல லவ் பண்றே. சரிதானே?''



''நீங்க என் வெல் விஷர். உங்க கிட்ட சொல்றதுக் கென்ன சார். ரஞ்சனியை எனக்குப் பிடிச்சிருக்கு. அவ்ளோதான். இதை ஒரு பெரிய விருப்பமா காதலால்லாம் சொல்லமுடியாது.''

கல்யாணராமன் அந்த பதிலைக் கேட்டுச் சிரித் தான். கௌசிக்கின் கரங்களும் சும்மா இல்லாமல் பேப்பர் வெயிட்டைப் புரட்டின.

''அப்ப... ரஞ்சனி தரப்புல உனக்குக் காதல் சிக்னல் வந்தா உன் பதில் சம்மதம்னு இருக்குமா?''

அந்த அமைதியை நறுக்கினது கல்யாணராமனின் கேள்வி.

''சார்ர்ர்...''

''யெஸ் கௌசிக். அவ உன்னை லவ்பண்றா. நான் கூடக் கேட்டேன் மறுக்கல. ஆனா அவளுக்கு உன்கிட்ட எப்படி ஆரம்பிக்கறதுன்னுதான் தெரியலை.''

''உங்க விருப்பம் என்ன சார்...?''

''நீங்க இரண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கணும் கௌசிக். அதான் என் விருப்பம்''

''அப்ப என் காதலை அவகிட்ட நீங்களே சொல்லி டுங்கோ சார்...''-கௌசிக் சீட்டை விட்டு எழுந்து சென்றான். என்ன நினைத்தானோ கதவு வரை சென்றவன் திரும்ப வந்து மேஜை மேல் இரு கைகளை யும் பதித்துக் கொண்டு மெல்லிய குரலில் சொன்னான் ''சார் ரியலி நீங்க ரொம்ப கிரேட்...''

''என்னப்பா பெரிய வார்த்தையெல்லாம் சொல்றே உன்கிட்ட நான் சில உண்மைகளையும் சொல்லணும்.''

''தெரியும் சார்...ரஞ்சனி உங்களுக்குப் பார்த்த பொண்ணு. நிச்சயதார்த்தத்தின் போது உங்களுக்கு

ஏற்கனவே கல்யாணம் ஆகி விவகரத்து ஆனது தெரிஞ்சு ரொம்பத் துணிச்சலாவும், ரொம்ப துரதிர்ஷ்டத் தோடையும் வேண்டாம்னும் சொல்லிட்டவ. அதானே?''

கௌசிக் அசத்தினான். டையையும் சற்றுத் தளர்த்தி விட்டுக் கொண்டான். கல்யாணராமன் கண்களில் மளுக்கென்று கண்ணீர் குடியேறிவிட்டது.

''சார்ர்...ஏன் சார் கலங்கறேள்?''

''இல்ல...இதை ஒரு மைனஸ் பாயின்டா நினைச்சு நீ மறுத்தாலும் மறுப்பேன்னு நான் நினைச்சிருந்தேன். நீ என்னைத் திணறடிச்சுட்டியே...''

''அவளை நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னதே அவ பேரால உங்களுக்குள்ள இருக்கற கில்டியைப் போக்கணும்னுதான் சார் உங்களுக்கு உதவி செய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு விட்றுவேனா...?''

—கௌசிக் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. விறு விறுவென்று போயேபோய் விட்டான்!

ரஞ்சனி இதுவரை விமானத்தில் எல்லாம் போன தில்லை. ஆனால் இப்பொழுது போவது போல் உணர்ந்தாள். தவணை முறையில்தான் சந்தோஷங்கள் அவள் வாழ்வில் எட்டிப் பார்த்திருக்கின்றன. இப் போது ஒட்டு மொத்தமாக ஒரு சமுத்திரமளவு அது அவளுக்குக் கிட்டிவிட்டது போல பிரமை தட்டிற்று.

இப்படி எல்லாம் சந்தோஷம் யாருக்கு வந்தாலும் அவர்களுக்கு இரும்பைத் தங்கமாக்குவது கூட பாசிபிள் ஆன ஒரு விஷயமாகத்தான் இருக்கும். பார்க்கும் இடம், மனிதர்கள், வீசும் காற்று, அதில் ஆடும் மரம், செடி கொடி எல்லாமே புதிய பொலிவோடும் தெரியுமோ?''



ஆபீஸ் முடிந்து வீட்டிற்குப் போகும் போது, ''சீக்கிரமா உங்காத்துக்கு வந்து முறைப்படி பொண்ணு கேக்கறேன்னு உங்கப்பாகிட்ட சொல்' என்று அவன் சொன்னது பாலச்சந்தர் படத்து சினிமா உத்திபோல ரீவர்ஸ்வைண்ட் செய்யப்பட்டு செய்யப்பட்டு ஒலித்தது.

வழக்கமாக லஸ் கார்னரைத் தாண்டும்போது சிக்னல் விழும். வாகனங்கள் அசுரத் தன்மை காட்டிப் பாதையைக் கடக்க நினைப்பவர்களுக்கு மரண பயமூட்டும். அப்பொழுதெல்லாம் எரிச்சலில் விழும் ரஞ்சனி இன்று அவைகளை ரசித்தாள். கௌசிக்கோடு தானும் இதேபோல் காரில் பறக்கப்போவதாக ஒரு கற்பனைச் சித்திரம் உருவாகத் தொடங்கிவிட்டது. பக்கமாக சுவற்றில் நிறைய சினிமா போஸ்டர்கள், அதில் நாயகன் அழகாகத் தெரிவான். எல்லாம் செயற்கையான சினிமா அழகு என்று அவர்களை ரசிக்க மறுப்பாள். இன்று ரசிக்கிறாள். அந்த சினிமா நாயகர் களாக கௌசிக்கை வைத்துப் பார்க்கிறாள்.

ரவுண்டானா கடந்து சிவசாமி அய்யர் சாலையை நோக்கி நடக்கையில் ஆஞ்சநேயர் கோவில் வரும். வாசலிலேயே நின்று பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொள்வாள். இன்று உள்ளே நுழைகிறாள். கைகூப்பிப் பரவசமான பரவசத்தோடு வணங்குகிறாள்.

வெளியே வந்து பக்கத்து மார்க்கெட்டில் காய்கறி களையும் வாங்கிப் போட்டுக் கொண்டு வீடு நோக்கி நடக்கத் தொடங்குகிறாள்.

ஈஸிசேரில், பல்லி பூச்சியைப் பிடிப்பதை வேடிக்கை பார்த்தபடி படுத்திருக்கும் அப்பாவிற்கு இன்று எல்லாமே ஆச்சரியமாக இருக்கும். அசரப் போகிறார்.

அம்மாவும் ஜால்ராவாக போட்டுத் தள்ளுபவள். திணறப் போகிறாள். சாதி குலம் என்று ஒரு கேள்வி

எல்லாத்துலையும் கௌசிக் நமக்கும் மேல...
வரும். எல்லாத்துலையும் கௌசிக் நமக்கும் மேல... நம்ம சாதியேதான் கோத்தரமும் வேற கோத்ரம்' என்று அதற்கும் ஒரு வாய்ப்பூட்டுப் போட்டுவிட்டால் தீர்ந்தது...

குஷி...

பரம குஷி...

அத்தோடு வீட்டினுள் நுழைந்து விஷயத்தையும் போட்டு உடைத்தபோது அவள் எதிர்பார்த்தபடியே இருவரும் அசந்துதான் போனார்கள்.

தன் மகள் இத்தனை அதிர்ஷ்டம் செய்தவளா? என்ற சந்தேகமும் சந்தோஷமும் ஒரு சேர அவர்கள் கண்ணில் மின்னியது.

அம்மா ஓடிப்போய் முதற்காரியமாக ஸ்வாமி சன்னதியில் விளக்குப் போட்டாள்.

''தெய்வமே... என் பொண்ணுக்கும் ஒரு நல்ல வழியைக் காட்டிட்டே...''

''அவசரப்படாதே...'' என்று ராமச்சந்திரன் இடைமறுக்குவது காதில் விழுந்தது...

''என்னன்னா?''

''என்னன்னாவா...இவ பேச்ச வெச்சுல்லாம் நான் ஒரு முடிவக்கு வரமுடியாது தர்மா. அந்தப் பிள்ளையாண்டான் வரட்டும். பேசுவோம். பிறகு சொல்வோம்...''

''தாராளமா...கௌசிக் கூடப் பேசினா தான் உங்களுக்கும் தெரியும். அப்பறமாச் சொல்வேள்...''

''அதுசரி... அதுக்காக நேரா பொண்பாக்கற சடங்குக்குக் கூட்டிண்டு வந்துடாதே. உனக்கு வரப்



போற மாப்பிள்ளை இப்படி இருக்கணும், அப்படி இருக்கணும்னு நீ ஆசைப்படற மாதிரி எங்களுக்கும் இருக்கு. எங்களுக்குப் பிடிக்கலைன்னா நீ உட்டுடணும்..''

அப்பா பேச்சு அவளுக்குத் திகைப்பைத் தந்தது.

''அப்பா...என்ன பேசறேள். நீங்க பேசறதப் பார்த்தா என்னைப் பழிவாங்கிடுவேளோன்னு தோணறது.''

''உன்னைப் பழிவாங்கி எனக்கென்னமா ஆகப் போறது. நாங்க தோத்தா வேணும்னா நீ தோத்துட்டதா நினைக்காம இருக்கலாம். ஆனா நீ தோத்தா அது நாங்க தோத்த மாதிரிதான்.''

''இனிமே இந்த தோக்கறது ஜெயிக்கறது பத்தியெல்லாம் பேசப்படாது. நான் எனக்குன்னு ஒருவேலையும் பாத்துண்டுட்டேன். அப்படியே உங்ககிட்ட சவால் விட்டமாதிரி ஒரு வரனையும் பார்த்துண்டுட்டேன். பெத்தவாளை மதிக்காம போயிட்டாளே இந்த பொண்ணுன்னு யாரும் சொல்லக்கூடாதுங்கறதுக்காக உங்ககிட்டையும் எல்லாத்தையும் சொல்லிட்டேன்' பொறாமை சிஃமிஷம்லாம் இல்லாம கல்யாணத்தைப் பண்ணிவையுங்க.''

ரஞ்சனி தீர்மானித்துத் காலிகட்டிக் கொள்ள மகா தீர்மானமாக ரெடியாகிவிட்டதை அவளது பேச்சின் தன்மையே அவருக்கு உணர்த்துகிறது.

அவள் பாத்ருமுக்குக் குளிக்கப் போகவும் ஆம்படையானும் பொண்டாட்டியும் அலசுகின்றனர்.

''எந்த நேரத்துலடி இவளைப் பெத்தே—என்ன ஒரு ஆங்காரம், தீர்மானம் பாத்திய உன் பொண்ணுகிட்ட ..''

உங்க பொண்ணு அப்படியே
''என் பொண்ணா... உங்க பொண்ணு அப்படியே
''என் பொண்ணா... இளவயசுல நீங்க இப்படித்தானே என்
உங்கரத்தம். இள வயசுல நீங்க இப்படித்தானே என்
கிட்ட பேசுவேள். கறிகா வாங்கறதுலகூட உங்க
பேச்சைதானே அப்ப நான் கேட்டேன்...''

''போதும் தர்மா... நம்பளை நாமளே வாரிக்க வேண்டாம். ஆமா இந்த விஷயம் நாம நிச்சயம் பண்ணின மாப்பிள்ளைக்குத் தெரியுமா?''

ராமச்சந்திரன் அப்படிக் கேட்கவும் தர்மாம்பாளுக்கு அப்பொழுதுதான் கல்யாணராமன் ஞாபகமே வந்தது. கூடவே கலக்கமும்...

''என்ன பதிலைக் காணோம்... இன்னொரு கேள்வி. இவ இப்படி ஏற்கனவே ஒரு கல்யா[illegible]த்தை வேண்டாம்னு சொல்லி நிறுத்தின விஷயம் இப்ப இவ பாத்துருக்கற பிள்ளையாண்டானுக்கும் இந்தப் பிள்ளையாண்டான் ஆத்துக்கும் தெரியுமா?''

''அவருக்குத் தெரியும்... ஆனா அவாத்துக்கு தெரியாது. தெரியத் தேவையில்லைன்னு நானும் நினைக்கறேன். அவரும் நினைக்கறார். பாத்ரூமில் இருந்து பதில் வந்தது இருவருக்கும். ராமச்சந்திரனும் தர்மாம்பாளும் சற்று மிரண்டுதான் போயினர்.

''ஆமா... அவருக்குத் தெரியுமா உன்னோட இந்த முடிவு?'' சத்தம் போட்டே கேட்டார் ராமச்சந்திரன்.

''எவருக்கு... கல்யாண ராமனுக்கா?''

''பேரையா சொல்றே... சரி... அவருக்குதான்.''

''தானாத் தெரிஞ்சுட்டு போறது. நான் சொல்லப் போறதில்ல''

''அது சரி... எந்த தைரியத்தோட அவர்கிட்டேயே போய் இதைச் சொல்ல முடியும் உன்னால?''



''எனக்கென்ன பயம்... நான் என்ன கொலையா பண்ணிட்டேன் பயப்பட...'' சொல்லும்போதே வாளித் தண்ணீர் புரண்டுவிழும் சலசல சப்தமும் கேட்கிறது.''

''கொலையவிடத் தைரியமான காரியம் அன்னிக்கு நீ பண்ணினது. அதைவிடக் கொடுமையான காரியம் அவர் இருக்கற ஆபீஸ்லையே வேலை பாக்கறது— எல்லாத்தையும்விடக் கொடுமை இப்ப இப்படிப் பேசிண்டு இருக்கறது...''

ராமச்சந்திரன் பேசின நொடி பாதி குளியலில் ஈரம் சொட்டச் சொட்ட உள் பாவாடை மார்புக்கு மேல் இருக்கக் கதவை ஆவேசமாகத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் ரஞ்சனி.

''என்ன சொன்னேள்... எனக்கொரு வழியை என் விருப்பப்படி நான் பாத்துக்கறது கொடுமையா உங்களுக்கு...'' பதில் பேசாமல் அந்த கேள்விக்கு முறைப்பைப் பதிலாக வைக்கிறார் ராமச்சந்திரன்.

''இப்படி முறைச்சா ஆச்சா... உங்க வாய்ல நல்லதே வராதா?'' கத்தினாள் ரஞ்சனி.

''இல்ல ரஞ்சா... இப்படி எல்லாம் நடந்துக்க உனக்கு எப்படிம்மா மனசுவரது?'' மிடறு விழுங்கிய படியே கேட்டார் ராமச்சந்திரன்.

''எப்படி எல்லாம் நடந்துக்க... நான் என்ன அவரைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சுட்டு அவரை ஏமாத்தினேனா... இல்லை அவராட்டம் எனக் கென்ன இது இரண்டாம் கல்யாணமா? எனக்குத் தெரியாம மறைச்சு ஒளிச்சது நீங்க. உங்களுக்குதான் தைரியம் ஜாஸ்தி. எனக்கு இருக்கறது தன்னம்பிக்கை. தெளிவு. புரிஞ்சுக்கோங்கோ...''

திரும்பப் போய் கதவைச் சாத்திக் கத்திவிட்டுத் கொண்டாள் ரஞ்சனி. இருவரிடமும் பேச்சு மூச்சில்லை.

அசந்துபோய் உள்ளே நுழைகிறான் கல்யாண ராமன். சோபாவில் அமர்ந்து ஷூ லேஸைத் தளர்த்தும் போது காபி வாசனை. நிமிர்ந்து பார்க்கவும் பிச்சுமணி அய்யர் பிள்ளைக்குக் காபிபோட்டு எடுத்துக் கொண்டு வந்திருந்தார்.

''தேங்க்ஸ்பா...வாசனை மூக்கைத் தொளைக் கறதே நானே கேக்கணும்னு இருந்தேன்.''

—என்ற கல்யாணராமன் பேசிக் கொண்டே ஷூவைக் கழட்ட பிச்சுமணி காபியை வளாவி ஆற்றத் தொடங்கினார்.

''அப்பா ஒரு சந்தோஷமான விஷயம்...'' என்றான் பீடிகையோடு கல்யாணராமனும். ''தெரியும்... அந்த ரஞ்சனிக்குக் கல்யாணமாகப் போறது. உங்க ஆபீஸ்ல உனக்குக் கீழே வேலை பாக்கற கௌசிக்தான் மாப்ள. அதானே?''

''அப்பா...''

''எப்படித் தெரியும்னு பாக்கறியா... அந்த பொண் ணோட தோப்பனார் ராமச்சந்திரன் போன் பண்ணி னார். உனக்குத் தெரியுமா தெரியாதாங்கறது அவர் கவலை. தெரிஞ்சா என்ன நினைப்பியோன்னு லஜ்ஜை. ரொம்பக் கவலைப்பட்டார்...''

''இதுல கவலைப்பட என்ன இருக்கு. ஐ ஆம் வெரி ஹாப்பி. ஒரு வகைல நான்தான் கௌசிக்கை...''

''தெரியும். இதை நீ என்கிட்ட சொல்றதுக்கு முந்தியே அவர்கிட்டச் சொல்லிட்டேன். மனுஷன் ஆடிப்போயிட்டார்...''



''சந்தோஷப்படச் சொல்லுங்கப்பா. எல்லாம் தான் நல்ல விதமா முடியப் போறதே...''

''அது சரி... அவரைச் சந்தோஷப்படச் சொல்ற நீ எனக்கு எப்பப்பா சந்தோஷத்தைத் தரப்போறே?''

''அப்பா... திரும்பவும் என் கல்யாணப் பேச்சா?''

''தப்பென்ன கல்யாணராமா அதுல இருக்கு. என் நிலையைக் கொஞ்சம் நினைச்சுப் பாரு...''

''வேண்டாம்பா... நான் கல்யாண ராசியே இல்லா தவன். பை த பை உங்களுக்கு இன்னொரு குட் நியூஸ்?''

''என்ன?''

''அனேகமா நாம அடுத்த மாசம் நியூயார்க் போயிடுவோம்.''

''நியூயார்க்கா... இந்த அமெரிக்கால இருக்க அந்த ஊர்தானே?''

''அதேதான். எங்க ஃபேக்டரியோட மார்கெட்டிங் டிவிஷன் அங்க இருக்கு. அதுக்கு என்னை இன்சார்ஜ் எடுத்துக்கச் சொல்றா. நானும் உங்ககிட்ட கேட்டுட்டுச் சொல்றேன்னு சொன்னேன். என்னப்பா உங்களுக்கு சந்தோஷம்தானே?''

''உத்யோகத்துல மேலே போறதும் பொறுப்புகள் எடுத்துக்கறதும் ரொம்ப சந்தோஷமான ஒண்ணுதான் கல்யாணராமா. ஆனா முழு சந்தோஷமே உனக்கு ஒரு நல்ல பொண்டாட்டி வரும் போதுதான்.''

''ஆரம்பிச்சுட்டேளா... முதல்ல இந்த சந்தோ ஷத்தை அனுபவிங்கோ. நான் குளிச்சுட்டு வரேன். இன்னிக்கு டிபன் நான் பண்றேன்,'' கல்யாணராமன்

பேச்சைக் கத்தரித்துக் கொண்டு உள்தாவி ஓடினாள். அவர் கண்களில் ஜலத்தாரைகள்!

ஆபீஸ்.

சர்வாலங்கார பூஷிதையாக ரஞ்சனி.

கேட்டைத் தாண்டி உள்ளே நுழையும்போது ஒரு ஃபியட்டில் இருந்துஇறங்கினான் கௌசிக். ஃபியட்டின் டிரைவிங் சீட்டில் ஜீன்ஸ் டி ஷர்ட்டில் ஒரு பெண். ஃப்ளையிங் கிஸ் கொடுத்து பை சொன்னவளாகக் காரைத் திரும்பக் கிளப்பினாள் அவள். கௌசிக் பை சொன்னபடி உள்ளே நுழைந்தான். ரஞ்சனியை கவனிக்கவில்லை.

ரஞ்சனியோ குழம்ப ஆரம்பித்துவிட்டாள்!

## 6

செக்ஷனில் வேலை பிடுங்கி எடுத்தது— மாசக் கடைசி வேறு டர்ன்ஒவர்; இன்வாய்ஸ் பில்; இன் வென்ட்ரிலிஸ்ட் என்று ஒவ்வொருவரும் ஆலாய்ப் பறந்து கொண்டிருந்தார்கள். கண்ணுக்குத் தெரியாத ஒரு பிரஷர் அவர்களைப் பிடித்தாட்டிக் கொண்டிருந் தது. ஆனாலும் அதில் எதிலும் சிக்கிக்கொண்டு அல்லா டாமல் கௌசிக் கூட வந்த அந்தப் பெண் யார் என்ப திலேயே உழன்று கொண்டிருந்தது ரஞ்சனியின் மனது.

கௌசிக்கோ ஏ.சி.யிலும் வியர்த்து வழிந்து கொண் டிருந்தான். ஒரு மூணாம் மனுஷியைப் போலவே ரஞ்சனியைப் பார்த்தபடி குறுக்கும் நெடுக்கும் நடந்த படி இருந்தான்.



இடையில் கல்யாணராமனிடம் இருந்து ரஞ்சனிக்கு அழைப்பு. அவன் அறைக்குள் அலைமோதல் குறை யாதபடிக்கு நுழைந்தாள்.

"வா ரஞ்சனி— அந்த லேலண்ட் ஆர்டர் ஃபைல்ல கரெக்‌ஷன்ஸ் சொல்லியிருந்தேனே முடிச்சிட்டியா?"

ரஞ்சனி பதிலேதும் சொல்லாமல் அந்தப் பெண்— அந்தப் பெண் என்று அதே நினைப்பில் இருந்தாள். அடேயப்பா என்ன ஒருவாஞ்சை? என்ன ஒரு குதூகலம் அவளிடம்—யாராக இருப்பாள்?

"சார்..."

"என்ன ரஞ்சனி?"

"கௌசிக்குக்கு அக்கா, தங்கைகள் உண்டா?"

"என்னம்மா நான் உன்கிட்ட லேலண்ட் ஃபைல் பத்திகேட்டா நீ கௌசிக் ஃபேமிலி பத்தி கேக்கறே— எப்பவும் அவன் ஞாபகம்தானா?"

அவள் மிடறு கட்டினாள்.

"சரி சரி சொல்லிட்றேன். கௌசிக்கிட்ட நீ இன்றும் அவன் குடும்பம் சூழ்நிலை பத்தியெல்லாம் பேசலேன்னு தெரியறது. ஐ வில் அரேஞ்ச்—வரப்போற சண்டே அவனோட நீ மகாபலிபுரம் வரை போய்ட்டு வா என் காரைத் தரேன்." கல்யாணராமன்கூட அவள் கேள்விக்கு பதில் தராதபடி ஆனால் சொல்ல வேண்டிய தைத்தான் சொன்னான்.

"சார்— நான் கேட்டதுக்கு நீங்க பதில் சொல் லலை"

"ஓ... சிஸ்டர்ஸ் இருக்காளான்னு கேட்டே இல்ல? ஐ ஆம் சாரி. எனக்குச் சரியா தெரியல. கேட்டு

வேணா சொல்றேன். நான் என்ன கேக்கறது. நீயே கேளேன். என்ன தயக்கம்?''

''...''-அவளிடம் மௌனம்... குழப்பம்-சலனம்.

எல்லாச் சனியனும்-

''ஆமா எதுக்குக் கேக்கறே? இந்த நாத்தனார் கொடுமை மாமியார் கொடுமை மாதிரி எதாவது இருக்கும்னா?''

''இல்ல சார்... நான் பாத்துக்கறேன்''-அவனுக்குப் பதில் சொல்லாதபடி அங்கிருந்து வெளியேறத் தொடங்கினாள். சீட்டில் போய் உட்கார்ந்தாள்.

''ரஞ்சனி நீ மோசம்பா... ஒண்ணும் இல்லாததுக்கெல்லாம் போட்டு அலட்டிக்கிறேடி...'' என்று அவளுக்குள்ளேயே ஒரு குரல். அதன் காரணமாகக் கொஞ்சம் வேலை ஓடியது. நடுநடுவே கௌசிக் மேல் ஒரு பார்வை.

அவன் கண்கள் இடுங்க பி.சி.யில் லயித்திருந்தான்.

'எப்படி இப்படி இவனால் இருக்கமுடிகிறது? என்னிடம் பேச எத்தனை விஷயம் இருக்கிறது? அப்பாவிடம் சொன்னியா... அவர்கள் என்ன சொன்னார்கள்? எப்போ நிச்சயதார்த்த தேதி? எத்தனை... எத்தனை கேள்வி இருக்கிறது. மகனே எப்படிடா உன்னால் இப்படி குட்டிப் பிசாசாக இருக்க முடிகிறது?'

கேள்விகள் கொத்தி எடுக்க நடுநடுவில் அவனைப் பார்த்தாள். பின் சேர்த்தாற் போல் ஒரு பதினைஞ்சு நிமிஷம் சர்வத்தையும் மறந்து இனி காகிதங்களையும் அச்சு உலகத்தையும் சர்வ நாசமாக்கப்போகிற கம்ப்யூட்டர் என்னும் ஒளித்திரையில் ஒட்டிப் பதிந்தாள்.

நடுவில் டீ டயத்திற்காக பெல் அடித்தது.



வெளியே ரிசப்ஷனில் பீங்கான் கிண்ணத்தில் கொண்டு வந்து வைப்பார்கள். போய் ஒரு உறிஞ்சு உறிஞ்சினால் தேவலை என்று தோன்றிற்று.

புடவை முந்தியைச் சரி செய்து கொண்டு எழுந்திருந்தாள்.

டீ குடிக்கப் போன இடத்தில் கௌசிக்கும் டீ குடித்தபடி இருந்தான். கூடவே அவன் கைகளில் ஒரு எரியும் சிகரெட் துண்டு புகை கசிந்து கொண்டிருந்தது. ரஞ்சனிக்கு யாரோ தொடையைத் திருகினது போல் இருந்தது. படபட என்று வந்தது.

கௌசிக்கும் நிமிர்ந்து பார்த்தான்.

''ஹாய் ரஞ்சனி...வா!'' என்று புகை உதடுகளில் பிரியக் கூப்பிட்டான். கலக்கம் குறையாதபடி அவனை நெருங்கினவள் அசட்டுச் சிரிப்பு சிரித்தாள்.

''ஏன் ஒரு மாதிரி இருக்கே?''

''ஒண்ணுமில்லை...ஒண்ணுமில்லை.''

''நோ. சம்திங் ராங்!'' சொன்னதோடு ஒரு உறிஞ்சு. புகை அவளைக் கமறச் செய்தது.

''நீங்க சிகரெட் பிடிப்பேளா?'' அதிக சப்தமின்றி கேட்டாள்.

''எப்பவாவது...மனதில் ப்ரெஷர் ஜாஸ்தி இருக்கும் போது ஒரு தம் அடிச்சாக் கொஞ்சம் ரிலீஃப் ஆ இருக்கும் நீ டீ சாப்டு. திருவேங்கடம் ஊத்திக் கொடுய்யா...''

அவனது கைகள் டீ வெண்டருக்குக் கட்டளையிட்டன.

''கௌசிக்.. இன்னிக்கு நைட் பார்ட்டி இருக்கு மறந்துடாதே...'' கூடவே தம் அடிக்கும் குமார் சொன்னதும் அவளைச் சற்று தைத்தது. 'காலையில் ஒரு பெண் இப்பொழுது சிகரெட், ராத்திரி பார்ட்டி..அவள் டீயை வாங்கும்போது கைகள் நடுங்கிற்று.

''ரஞ்சா—உடம்பு சரியில்லையா?'' அதைப் பார்த்த படியே கேட்டான் கௌசிக்.

''இல்ல—இல்ல...ஆமா என்ன பார்ட்டி?''

''நீயும் வரியா? நம்ம அக்கௌண்ட்ஸ் ராஜா ராமுக்கு ஆண் குழந்தை பொறந்திருக்கு. அதான் பார்ட்டிதரான்.''

''எங்க?''

''தாஜ் ஷெரட்டன்ஸ்!''

''ஆமாம்மேடம்... நீங்களும் வாங்க. கௌசிக்க அங்க பாருங்க வேடிக்கையா இருக்கும்.''

''ஏன்?''

''தண்ணி அடிச்சுட்டு தாம்தூம்னு குதிச்சா வேடிக்கையா இருக்காதா என்ன? இவன் தேவலாம். நம்ம மேனேஜரைப் பார்க்கணும் ஷர்ட் பேண்ட்டை எல்லாம் கழட்டிடுவார். சிந்து பைரவில சிவகுமார் ஆடின மாதிரி ஆட ஆரம்பிச்சுடுவார்—''

''யார் மேனேஜரா?''

''என்ன அப்படிக் கேக்கறீங்க— மேனேஜரான்னு! அவர் என்ன முனிவரா? இதை எல்லாம் நினைச்சே பார்க்கக்கூடாதுங்கறதுக்கு?''

''என்னால நம்ப முடியல..''



''இதுக்கே இப்படின்னா.. நம்ம டைப்பிஸ்ட் சாந்தா ஆட்றதைப் பார்த்தா என்ன சொல்வீங்க?'' கௌசிக்கின் தோழன் குமார் வரிசையாக சொல்லச் சொல்ல குருக்ஷேத்ரத்தில் அர்ஜுனன் பாணம் பட்டு பீஷ்மர் அம்புப் படுக்கையில் விழுந்தாரே.. அதுபோல இருந்தது ரஞ்சனிக்கு!

டீ டயம் முடிந்து மணி அடித்தது!

எல்லோரும் அவரவர் இருக்கைக்குப் புறப்பட ஆயத்தமானார்கள். பேப்பர் கப்புகள் டஸ்ட்பின்னில் நிரம்பி வழிந்தன. ரஞ்சனியின் மனசில் அதை விடக் கூடுதலாய் குப்பைகள்.

கல்யாணராமனின் அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தார் ஜெனரல் மேனேஜர் சந்தானம்.

''ஹாய் கல்யாண்...''

''வெல்கம் சார்...என்ன சார் இது சொல்லி அனுப்பியிருந்தா வந்துருப்பேனே?''

''இட்ஸ் ஓகே. பை தபை நியூயார்க் பிராஞ்ச் பத்திப் பேசலாம்னுதான் வந்தேன். அங்க வி ஹேவ் எ காட்டேஜ் சச் எஃபன்டாஸ்டிக் ஒன். வால் ஸ்ட்ரீட்ல இருக்கற நம்ம பிராஞ்ச் ஆபீஸ்ல இருந்து சில மைல் தூரத்துல மன்ஹாட்டன்ல இருக்கு கார் டிரைவர், குக், எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணியாச்சு. உங்க அப்பா வரார் இல்லியா?''

''டெஃபனட்டா! அவர் கூடத்தானே நான் அங்க தமிழ் பேச முடியும்?''

சந்தானம் சிரித்தார்.

''வாட் அபவுட் யுவர் மேரேஜ்?'' இந்தக் கேள்வி மட்டும் கல்யாணராமனை இடித்தது.

"நோ சார்...இப்ப நான் அதப்பத்தி நினைக்கறதா இல்லை."

"காரணமில்லாம நான் கேக்கல கல்யாணராமன். "காரணமில்லாம நான் கொஞ்சம் பர்சனலா பேசலாமா? வில் யூ ப்ளீஸ் நான் கொஞ்சம் பர்சனலா பேசலாமா? அந்த மானிட்டரை ஆஃப் பண்ணிடுங்களேன்."

"ஷ்யூர் சார்!"

"உங்களுக்கு போன் பண்றதுக்காக ரிங் பண்ணப் போ உங்கப்பா எடுத்தார். நியூயார்க் ட்ரான்ஸ்ஃபர் பத்திச் சொன்னப்போ இதைவிட அவனுக்குக் கல்யாணம் நடந்தா அதுதான் சார் அவனுக்கு இப்ப தேவையான லைஃப் ட்ரான்ஸ்ஃபர்னு ரொம்ப வருத்தத் தோட பேசினார். அப்படியே ஏழை பணக்காரன்கற பேதம் இல்ல. நல்ல பொண்ணுதான் பிரதானமா வேணும்னார். இதை என்கிட்ட சொல்றதுல என்ன சார் பிரயோஜனம்னு கேட்டேன். நானும் பாக்கறவா கிட்டல்லாம் சொல்றேன். யாராவது ஒருத்தர் எனக்கு உதவி பண்ண மாட்டாளான்னுதான் பாக்கறேன்னார். ரியலி வெரி பேத்தடிக். உங்கப்பாவை நீங்க இப்படி வருத்தப்பட வைக்கலாமா?"

கல்யாணராமன் மௌனம் சுமந்து அவரை வெறித் தான்.

"சொல்லுங்க கல்யாணராமன். உங்களத்தான் கேக்கறேன்." அவனும் மௌனம் கலைத்தான். நீண்ட பெருமூச்சு விட்டான்.

"சார்..நான் ஒரு கல்யாண ராசியில்லாதவன்" என்றான்.

அவர் உடனேயே சிரித்தார்...

"என்ன கல்யாணராமன் நீங்களும் போய் ராசிகீசின்னுண்டு.." மெல்லிசான இகழ்ச்சி அவர் பதிலில்.



"சார்...ஒரு பொண்ணுக்கு இரண்டு பொண்ணு என்னை மறுத்துட்டா நான் கூனோ குருடோ கூட இல்லை. இதை வேற எப்படிச் சொல்றது?"

"அவா இரண்டு பேர்தான் இந்த உலகமா?"

"நீங்க என்ன சொல்றேள்...?"

"உங்க லாஜிக்படி பார்த்தா என் பொண்ணை நாலு மாப்ளை வந்து பார்த்தா, பொருந்தலை! அஞ்சாவதுதான் முடிஞ்சது— என்னை என்னன்னு சொல்றது?"

"சாரி சார். பொருத்தமில்லேங்கறதுக்கும், பிடிக்க லைங்கறதுக்கும் நிறைய வித்யாசமிருக்கும்..."

"வாட் நான்சென்ஸ் யு ஆர் டாக்கிங். இரண்டுக்கும் பெரிய வித்யாசம் கிடையாது கல்யாணராமன். பிடிக்க லேங்கறத சிலர் நாசூக்காப் பொருத்தமில்லைன்னும் சொல்வா அதெல்லாம் விஷயமேயில்லை இந்த தேசத் துல கல்யாணமாகாத பொண்களுக்கா பஞ்சம்? எவ்வளவுபேர்...எவ்வளவுபேர் கறுப்பு, செவ்வா தோஷம், காசு பணமில்லைன்னு முதிர்கன்னியாவே இருக்கா தெரியுமா? உங்களுக்கு நிறையத் தாழ்வு மனப் பான்மை இருக்கு கல்யாணராமன்"

"இல்ல சார். ஒரு பொண்ணப் பார்த்தா கூனோ குருடோ அவளைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்பட்டேன். அந்த சமூகத்தை மாடு மாதிரி நினைச்சு வரிசையா நான் பல் பிடிச்சு பார்க்க விரும்பலை. இருந்தும் இரண்டு பெண்ணைப் பார்த் தேன். இரண்டும் ஃபணால்."

"முதல் கல்யாணத்தை விடுங்க. தட் வாஸ் என் ஆக்சிடென்ட். இரண்டாவதை என்னால அப்படி

எடுத்துக்க முடியலை. ரஞ்சனி தானே அந்தப் பொண்ணு?'

அவன் சிரம் ஆமோதிப்பாய் அசைந்தது.

"உங்களுக்கு என்ன குறைன்னு அவ மறுத்தா?''

"குறை...குறை...எனக்கு நடந்த விவாகரத்துதான் வேற என்ன?''

"இது ஒரு குறையா?''

"சார் இதுக்கு நான் என்ன பதிலைச் சொல்ல முடியும் இது ஒரு முடிஞ்ச விஷயம்.ப்ளீஸ்விட்டுங்கோ.''

"இல்ல கல்யாணராமன் என்னால விடமுடியாது. நான் ரஞ்சனிகிட்டையே கேட்கறேன்.''

"நோ...வேண்டாம். அவளுக்கும் நம்ம ஈ டி.பி. செக்ஷன் இன்சார்ஜ் கௌசிக்குக்கும் கல்யாணம் ஆகப் போறது ''

'தெரியும் கல்யாணராமன். உங்களை என்னால புரிஞ்சுக்கவே முடியல. நியாயமா உங்களுக்கு அந்தப் பெண்ணைப் பார்த்தா கோபம் வரணும். சரி வரலை போய்த் தொலையறது. அந்தப் பொண்ணுக்கு இங்க வேலை. அப்புறமா கௌசிக்கோட லிங்க்குன்னு நீங்க பண்ணியிருக்கறதப் பெருந்தன்மைன்னு சொல்றதா இல்ல பித்துக்குளித்தனம்ங்கறதான்னே தெரியல.'

ஜி.எம். சந்தானம் கிட்டதட்ட கல்யாணராமனின் அப்பாவைப் போலவே கவலை கலக்கம் என்று எல்லாமுமாகப் பேசினார்.

நெற்றியைத் தேய்த்துக் கொண்டான் கல்யாணராமன்.

"சாரி கல்யாணராமன்... ஏதோ என் மனசு பட்டதைச் சொன்னேன். வரேன்...''



—சந்தானம் கிளம்பினார். கல்யாணராமனுக்கு அவர் பேச்சு மூட்டிய வெப்பம் மூட்டம் போல மனதை மூடத் தொடங்கியிருந்தது.

ஸ்க்ரீனில் பார்வையைப் பதித்திருந்த கௌசிக்கின் தோள் மேல் ஒரு கரம் பதிகிறது. சட்டென்று திரும்பிப் பார்த்தவனைப் பார்த்துச் சிரித்தார் சந்தானம்.

"சார் நீங்களா...வாங்கோ உக்காருங்கோ.''

"உக்காரவரலை கௌசிக். கொஞ்சம் என் ரூமுக்கு வரியா?''

"ஷ்யூர் சார்...''

கிளம்பும்போது அங்கே ஒரு ஓரமாக உட்கார்ந்து ஃபைல் பார்த்துக் கொண்டிருந்த ரஞ்சனின் மேலும் அவர் பார்வை ஊடுருவியது. அவள் அரைமார்புக்கு கைகளை உயர்த்தி வணக்கம் தெரிவித்தாள்.

பதிலுக்கு அதை ஏற்கப்பிரியமில்லாதவர் போல முறைப்போடு வெளியேறி விட்டார் சந்தானம்.

ரஞ்சனி காலையில் இருந்தே குழப்பக் குவியலில் தான் இருந்தாள். இப்பொழுது சிகரம் ஏறினாள்!

பார்ட்டி ஹால்!

யாகசாலை போல ஒரே சிகரெட்புகை...சி.டிப்ளேயரில் என்ன வார்த்தை என்றே புரியாத ஆங்கில முனகல் பாடல் வட்ட வட்ட மேஜைகள் மேல் அழகிய கண்ணாடிக் கோப்பைகளில் அரக்கு நிறத்தில் விதம் விதமான மது வகைகள்...

அரை மனதாக உள்ளே நுழைந்த ரஞ்சனிக்கு சினிமாவுக்குப் போட்ட செட்டுக்குள் நுழைந்தாற் போல் ஒரு உணர்வு.

அவளைத் துல்லியமாகப் பார்த்து ''ஹாய். ரஞ்சனி...'' என்று அழைப்பு விடுத்தான் கௌசிக். கையில் மதுக்கிண்ணம் கூடவே அவனோடு காலையில் வந்த அந்தப் பெண்.

மேல் மார்பு கடற்கரை மைதானமாட்டம் திறந்து கிடந்தது. அதன் எதிரொலி ரஞ்சனி தனது மேலாக்கை இழுத்து விட்டுக் கொண்டாள்.

''ரஞ்சா இவ கிளாரா! என் கூட காலேஜ்ல படிச்சவ...காலேஜ்லன்னா இங்க NIIT. ரொம்ப போல் டானவ. உன்னை மாதிரி. மகா தைரியசாலி ''

''அதான் பார்த்தாலே தெரியறதே...''-ரஞ்சனி ஒரு தினுசாகப் பதில் சொன்னாள்.

''ஹலோ ரஞ்சனி...கிளாட் டு மீட்யூ...கிளாரா எனும் அந்தப் பெண்மணி கை நீட்டினாள்.

''பரவால்ல - நமஸ்காரம்''-ரஞ்சனியிடம் வெறுப்பு பளிச்சென்று தெரிந்தது

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொல்லிட்டு இந்த இடியட் இப்ப உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேங்கறான். கேட்டா நீ ரொம்ப அடக்கமான பொண்ணாம். நான் அடங்காப் பிடாரி யாம். நீயே சொல்லு ரஞ்சனி. இந்த மாதிரி குடிகாரப் பசங்ககிட்ட நாமல்லாம் அடங்கிக்கிடந்தா தேச்சுட மாட்டாங்க?''

கிளாராவின் விளக்கம் ரஞ்சனிக்குள் கசப்பை மெழுகியது. பார்வையின் போக்கில் மொத்த ஆபீஸே தண்ணியும் கையுமாக ஆடிக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. டெஸ்பாட்ச் கிளார்க் பஞ்சாட்சரம் பு ஆச்சாரமான மனிதர் கிராப்பை மீறி உச்சந்தலையில் ஒரு நாலணாவை முடிந்தாற் போல் சிண்டு தெரியும் அந்த ஆள் கூட இங்கே ஆடிக்கொண்டிருந்தார்.



ரஞ்சனி தன்னை அம்மியில் வைத்து யாரோ அரைப்பது போல உணர்கிறாள்.

கச்சிதமாக அதைப் பார்த்துக் கேட்டான் கௌசிக்.

''ரஞ்சா...உனக்கு இந்தச் சூழ்நிலை பிடிக்க லைன்னு நினைக்கறேன்.''

''யெஸ்...இந்தச் சூழ்நிலை மட்டுமல்ல...உங்களை யும்! உங்களைப் பத்தி நான் நினைச்சதெல்லாம்'தான் எவ்வளவு தப்பு.''

''நீ எதைத்தான் சரிய நினைச்சிருக்கே?''சாதாரண மாக அதே சமயம் குத்தலாக கௌசிக் சொன்னது கேட்டுச் சரலென்று குத்துவதுபோல அவனைப் பார்த் தாள் ரஞ்சனி.

''என்ன சொல்றேன் கௌசிக்.''

''உள்ளதச் சொல்றேன் ரஞ்சனி.''

''எது உள்ளது..என்கிட்ட என்ன பெரிசா குறையை பாத்துட்டேள். நான் நெருப்பு தெரிஞ்சுக்கோங்கே.''

''ரொம்பத் தப்பு... இந்த நெருப்பு தண்ணிங்கற உபமானங்கள்ளாம் சினிமாடயலாக்ல நல்லா இருக்கும். நிஜமாலுமே அப்படி இருந்துட்டா அப்புறம் யாரும் கிட்டையே வரமாட்டா. மனுஷன்னா குற்றம் குறை கள் ரொம்ப சகஜம் ரஞ்சனி. இதைப் புரிஞ்சுக்கோ.''

''இந்த சமாதானத்தைத் தொடர்ந்து தப்பு செய்ய விரும்பறவாளும். அதுல இருந்து தப்பிக்க நினைக்கற வாளும்தான் சொல்வா. நல்ல மனுஷன் சொல்ல மாட்டான்..''

''அப்படியா... அப்ப நீ தப்பே பண்ணாதவளா?''

''என்ன தப்பு பண்ணினேன் சொல்லுங்கோ?''

Road 641 028

"கல்யாணராமன் சார் என்ன தப்பு பண்ணினார் அதை நீ சொல்லு முதல்ல.."

"என்ன இது .. பேச்சு அவர்கிட்ட போறது? நான் அவர் தப்பு செய்ததாச் சொல்லலியே."

"அப்ப அவரை ஏன் கல்யாணம் பண்ணிக்கமாட்டேன்னு சொன்னே?"

"எனக்கு வரப்போற கணவர் என்னைத்தான் முதல்ல மனைவியா அடையனும். இன்னொருயொண்ணை மனசாலகூட தொட்டுருக்கக் கூடாதுங்கறது என் பாலிசி."

ரஞ்சனி கைகால்களை அசைத்துப் பேசிய விதத்தில் அசாத்ய அழுத்தம்!

## 7

ரஞ்சனியின் பேச்சைக் கேட்டு அதிகமாகவே சிரித்தான் கௌசிக். அது ரஞ்சனியைக் கீறியது. நிறைய வலியை ஏற்படுத்தியது.

"சிரிக்காதேள் உங்களை நினைச்சா எனக்குப் பத்திண்டு வரது..." வெடித்தாள் ரஞ்சனி...

நேற்று வரை புஷ்பவனமாக இருந்தவன்... தொடர்ந்து சிரித்தான் கௌசிக்.

ரஞ்சனி கோபித்துக் கொண்டு அங்கிருந்து புறப்படத் தயாரானாள். முன்னால் கைபோட்டுத் தடுத்தான்.

"விடுங்கோ... நான் கிளம்பறேன்."



"அப்ப நம்ம கல்யாணம்?"

"அது இந்த ஜென்மத்துல கிடையாது...."

"அவசரப்பட்டுப் பேசாதே ரஞ்சனி... ஏற்கனவே நீ நிச்சயம் வரை போனவ..."

"சுடுகாடு வரை போனாலும் நான் நான்தான். இதுக்கெல்லாம் பயந்து உங்கள மாதிரி நபருக்குக் கழுத்தை நீட்டமாட்டேன்..."

"ஆனா கல்யாணம் பண்ணிப்பே... அப்படித்தானே?"

"அது என் உரிமை. ஒரு நல்ல மனுஷன் கூடவா இந்த உலகத்துல இருக்க மாட்டான்?"

"அப்பக் கொஞ்சம் முந்தி வரை என்னை மனசுல சுமந்தியே அதுக்கு என்ன பதில்..."

"சுமந்தேன்... நல்லவர்னு நம்பி. தப்பானவர்னு தெரிஞ்சவுடன் இறக்கிட்டேன்.,"

"இத தானே கல்யாணராமன் சாரும் அவர் கல்யாணம் பண்ணிண்ட பொண்ணு விஷயத்துல பண்ணினார்?"

கௌசிக் மிக அழகாக ஊசியில் நூல் கோர்த்தான். அவள் திணறத் தொடங்கினாள்.

"என்ன மேடம் பதிலக் காணோம்..?"

"இப்ப எதுக்கு அந்தப் பேச்செல்லாம் .விடுங்க என்னை..." அவன் கத்தரித்துக் கொண்டு ஓடப் பார்த்தாள்.

"கோழை மாதிரி ஓடாதே... யோசி... யோசிச்சு பேசு."

''என்னத்தப் பேச.. என்னைப் பேசி ஏமாத்த முடியாது நீங்க..''

''பைத்தியமே நான் எங்க ஏமாத்தறேன். நீதான் உன்னை ஏமாத்திக்கறே.''

அவன் பதில் அவளைக் கவ்வியது.

''யோசி— கொஞ்சம் முந்தி என்ன சொன்னே...?''

''என்ன சொன்னேன்—?'

''நான் கல்யாணம் பண்ணிக்க விரும்பறவர் இன்னொரு பெண்ணை மனசால கூட நினைச்சிருக்கக் கூடாதுன்னு சொன்னியா?''

''ஆமா இப்பவும் சொல்றேன்...''

''அப்ப நீயும் அப்படித்தானே இருக்கணும்''

' நான் இல்லேன்னு யார் சொன்னது?''

''அப்ப என்னை நினைச்ச மனசால இன்னொருத்தரை நீ இனி நினைக்கமாட்டே... அப்படித்தானே?''

கௌசிக் மாட்டிய கொக்கி ரஞ்சனியை முதுகில் விழுந்து இழுத்தது. நிறையவே திணறினாள்.

மெல்லத் தன்னிடம் தவறு இருப்பது போல ஒரு பிரமைதட்டும் போது கௌசிக் அஸ்த்ரம் போலச் சொன்னான்.

''மனசுங்கற ஒண்ணப்பத்தி நீ தெரிஞ்சுக்கவோ புரிஞ்சுக்கவோ இல்லை... உன்னை மாதிரிதான் ரொம்பப் பெண்கள் இருக்காங்க. ஒண்ணு தெரிஞ்சுக்கோ. உப்பு புளிகாரம்னு சாப்பிட்ற மனுஷா நாம... கோபதாபங்கள் ஆற்றாமை அரிப்புகள் இருக்கத்தான் செய்யும், அதுல ரொம்பவும் வெதும்பிப் போயிட



கூடாதுங்கறதுக்காகத்தான் இப்படித்தான் இருக்கணும், இப்படி எல்லாம் இருக்கக் கூடாதுன்னு வரைமுறைகளை உருவாக்கினா...

அது நாம நம்ம வசதிக்காகப் போட்டுண்ட ஒரு கோடு. இந்தக் கற்பு சம்பந்தமான சமாச்சாரமெல்லாமும் அந்த ரகம்தான். இதை எப்படிக் கையாளணும்னு ஒரு கணக்கு இருக்கு.

உன்னை மாதிரி இருக்கறது ஒரு மனசு-அதுல ஒருத்தருக்குத்தான் இடம் தறதுல்லாம் கதைக்கும் கற்பனைக்கும் நன்னா இருக்கலாம்.

நிஜ வாழ்க்கைக்கு சாத்யமே இல்லை. இன்னிக்கு எந்தப் பொண்ணு கமலஹாசன் மாதிரி, ரஜினிகாந்த் மாதிரி அஜித் மாதிரி மாப்பிள்ளை வேணுமின்னு நினைக்காதவா?

இந்த மாதிரில போயிட்டாலே... புராணத் தியரிப்படி கற்பு போச்சே? அப்ப இந்த உலகத்துல இருக்கற எந்தப் பொண்கிட்ட. கற்பு இருக்க முடியும்..? இது ஆணுக்கும் பொருந்தும்.

ஆனா உண்மைல கற்புங்கறது இப்படி நினைக்கறதாலல்லாம் போயிடாது. அதப் புரிஞ்சுக்கோ.. ஈவன் ஒரு பொண்ணைப் பத்து பேர் சேர்ந்து கெடுத்துட்டான்னு வெச்சுப்போம்... அப்பக்கூட அவ கற்பிழந்தவ கிடையாது அவளுக்கு நடந்தது ஒரு விபத்துதான்.

கற்புங்கறது உடம்புசார்ந்த சமாச்சாரமே இல்லை. மனசு சார்ந்தது. மனசுங்கறதோ ஆசை, ரசனைன்னு பல விஷயங்களைச் சார்ந்தது.

ஆசையும் ரசனையும் எந்தக் காலத்துல ஒரே மாதிரி இருந்திருக்கு—சிறு வயசுல நாம ஆசைப்பட்ட

விஷயங்கள் இப்ப நமக்குப் பிடிக்கிறதில்லையே... ரசனையும் அப்படித்தானே? சின்ன வயசுல மரப்பாச்சி பொம்மை போதும்...விளையாடறதக்கு...இப்ப ஆடுவோமா...? மாட்டோமே...? இன்னிக்கு ஆசைப்படற விஷயத்தை நாளைக்கு விரும்பமாட்டோமே...இது தானே மனசோட இயல்பு..

இப்படி மாறிண்டே இருக்கற ஒண்ணால மாறாத ஒண்ணான கல்யாணத்தைத் தீர்மானிக்க நினைக்கறியே is it possible?

அப்படி நினைக்கறது சரியா...அது சரியா வருமா?

—கௌசிக் எங்கேயோ ஆரம்பித்து ஒரு வட்டமடித்துப் பின் சரியான இடத்திற்கு வந்து நின்றான். அவள் ஹேண்ட் பேக்கின் பிடியை முறுக்கியபடி பதில் சொல்லத் தெரியாமல் நின்றாள்.

ஒரு உண்மை அவளுக்கு தெளிவாகப் புரிந்தது.

அவளது தியரிப்படி அவளாலேயே இருக்க முடியாது என்பதுதான் அது...

முதன் முதலாகக் கௌசிக்தான் அவள் மனதில் பாய் விரித்தவன். இப்பொழுது அவனையும் இடத்தைக் காலி செய் என்று சொன்னால் கல்யாணராமனைப் போலவே தானும் ஆவது புரிந்தது.

போகட்டும் என்று கௌசிக்கை ஒப்புக் கொண்டாலோ முன்பே இந்த முடிவைக் கல்யாணராமன் விஷயத்திலேயே எடுத்திருக்கலாமே என்ற கேள்வி எழுந்தது.

மொத்தத்தில் குருட்டுத்தனமான ஒரு பிடிவாதக்காரியாக இருப்பதை அந்தத் தருணத்தில் புரிந்து கொண்டாள். அதற்குமேல் அங்கு நிற்கப் பிடிக்காமல் கிளம்பினாள். கௌசிக் அர்த்தத்தோடு சிரித்துக் கொண்டான்.



வீட்டுக்குள் துவண்டு போய் நுழைபவளை ராமச்சந்திரனும் தர்மாம்பாளும் ஒரு மாதிரிப் பார்த்தனர்.

நேற்று வரை வாழப் பிறந்தவள் போல நடமாடியவளுக்கு இன்று என்ன வந்தது?

தர்மாம்பாள் மெல்ல அவளை நெருங்கிச் சென்று கேட்டாள்.

"ரஞ்சா—ஏன் ஒரு மாதிரி இருக்கே?"

"ஒண்ணுமில்லம்மா..."

"என்னம்மா.. நிச்சயம் கல்யாணம்னு எவ்வளோ காரியம் இருக்கு. இப்பப் போய் நீ இப்படி இருந்தா எப்படி? சொல்ல மறந்துட்டேனே...உன் பாஸ் கல்யாணராமன் வந்திருந்தார்..."

ரஞ்சனி வெடுக்கென்று அம்மாவை ஏறிட்டாள்.

"எப்பம்மா.. எதுக்கு?"

"செத்த முந்திதாம்மா... அவர் நியூயார்க்குக்கு ட்ரான்ஸ்ஃபர் ஆகிப் போறாராமே?"

"ஆமாம்..."

"நாளைக்குக் கிளம்பறார் போல இருக்கு. அதான் வந்து சொல்லிட்டு உன் கல்யாண சம்பந்தமாவும் பேசிட்டு போனார்.."

"என்னன்னு .?"

"கௌசிக் நல்ல பிள்ளை.. ரொம்பப் பொருத்தமான ஜோடி. இந்த கல்யாணம் நல்லபடியா நடக்கணும்னு ஆசைப்படறேன். கல்யாணம் நடக்கும் போது நான் இங்க இருக்கப் போறதில்ல... ஆகையால் என் சார்பா ரஞ்சனிக்கும் கௌசிக்குக்கும் என்னோட வெட்டிங் பிரசன்டேஷன்னு சொல்லி ஒரு பார்சல் தந்துட்டுப் போனார்..."

தர்மாம்பாள் உள்ளே போய் ஒரு பார்சலை எடுத்து வந்தாள். ரஞ்சனி அதை வேகவேகமாக உடைத்து உள்ளே பார்த்தாள்.

உள்ளே ஒரு பட்டுப் புடவையும், பட்டு வேட்டித் துண்டும் இருந்தது. விலை இரண்டுக்குமாக முப்பதா யிரம் என்பதும் தெரிந்தது.

ரஞ்சனிக்கு கண்ணீர் பீறிட்டது.

ச்சே...என்ன ஒரு மனிதன் இவன்?

இவனை விடவும் அந்தக் கௌசிக் எந்த விதத்தில் உயர்ந்தவன்? அடுத்த கணம் கேள்வி பிறந்தது.

கௌசிக் பேச்சு உள் ஓடியது.

ஒரு நேர் கோடாய்த் தான் இருப்பதால் ஒரு பலனு மில்லை. நேர் கோடுகளைக் கொண்டு வாழ்க்கை ஓவியம் தீட்டவே முடியாது.

ஓவியம் என்பதே வளைவுகளும் நெளிவுகளும் கொண்டது தானே... ரசிக்க வேண்டியதை ரசிக்கத் தெரியாமல், மதிக்க வேண்டியதை மதிக்கத்தெரியாமல் மிதித்துவிட்டேனே...?

''அம்மா'' கேவினாள் ரஞ்சனி.

''என்னடா கண்ணு...''

''எனக்கு அவர்தாம்மா வேணும். இந்த கௌசிக் வேண்டாம்மா...''

''என்னடி இது பைத்தியக்காரி மாதிரி பேசறே—''

''நான் அவாளைவிட மோசம்மா...தெளிவு, தீர சிந்தனை எதுவுமே என்கிட்ட இல்லம்மா—''

''ஐய்யே –என்ன ரஞ்சா என்னவோ பேசறே!''



''ஆமாம்மா...நான் அவரைச் சரியாப் புரிஞ்சுக்காம நடந்துண்டுட்டேன், கௌசிக்தான் என் கண்ணைத் திறந்தது.''

—''ஏன்னா—இங்க வாங்கோ இவ என்னென்னவோ சொல்றா ''

''கேட்டுண்டுதான் இருக்கேன் தர்மா— அவ இப்பத்தான் சரியா பேசறா—நீதான் இப்பத் தப்பாப் பேசறே...''

''நீங்க ஒண்ணு. முதல் நிச்சயதார்த்தம்தான் இல்லேன்னு ஆயிடுத்து...அடுத்தது நிச்சயமளவு கூட வராது" போயிடும் போலத் தெரியறதே... ஏண்டி நீதானே கௌசிக்கைப் பார்த்தே...கல்யாணம் பண்ணிக் கறேன்னே. இப்ப மனசு மாறினா என்ன அர்த்தம்?''

''அம்மா..நீ சொல்றதெல்லாம் உண்மைம்மா. ஒரு விதத்துல நான் இப்படி முடிவெடுக்கவே காரணம் கௌசிக்தான்மா. அவரும் நல்லவர்தான். நான் இல்லேன்னு சொல்லலை.

ஆனா நான் கல்யாணம் பண்ணிக்கறதா இருந்தா அது கல்யாணராமன் சாரைப் பண்ணிக்கறதுதான் நியாயம். அவரை நான் வேண்டாம்னு சொல்றதுக்குச் சொன்ன காரணங்கள் உப்பு புளி பெறாது.

என்னை ஒருத்தர் வேண்டாம்னு சொல்றதுக்கு அதைவிடப் பலமான காரணங்கள் இருக்கு.

மனசைப் பத்தியோ வாழ்க்கையைப் பற்றியோ எனக்குச் சரியான தெளிவில்லாமப் போயிடுத்தும்மா. நீயும் என்னை மன்னிச்சிடு.

நான் கல்யாணம்னு ஒண்ணு பண்ணின்டா அது கல்யாண ராமனோடதான் இல்லேன்னா எனக்குக் கல்யாணமே வேண்டாம்மா...'

ரஞ்சனி விசும்பி அழுதபடி சொன்னதைக் கேட்டு தர்மாம்பாள் குழம்புகிறாள். ஆனால் ராமச்சந்திரனோ நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

'இப்பதான் நீ என் பொண்ணு...'' என்றபடி எழுந்தவர் முதல் காரியமாகப் பிச்சுமணி ஐயருக்கு போன் போடக் கிளம்பினார்.

அதற்கும் முன்பாகக் கௌசிக்கிற்கு—

பப்ளிக் டெலிபூத்தில் கௌசிக்கைப் பிடிக்கவும் முதலில் அவன் ''ரஞ்சனி மாறிட்டாளா?'' என்று தான் கேட்டான்.

''மாறிட்டா கௌசிக். நீ உன் பாஸ் மேல் இருக்கற அக்கறையாலேயும், ரஞ்சனிக்குப் புத்தி வரணுமகறதுக்காகவும் செஞ்ச வேலைகளுக்கு என்னோட நன்றி. உன்னை எப்படிப் பாராட்டறதுன்னே தெரியலியே'' என்றார் ராமச்சந்திரன்.

''சார்... பிரத்யேகமாக எதையும் செய்யலை. எப்பவும் பண்றதைக் கொஞ்சம் ட்ரமாடிக்காப் பண்ணினேன். அவ்வளவுதான். ரஞ்சனி சரியான கிணற்றுத்தவளை. அதான் மிரண்டு போய்ட்டா.

எப்படியோ எல்லாம் நல்லபடியா நடந்தா அதி போதும் சார் எனக்கு .''

' சந்தோஷம்ப்பா...'' ராமச்சந்திரன் அவனிடமிருந்து அடுத்து பிச்சுமணி அய்யருக்கு போன் பண்ணினார்.

''அய்யர்வாள் நான் சம்பந்தி பேசறேன்.'' குரலில் உற்சாகம் கொப்பளித்தது.

''சொல்லுங்கோ...''

''என் பொண்ணு மனசுமாறிட்டா. பண்ணிண்டா உங்க பிள்ளையைத்தான் பண்ணிப்பாளாம் ''



''அப்படியா...சந்தோஷம். ஆனா இவன் என்ன சொல்வானோ தெரியலியே.. நியூயார்க் கிளம்பற மும்முரத்துலன்னா இருக்கான்?''

''அப்படிச் சொல்லப்படாது. வேதாளமே முருங்கை மரம்விட்டு இறங்கிடுத்து. விக்கிரமாதித்தனுக்கென்ன...?''

''வரட்டும்... பேசறேன்...'' பிச்சுமணி அய்யர் அதிகம் வளர்க்காமல் நெகிழாமல், நிரடாமல் பேச்சை முடித்துக் கொண்டார்.

அது ராமச்சந்திரனை என்னவோ செய்தது.

நேரிலேயே போனால்?

கேள்வி கொத்தவே கிளம்பி விட்டார். ரஞ்சனி தானும் வருவதாகச் சொல்லி உடன் சேர்ந்து கொண்டாள்.

''அவரண்ட நேர்ல கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கறேன்.'' என்றாள். ராமச்சந்திரனுக்கு அது மிகப் பிடித்திருந்தது.

''அதுதான் சரி ரஞ்சனி...நீ அன்னிக்குக் காட்டின நெஞ்சழுத்தத்துக்கு அதான் சரியான பரிகாரம்.''

ஆட்டோவில் இருவருமாகப் பயணித்தபடி பேசுகின்றனர். ரஞ்சனி துடிப்பின் உச்சத்துக்கே போய்க் கொண்டிருந்தாள்.

ஆட்டோ ஆடிக்குலுங்கியபடி ஒரு வழியாகக் கல்யாணராமன் Flat முன் நிற்கவும் இறங்கிக் குதித்து உள் ஓடினாள்.

போன வினாடி நெற்றியில் ஆணியின் கூர்முனை தாக்கினது போல தேங்கி நின்றாள்.

ஹாலில் கல்யாணராமன் மாலையும் கழுத்துமாக—உடன் ஆபீஸில் ஹெல்ப்பராக பணிபுரியும் ஒரு கால் இல்லாத பெண்ணான பத்மாவதி.

நிலை கால் அருகே வந்து நிற்கும் ரஞ்சனியைப் பார்த்து "வா ரஞ்சனி வா" என்கிறான் கல்யாணராமன். பின்னாலேயே வரும் ராமச்சந்திரன் கல்யாணராமனைப் பார்த்து நொறுங்கிப் போக, "நீங்களும் வாங்கோ மாமா..." என்கிறான்.

உள்ளே தலையைத் தொங்கப் போட்டபடி உட்கார்ந்திருந்தார் பிச்சுமணி ஐயர்.

'சாரி ரஞ்சனி... நான் யாருக்கும் சொல்லலை... கல்யாணம் கல்யாணம்னு அப்பா அனத்தி எடுத்திண்டிருந்தார். சரி அப்பா ஆசையை நிராசையாக்காமக் கல்யாணம் பண்ணிக்க முடிவு செய்தேன். பத்மா கிட்ட கேட்டேன். சம்மதிச்சா. பண்ணிண்டுட்டோம். பல வகைல எனக்கு இப்ப சந்தோஷம்.

உனக்கு நான் முதல்ல நன்றி சொல்லணும். நீ மட்டும் அன்னிக்கு மறுத்திருக்கலேன்னா இன்னிக்கு பத்மாவுக்கு ஒரு வாழ்க்கை கிடைச்சிருக்காது. மாமா எங்களை ஆசிர்வாதம் பண்ணுங்கோ—" கல்யாணராமன் ராமச்சந்திரன் காலில் விழுந்தான்.

அவருக்கு இதயமே வெடித்து விடும் போல இருந்தது. கஷ்டப்பட்டு உணர்ச்சியை அடக்கிக் கொண்டார். ஆசிர்வாதம் செய்தார்.

பிச்சுமணி அய்யர் ஒரு வார்த்தை பேசவில்லை. எதைப் பேசுவது? என்ன பேசுவது?

வெளியே வந்த போது எதிரில் செய்தி தெரிந்து கௌசிக் மற்றும் ஆபீஸ் பட்டாளமே வந்திருந்தது.

ரஞ்சனியை பார்த்த கௌசிக் ஒரு விநாடி நின்றான்.



"சாரி ரஞ்சனி—கல்யாணராமன் சாரோட நீ சேரணும்னுதான் நான் நேத்துக் கொஞ்சம் ஓவரா நடந்துண்டேன். ஆனா அவர் இப்படித் திசை மாறிப் போவார்னு நான் எதிர்பார்க்கல. அவர் என்னை ஏமாத்திட்டார். ஆனா நான் உன்னை ஏமாத்த விரும்பல..."

ரஞ்சனி அடுத்த கணம் அவனை நிமிர்ந்து குத்துவது போல பார்த்தாள். சொல்லத் தொடங்கினாள்.

"சாரி கௌசிக்— புருஷபந்தம்கறது இப்படி இஷ்டத்துக்கு மாத்திக்கற ஒண்ணா இருக்கக் கூடாது.

இப்ப உங்க விருப்பத்துக்கு நான் சம்மதிச்சா பழைய ரஞ்சனியை விட மோசமானவளா ஆயிடுவேன். அந்த ரஞ்சனி ஒரு நல்ல மனுஷன் அவளைத் தேடி வந்தப்போ வேண்டாம்னா இந்த ரஞ்சனி அதே மனுஷன் வேண்டாம்னு போயிட்ட பிறகும் விடமுடியாதவளா இருக்கா.

கல்யாணராமன் சார் அவரோட தியாகத்தை நிரூபிச்சிட்டார். எனக்கு இனிமேதான் அது ஆரம்பம். நான் நடத்தின புருஷவேட்டைல எனக்கு இந்த ஞானமாவது கிடைச்சிதே—" சொல்லிவிட்டு விறுவிறுவென்று நடப்பவளைச் சிலையாக நின்று பார்க்கத் தொடங்கினான் கௌசிக்.

○

# தூண்டிலில் ஒரு திமிங்கலம்

## 1

'அது' ஒரு பெக்கூலியர் அசைன்மெண்ட். அதை வெற்றிகரமாக முடிப்பதற்காக ரேகா விற்கு இருபது லட்சம் சம்பளம் பேசப்பட்டது. கூடவே ஒரு சாண்ட்ரோ கார், செல்ஃபோன், டெய்லி பேட்டாவாக ஐந்தாயிரம்!

ரம்யா

ரம்யமாகத்தான் இருந்தாள். பார்வையில் மத்தாப்பு கொளுத்தினாள். மார்பில் முயல் குட்டி வளர்த்தினாள் நடையும் விட்டெறிந்தது.

ஜீன்ஸ் பேண்ட், டிஷர்ட், சல்வார், மிடி யுகத்தில் தல்லி பட்டில் பாவாடை, வாடாமல்லி வண்ணத்தில் தாவணி என்று வித்யாசம் வேறு காட்டினாள்!

NIITயே அவளை டாவடித்துக் கொண்டிருந்தது. தனஞ்ஜெயன் சற்று கூடுதலாக மனதில் அவளோடு டூயட்டே பாடிக் கொண்டிருந்தான்.

அவளுக்கோ தன்னை யார் எப்படிப் பார்க்கிறார் கள் என்பதிலெல்லாம் அக்கறையே இல்லாத மாதிரி தெரிந்தது. கம்ப்யூட்டர் முன்னால் மௌஸை பிடித்துக் கொண்டு ஸ்கிரீனில் அம்புக் குறியோடு அலைந்து



கொண்டிருந்தாள். நடு நடுவே அந்த தாவணிச் சனியன் மட்டும் நழுவி நழுவி முன் அரை கோளங்களின் விம்முதலை காட்டிக் கொண்டேயிருந்தது.

தனஞ்ஜெயன் அதைப் பார்க்கும் போதெல்லாம் தொண்டை வறண்டு போவான்.

இன்றும்...

வழக்கம் போல அவளிடம் வழியவும் செய்வான்.

இன்றும்...

''ரம்...''

''உம்...''

''என்னம்மா பி சி ஐ. கரைச்சு குடிக்காம விட மாட்டே போலருக்கே...?''

''இட்ஸ் இம்பாசிபிள். இது என்ன சக்கரையா தண்ணிலல்லாம் கரையறதுக்கு...?''

அவள் அவனைத் திரும்பிப் பார்க்காமல், ஏறிடா மல், கம்ப்யூட்டரிலிருந்தும் கவனத்தை திருப்பாமல் சதாய்த்தாள்.

''ஜோக்கா?''

''உம்— ரசிக்கத் தெரிஞ்சவங்களுக்கு.''

''கடி.''

''எப்படி வேணா வெச்சுக்கோ...''

''கொஞ்சம் பாத்துத்தான் பேசேன்.''

''சரி—என்ன?'' அவள் திரும்பினாள். அந்த அதிர்வில் திரும்ப தாவணி சரிந்தது.

அவள் வெளிறிப் போனான். சிகரெட் பிடித்து உலர்ந்த உதட்டை எச்சில் ஈரத்தால் பூசினான்.

அவள் புரிந்து கொண்டு தாவணியைச் சரிசெய்து கொள்ளத் தொடங்கினாள். ஆனால் சற்று நிதான மாகவே... அந்த நிதானம் சிதையாமல் கேட்டாள்.

"என்ன லவ் பண்ணனுமா?"

அவனுக்கு குண்டூசி ஒன்று ஒரு மில்லி மீட்ட தோலுக்குள் ஏறியது போல் இருந்தது.

"கரெக்டா கண்டுபிடிச்சிட்டியே?" மிடறு கூட்டிய படி கேட்டான்.

"எனக்கு ஆட்சேபணை இல்ல. ஆனா கல்யாண பண்ணிக்கணும்." சாதாரணமாக சோப்பு வாங்கினா பிளேடு இலவசம் என்கிற மாதிரி சொன்னாள் அவ ஆற்றில் விழுந்த மரத்து தேங்காய் அதன் போக்கி இழுத்துச் செல்லப்படுவது போல உணர்ந்தான். பி பேசினான்.

"அறைவே....பல்லு போகும்....இன்ஸ்டியூட்டே திரும்பிப் பார்க்கும்னு நினைச்சேன். இப்படி ஒ பதிலைச் சொல்லி என்னை உலுக்கிட்டியே ரம்."

"இதுவா என் கேள்விக்கு பதில்...?"

"உலுக்கிட்டேங்கறேன்... புரியலையா? என்னால நம்ப முடியல."

"திரும்பவும் சுத்தி வளைச்சு பதில் சொல்றே நேரா சொல்லு தனா. கல்யாணம் பண்ணிப்பியா?"

"ஷ்யூர்! ஷ்யூர்! ஷ்யூர்! போதுமா?"

"என்ன கோர்ட்ல பதில் சொல்ற மாதிரி சொல்ற?"

"லட்சம் தடவை கூட சொல்வேன். ஆமா என்னை என்ன ஜாலிக்கு லவ்வற கேப்மாரின்னு நினை சிட்டியா?"



அவள் ஆமோதிக்கும் உணர்ச்சிகளை முகத்தில் ஓடவிட்டாள். அப்படியே சுற்றி ஒரு பார்வை பார்த்தாள். பலர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக மாஸ்டர் மகேந்திரன், இவள் பார்க்கவும் அவர் நெருங்கி வந்தார்.

"என்ன ரம்யா...ஏதாவது பிராப்ளமா?"

"நத்திங் சார், தனா ஒரு டவுட் கேட்டான். அதான்."

"சப்ஜெக்ட்லையா?"

"நோ...யெஸ், யெஸ்..."

"தென்... நான் எதுக்கு இருக்கேன்? மிஸ்டர் தனஞ்ஜெயன் கமான்-என்ன பிராப்ளம்?"

மகேந்திரன் அவனைத் தள்ளிக் கொண்டு போகத் தொடங்கினார். பொங்கி வழியப்போன பாலின்மேல் தண்ணீர் விட்டமாதிரி...

அவன் பி.சி.முன் இருவரும் போய் நின்றார்கள்.

"என்ன பிராப்ளம் சொல்லு..."

அவன் மிடறியபடி அவரைப் பார்த்தான்.

"நிறைய சினிமா பாப்பியா?"

பதில் சொல்லாமல் ஆமோதிப்பது போல் நின்றான்.

"உக்காந்து பதில் சொல்லு, பாப்பியா?"

"அ...ஆமாம் சார்."

"அதான் படிக்க வந்த இடத்துல மத்த வேலைல்லாம் பண்றே..."

"சார்..."

''கீப் கொயட். நான் சொல்றத மட்டும் நல்லா
கேட்டுக்கோ. இது இன்ஸ்ட்டிட்யூட். கம்ப்யூட்டர்
சம்பந்தமா படிக்கறதுக்காக இங்க வந்துருக்கே நீ நீ
பெரிய மில்லியனர் மகனா இருக்கலாம். தினம் ஒரு
கார்ல வரலாம். அதெல்லாம் எனக்கு விஷயமே கிடை
யாது.படிக்கறியா, எடுத்த கோர்ஸை சக்ஸஸ் ஃபுல்லா
முடிக்கறியான்னுதான் நான் பார்ப்பேன்.

உன்னால முடிக்க முடியாதுன்னு தெரிஞ்சா பாதிய்
லேயே கூட உன்னை உள்ள சேக்க மாட்டேன். எனக்கு
படிக்கவர்ற மாணவர்களைதான் பிடிக்கும்..''

அவன் உடனே கத்தரித்து எதையோ சொல்ல
வாயெடுத்தான். அவர் தடுத்து தொடர்ந்தார்.

''தெரியும்..நீ என்ன சொல்லப்போறேன்னு...நான்
காலேஜ் ஸ்டுடண்ட் இல்ல. ஜே.கே.கே. க்ரூப்
கம்பெனிஸ் ஜாய்ண்ட் எம்.டி. கம்ப்யூட்டர் பத்தி
தெரிஞ்சுக்கதான் வந்துருக்கேன். என்னை ஸ்டூடண்ட்
மாதிரி நினைச்சு பேசாதீங்கன்னு சொல்வே ஆம்
ஐ ரைட்?''

அவனது இமைத் துடிப்பில் ஆமோதிப்பு வெளிப்
பட்டது.

''ஐ ஆம் சாரி தனா..இது இன்ஸ்ட்டியூட் இங்க
படிக்க வர்றவங்களுக்கு என்ன வயசுன்னு நான்
பாக்கறது கிடையாது'எந்த வயசா அவங்க இருந்தா
லும் நான் அவங்கள ஸ்டுடண்டாதான் பாக்கறேன்.
அண்டர் ஸ்டேண்ட்.''

அவரது கேள்வியில் கனிசமாக அதட்டல்.
சாதாரணமாக தனஞ்ஜெயன் என்றால் இன்ஸ்ட்டியூட்
டிற்கே ஒரு வித மரியாதை கலந்த பயம் உண்டு.
அவனைப் பார்க்கும்போது !அவர்கள் வழிசலாய்
சிரிப்பதுண்டு.



ஒரு பெரிய தொழிலதிபரின் மகன்...பின்னாளில்
எதாவது வேலை விஷங்களில் உதவக்கூடும் என்கிற
எதிர்பார்ப்பு கலந்த பயபக்தி அது.

இதெல்லாம் துளிகூட தனக்கு இல்லை என்பது
போல விளாசினார் மகேந்திரன்.

தனஞ்ஜெயன் அதிர்ந்து போனான். எப்பொழுதும்
அளவிற்கான மரியாதை, மதிப்பு, உல்லாசம்,உற்சாகம்
என்று சித்தார்த்தனாகவே வாழ்ந்தவன்.

அவனுக்கு இந்த மாதிரி கண்டிப்பும் அதன் காரண
மாக வலியும் புதிது. முகம் துவண்டு போனது.

பார்த்துக் கொண்டே இருந்தாள் ரம்யா.

பரிதாபமாக இருந்தது.

அதே சமயம் மாஸ்டர் மகேந்திரன் ஒரு அறைக்
குள் புகுந்து கொண்டு ரகசியமாக ஒரு தொலைபேசி
எண்களை சுழற்றத் தொடங்கினார்.

தன் முன் வழுக்கையில் உட்கார்ந்த ஈயை கோபத்
தோடு அடிக்கப்போய் வழுக்கை பாகத்தில் அடித்துக்
கொண்ட போது மறுமுனையில் ஒருவர் வந்தார்.

''திஸ் ஈஸ் மிஸ்டர் கிருஷ்ணமோகன்...?''

''யெஸ்...''

''சார்! நான் மகேந்திரன்...''

''சொல்லுங்க.''

''உங்க சன் இன்னிக்கு ஒரு பொண்ணுகிட்ட
ரொம்ப வழிஞ்சுகிட்டிருந்தார். அதைப் பார்த்துட்டு
நீங்க சொன்னது மாதிரியே சௌண்டா அதட்டிட்
டேன்.''

''யார் அந்த பொண்ணு...?''

''ரம்யான்னு பேர் சார்... குடும்பப் பாங்கான
பொண்ணுதான்.''

''யாரா இருந்தாலும் சரி—தனா ஸ்லிப் ஆயிடக் கூடாது. பிகேர்ஃபுல்.''

''என் கண் எதிர்க்க தப்பு நடக்க விடமாட்டேன் சார்...''

''ஓ.கே...'' மறுமுனை முடங்கவும் இங்கே மகேந்திரனிடமும் முடக்கம்.

## 2

'கிருஷ்ணமோகனுக்கு பையன் என்றால் உயிர். பையனுக்கு பெண்கள் என்றால் பைத்தியம்... ஸோ... ஒரு பெண்ணைக் கொண்டு அவனை அடிக்க தீர்மானமாயிற்று...''

வெளியே பெரிய வாத நாராயண மரம். நிறைய அணில்கள் விளையாடிக் கொண்டிருக்க கீழே நிழல் பாகமெல்லாம் வாகனங்கள்.

அதில் பஜாஜ் ஸ்கூட்டி அருகில் காத்துக் கொண்டிருந்தாள் ரம்யா. தனஞ்ஜெயன் எதிரில் வரவும் அவனையே பார்த்தாள். அவன் நெருங்கி வந்தான்.

''என்ன... மாஸ்டர் ரொம்ப ஏறிட்டானா?''

''பச்ச்...''

''நீ என்ன சொன்னே?''

''என்னத்த சொல்ல...''

''மைண்ட் யுவர் பிசினஸ்னு சொல்றதுக்கென்ன?''

''நீ சொல்வியா?''

''எங்க போய் சொல்லிட்டு வா பார்ப்போம்.''



அவள் உடனே புறப்படக் காலெடுத்தாள். உடனே அவன் முதல் தடவையாக அவள் கையைப் பற்றி தடுத்து நிறுத்தினான்.

சினிமாவாக இருந்தால் இந்த நொடி, இசை அமைப்பாளர் 'தந்தனத் தந்தன தந்தன...' என்று கோரஸ் போட்டு குஷியான இசையை தொடுத்திருப்பார்.

நிஜத்தில் அதெல்லாம் நடக்கவில்லை மாறாக சிலர் பார்த்தனர்.

''ஏண்டா தடுக்கறே?''

''வேண்டாம் விட்ரு—''

''சரி—நீ சொல்றதால விட்றேன்.'' அவன் இப்படிச் சொல்லவும் அவள் சிரித்தாள். பின் கேட்டான்.

''என் கூட கார்ல பீச்சுக்கு வருவியா?''

''உம்...''

''தயக்கமா இல்லையா?''

''அதான் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லிட்டியே...

அவனுக்குள் கிக் ஏறியது. நாடி நரம்புகளில் குளுகோஸ் குதித்தோடியது. அவள் ஸ்கூட்டியை பூட்டிவிட்டு அவன் கார் கதவைத் திறந்து கொண்டு முன்னால் ஏறி அமர்ந்தாள்.

இன்ச்சுக்கு இன்ச் விளப்பளித்தாள்.

அவன் காரைக் கிளப்பினான். அது புயலை கை தட்டி அழைத்தது.

''மெள்ளப் போடா—எதுக்கு பறக்கறே?'' காருக்குள் அவள் சிணுங்கினாள். சிணுங்கும் போது மாராப்பை நழுவ விட்டாள். தனா மிகச் சூடானான்.

''ரம்... அந்த தாவணிக்கு ஒரு பின் போடக் கூடாது?'' சூடானபடியே கண்ணியமானவனாட்டம் வேஷம் போட்டான்

''போட்டுட்டா போச்சு'' என்றவள், ''ச்சீய்ய்...'' என்று வெட்கமும் பட்டாள்.

கடற்கரை...

கோடி கோடி லாரிகளில் வந்து கொட்டினா மணற் பெருவெளி.

மட்டக் குதிரைகள் பரிதாபமாக ஓடிக் கொண் டிருந்தன. பேல்பூரி, ஐஸ்க்ரீம், சுக்கு, சுண்டல், வடை கூட்டம் நடுவே ஒரு படகின் பின்னால் உரச உரச உரச நடக்கும் ஜோடிகள், கோணா மாணவாக கரை யேறி ஓய்விலிருக்கும் படகுகள். ஒன்றன் பின்னால் போய் இருவரும் உட்கார்ந்து கொண்டனர். அவன் பேச்சை ஆரம்பித்தான்.

''ரம்... என்னை உனக்கு நிஜமா பிடிச்சிருக்கா?''

''ரம்யான்னு முழுசா கூப்டேன், நான் என்ன லிக்கரா?''

''அதைவிட அதிக போதை தரக்கூடிய அழகு தேவதை நீ...''

''ஐய்யோப்பா... போதும் கவிதை கிவிதை பாடா டாதே...''

''கவிதை சரி... அது என்ன கிவிதை...?''

''நான் கவிதைன்னா, நீதான் கிவிதை.''

''ஏய்ய்...''

''விஷயத்துக்கு வா, எதுக்கு பீச்சுக்கு கூப்ட்டே?''

''உம்... கம்ப ராமாயணம் படிக்க காதலிக்கறவங்க கடற்கரைக்கு எதுக்கு வருவாங்க...?''



'தெரியாது... நீ தானே காதலிக்கிறே - நீயே சொல்லு''

''என்ன ரம்... திடீர்னு ஒன் சைடா பேசறே? நீ என்னை லவ்வலியா?''

''ஐ ஆம் ஸாரி தனா, எனக்கு காதல்ல அவ்வளவா நம்பிக்கை கிடையாது. கல்யாணம் பண்ணிக்கிறியா? சொல்லு பேசுவோம்...''

''காதலிக்கறதே அதுக்கு தானே?''

''யார் சொன்னது...? என் அக்காவை ஒருத்தன் அப்படி சொல்லிதான் ஏமாத்திட்டான். நம்ப இன்ஸ்ட் டியூட்ல பிரமிளா கேசும் அதுதானே?''

''ஓ...அதான் நீ இப்படி பேசறியா?''

''பின்னே... நீங்கள்லாம் மகா மகா ஜொள்ளுப் பார்ட்டிங்க காதல்னுவீங்க. கடற்கரைக்குன்னுவீங்க. அப்புறம் சினிமா டிராமா அப்படியே ஓட்டல் உரசல்... அப்புறம் கவுத்துடுவீங்க. கவுந்ததும் அப்படியே கழட்டி யும் உட்றுவீங்க.''

''சத்தியமா நான் அந்த மாதிரி ஆள் கிடையாது ''

''ஒட்டாதே...வனஜா, ராதிகா, ஆரோக்யமேரின்னு நீ யாரைப் பார்த்து ஜொள்ளு விடலை சொல்லு...''

''லுக்... ஜொள்ளு விட்றது வேற காதலிக்கிறது வேற...''

''எல்லாம் ஒரே கண்றாவிதான். வேற யார் கிட்டே யாவது போய் சொல் உன் விளக்கத்தை ..''

''நம்பு ரம்... நான் உன்னை மட்டும் தான் காதலிக் கிறேன்.''

''சரி நான் மாட்டேன்னா என்னடா பண்ணுவே? ஓடிப்போய் இந்தக் கடல்ல குதிச்சிடுவியா?''

''நிச்சயமா...'' சொன்னபடி அவன் எழத்தொடங்கினான்.

''ஏய் .. ஏய்... உக்காரு பயமுறுத்தாதே...'' அவன் அடக்கினாள். பின் அவனை குத்துப் பார்வை பார்த்தாள். லேசர் கற்றை ஒருமுனைப்பட்டு தாக்கிக் குடைகிற மாதிரி அவனும் உணர்ந்தான்.

''அப்படி பார்க்காதே ரம்... என்னை என்னவோ பண்ணுது?''

அவளுக்கு உடனே க்ளுக்கென்று சிரிப்பு வந்தது.

''எதுக்கு சிரிக்கறே?''

''இல்லே... இப்படி ஒரு பெண் பார்த்தா உடனே பதில் டயலாக் இதுதானா...? மாறவே மாட்டீங்கடா'' என்றாள்.

''ஆமா எத்தனை பேர் இப்படி சொல்லியிருக்காங்க உன் கிட்ட...''

''அது இருக்கும் ஒரு ஐம்பது பேருக்கு மேல...''

''நிஜமாவா?'' அவனிடம் பதட்டம் தொனித்தது.

''ஏன் பதட்டப் பட்றே... அழகா ஒரு பொண்ணு அதுவும் மெட்ராஸ்ல தனியாவே நாலு இடத்துக்கு போய் வரக்கூடிய சூழ்நிலை இருக்கும்போது ஆம்பளைங்க பாக்கறதும், ஐ லவ்யூங்கறதும் சகஜம் தானே?''

''அது சரி... அவங்க யாரையும் நீ காதலிக்கலையா?''

''ஐ லவ் யூன்னு, அவங்க சொல்லிட்டா வுடனே பதிலுக்கு நானும் காதலிக்கிறேன்னு சொல்லிடணுமா?''

''இல்லை... அதுல ஒருத்தர் கூடவா தேறலை?''



''நீ தேறிட்டியா என்ன... பெரிசா கேக்கறே...?''

''ரம்... என்ன நீ? நான்தான் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொல்லிட்டேன்ல.''

''ஏன் அதை ஒரு தற்காலிக சமாதானமா நீ சொல்லியிருக்கக் கூடாது.''

''சத்யமா இல்லை, என்னை நம்பு.''

''இதோ பார்... என்னை மட்டும்தான் உனக்கு தெரியும். அதுவும் ஒரு அஞ்சாறு மாசமா மட்டுமே. இன்னிக்குதான் நாம இரண்டு பேரும் இப்படி பேசிக்கிறோம். இதுக்கு முந்தி, ஹாய் ஹாய்தான்.''

''இது போதுமா நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்க?''

''நீ என்ன சொல்றே?''

''நான் யார்...என் அப்பா அம்மா யார்? என் ஜாதி என்ன? குலம் கோத்ரம்னு எவ்வளவு இருக்கு?'' அவள் முதன் முறையாக அர்த்தபூர்வமான கேள்விகளை அடுக்கிவிட்டு அவனைப் பார்த்தாள். அவனிடம் சில விநாடிகள் மௌனம். தலை முடி மட்டும் காற்றில் முன் விழுந்து லேசாக அலைந்தது சப்தம் போட்டது.

''என்னடா பேச்சக் காணோம்?''

''சரி சொல்லேன்.. நீ யாரு...உன்கப்பா அம்மா என்ன பண்றாங்க? ஐதிங்க்...உங்கப்பா ஒரு பெரிய ஆபீசராதான் இருக்கணும்.''-அவள் திரும்ப சிரித்தாள். பின் எழுந்து கொண்டாள்.

''என்ன ரம்.. பதில் சொல்லாம எழுந்திரிக்கறே...''

''வா போகலாம்...நீ நான் டாடா காட்டப் போற ஐம்பத்தி ஓராவது ஆள்...''

''என்ன சொல்றே?

'வேண்டாம்...எதுவும் பேசாம நீ கிளம்பு. நான் உனக்கு ஒத்துவர முடியாது.''

'என்ன ரம்யா இப்படி திடீர்னு குண்டத் தூக்கி போட்றே...?''

''ஆமாம்...நான் பாகிஸ்தான், நீ கார்கில்...குண்டு போட்றேன். விட்டறா பேச்சு, கிளம்புவோம் கமான்... கமான்....''

''இதோ பார்...என் கேள்விக்கு பதில் சொல்லாம இது என்ன பேத்தல்?''

''நான் பேத்தல...நீதான் பேத்தறே...என்னா நீ பெரிய தொழிலதிபர் பிள்ளை இல்லியா?''

''என்ன சொல்றே ரம்யா...நான் இப்ப என்ன சொல்லிட்டேன்னு இப்படி எல்லாம் பேசறே?''

'தனா...இப்ப சொல்றேன் நல்லா கேட்டுக்கோ. என் அப்பா யார்னு எனக்குத் தெரியாது. அவர் ஆபீசரா, ஆண்டிப்பண்டாரமா, ஐ டோன்ட் நோ! எங்கம்மாவை ஏமாத்தி என்னை கொடுத்துட்டு ஓடிட்டாரு.

எங்கம்மா என்னை வளர்க்க பட்டபாடு கொஞ்ச நஞ்சமில்ல. இப்ப அவங்க உங்கப்பா போல ஒரு பணக்காரருக்கு வைப்பாட்டி. அந்த ஆள் பணத்தால தான், நான் படிச்சேன். டிகிரி வாங்கினேன். இப்ப NIIT'ல கம்ப்யூட்டர் கத்துக்கவும் சேர்ந்துருக்கேன் என் அக்கா ஒருத்தனை காதலிச்சான்னு சொன்னதெல்லாம் பொய். இப்ப சொல்றதுதான் உண்மை. இப்ப சொல்லு ஆர் யூ கோயிங் டு மேரி மீ .?''

-பளார் என்று ஒரு அலை சிச்சுவேஷனுக்கு ஏற்ப மேட்டுக்கரை ஏறி பாய்ந்து வந்து தனாவின் காலை நனைத்து விட்டு, பின் திரும்பிச் சென்றது. அவனிடம் விக்கித்த நிலை.



சரி அவன் அப்படியே நிற்கட்டும் என்பதுபோல அவள் புறப்படத் தொடங்கினாள்.

அதை ஒருவன் ஒளிந்த நிலையில் ரகசியமாக பார்த்துக் கொண்டிருந்தான்!

# 3

'கிருஷ்ண மோகனும் பெரிய கில்லாடி... தனது எதிரிகள் தனதுபிசினஸை நிர்மூலமாக்க எந்த எல்லைக்கும் போவார்கள் என்பது தெரிந்து நிறைய உளவாளிகளுக்குச் சம்பளம் கொடுத்து வைத்திருந்தார். அவர்கள் மூலமாக எதிரிகளின் சதித்திட்டம் அவருக்கு தெரிந்து விட்டது!'

கோடி பெறும் பங்களா-முகப்பில் பணக்காரர் களால் மட்டுமே (?) வளர்க்க முடிந்த விசிறி வாழை, ராஜபாளையம் நாய், போகன் வில்லாப் பெருமரம் நேபாளத்து சப்பை முகத்து கூர்க்கா இத்யாதிகள்.

சாண்ட்ரோவில் தனஞ்ஜெயன் வரவும் சலாமடித்து கதவைத் திறந்து வழிவிட்டான் கூர்க்கா.

போர்டிகோவில் தேங்கிய காரினின்றும் சோர்வுடன் இறங்கி நடந்தான் தனாவும்.

ஹாலில் அதிசயமாக ஹிந்துவின் மேல் மேய்ச் சலில் கிருஷ்ணமோகன்!

'எங்க போய்ட்டு வரே...ஏன் டல்லா இருக்கே?' போன்ற வழக்கமான கேள்விகளை கேட்காமல்

''பீச்ல நல்ல கூட்டமா தனா..?'' என்றபடியே அவனை ஏறிட்டார்.

LIBRARY ... Road ... 641 028

-அவன் புருவம் உடனே அம்பில்லாத வில்லாக அவரைப் பார்த்தது.

''என்னப்பா பாக்கறே...உக்காரு..''

''டக்கி..''

''டேய் நீ ஒரு எம்.டி.டா..ஆயிரக்கணக்கான தையல் மிஷின், நீடில்ஸ், ட்யூப், டயர்னு வெரைட்டி வெரைட்டியா இண்டியன் மார்க்கெட்டுக்கு புராடக்ட்ஸ் கொடுக்கற ஒரு குரூப்போட வருங்கால முதலாளி நீ.. எவளையோ பாத்து ஜொள்ளு விட்றதுக்காகவா படிக்கப் போறே...?''

படபடவென்று விஷயத்துக்கு வந்தார் அந்த பெரிய தலையும், அதில் பின் பாகத்தில் மட்டும் முடியும் முகத்தில் சின்ன கண்ணும் கொண்ட அந்தப் பணக்காரர்.

தனஞ்ஜெயன் அந்த அட்டாக்கை எதிர்பார்க்காத திணறலில் தடுமாறி நின்றான்.

''உக்காரு... உன் ஒவ்வொரு ஆக்டிவிடியையும் நான் கவனிச்சுகிட்டுதான் இருக்கேன். தெரிஞ்சுக்கோ! முதலாளியா லட்சணமா டிகினிடியோட நடந்துக்க வழியப்பாரு.

பொம்பளைங்கள பார்த்து ஜொள்ளு விட்றத விடு. அதிலே எனக்கு ஆட்சேபணையில்லை. எதாச்சும் லாட்ஜுக்கு போய்ட்டு வந்துடு. நான்லாம் அப்படித்தான்.

பத்தாயிரமோ இருபதாயிரமோ ஒழியட்டும்.

ஆனா உறவுமுறை மட்டும் வெச்சுக்காதே. அது ஆபத்து. உனக்கு மட்டுமல்ல— ஒட்டுமொத்தமாக இந்தக் குடும்பத்துக்கே...''

-பேசிவிட்டு எழுந்தவர் அதற்காகவே உட்கார்ந்திருந்த மாதிரி வெளியே கிளம்ப ஆரம்பித்தார். அவன்



தன்னை பொக்ரான் ஆக உணர்ந்தான். அவனது ப்ரைவசி அறைக்குள் நுழைந்தான். ஒளித்து வைத்திருந்த பீகார்டி ரம் பாட்டிலை எடுத்துத் திறந்தான். மடக் மடக் என்று குடித்தான். படுக்கையில் போய் பொத்தென்று விழுந்தான்.

போதை இனி அவனை பார்த்துக் கொள்ளும்.

ராதா கிருஷ்ணன் சாலையில், பன்னிரெண்டாது மாடியில் வங்காளவிரிகுடாவைப் பார்த்தபடி இருந்தது கிருஷ்ணமோகனின் கார்ப்பரேட் ஆபீஸ்.

உள்ளே நடனமாடும் ஒரு ஆறடி உயர நடராஜர் சிலை பார்ப்பவர்களை ஒரு சுண்டு சுண்டும் எப்பொழுதும் ஸ்டீரியோவில் குன்னக்குடி வயலினில் கசிந்து கொண்டிருப்பார். பத்தாதற்கு தசாங்க வாசம் வேறு—

தெய்வீகச் சூழ்நிலை.

கிருஷ்ணமோகனும் பின்புறத்து கண்ணாடிச் சுவர் வழியாக கடலைப் பார்த்தபடிதான் அமர்ந்து ஃபைல் பார்த்துக் கொண்டிருப்பார். முக்கியமான ஃபைல்களில் கையெழுத்து இடுமுன் வெளியே பார்ப்பார். ஒரு அரை கிலோ மீட்டர் தூரத்தில் சமுத்திரம் அதன் மேல் கப்பல். முன் பாகத்தில் சென்னைத் தரையில் இண்டு இடுக்கு விடாதபடி எழும்பி நிற்கும் கட்டிடங்கள் என்று பார்வைக்கு மிரட்சி தரும் காட்சிகளில் மேலே வானில் கருட வட்டமும் இருக்கும்.

கருடனைப் பார்த்துவிட்டு கிருஷ்ணா என்று முணுமுணுத்து விட்டு கையெழுத்து போட்டால் அந்த ஃபைல் சமாச்சாரங்கள் முழு வெற்றிதான்..

தன்முன் உள்ள டேபிளின் மேல் உள்ள கண்ணாடிக்கு கீழே ஒரு யோகியின்புகைப்படத்தையும் வைத்திருக்கிறார்...

கருடாத்ரி அவர் பெயர். இமயமலைப் பக்கமாய் கார்கில் மாதிரி ஏதோ ஒரு இடத்தில் இருப்பதாக சொல்வார். ஐந்து லட்சம் முதல் போட்டு சின்னதாக தொழில் தொடங்கியபோது அவரை யார் மூலமாகவோ சந்தித்ததாக ஞாபகம்.

அதன் பின் எதைத் தொட்டாலும் வெற்றிதான்.

அவர் சொன்னதுதான் இந்த கருட தரிசனமும் கூட!

ஐந்து லட்சத்தில் ஐந்து வருடத்திற்கு முன்பு தொடங்கிய தொழிலின் இன்றைய மதிப்பு ஐம்பது கோடிக்கும் மேல்..

மாசாமாசம் டர்ன் ஓவரே இப்பொழுது பத்து கோடி...

எல்லாம் திறமையாலா? அதிர்ஷ்டத்தாலா? இல்லை இரண்டின் கலப்பா?

கிருஷ்ணமோகனை கேட்டால் மர்மமாகச் சிரிப்பார். எந்த பதிலையும் சொல்ல மாட்டார். ரொம்பவும் நோண்டினால் 'கஷ்டப்பட்டு உழைச்சா யாரா இருந்தாலும் மேல வந்துடலாம்' என்று மட்டும் சொல்வார்..

இவரது பிரதான போட்டியாளர் இந்தர்ஜித் தாராசிங்! அவரிடம் இதைப் பற்றி கேட்கவேண்டும்.

'சத்யமா இது உழைப்பாலெல்லாம் இல்லை. இதுக்கு பின்னால ஒரு மர்மம் இருக்கு..' - என்கிறார் அவர்!

அது என்ன மர்மம்?

அதற்கு முன்னால் ஒரு நேபாள கதையை நாம் தெரிந்து கொண்டு விடுவது நல்லது..



இங்கே க்யானி என்னும் சீனாக்காரன் ஒருவனைப் பற்றியும் பேசியாக வேண்டும்.

இந்த க்யானி மந்திர தந்திரம் தெரிந்த பௌத்தன்.

நெடுநாள் வரை நவரத்ன வியாபாரம் செய்து வந்தவன் பின் ஏதோ ஒரு தாக்கத்தில் பௌத்த துறவியாகி விட்டான்.

நேபாளத்திலேயே ஒரு பௌத்த விஹாரத்தையும் கூட்டிக் கொண்டு 'கச்சாமி' சொல்லத் தொடங்கி விட்டான்.

அவனிடம் ஒரு வைரம் இருந்தது. டேபிள் வெய்ட் கண்ணாடி உருண்டை சைஸில்! ஆசையை துறக்க வேண்டும் என்றால் முதலில் அதைத் துறக்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

நாலா பக்கமும் அகல் விளக்கேற்றி விட்டு நடுவில் வைத்தால் லீக்கோ கரி வெந்து செம்மை கக்குகிற மாதிரி காட்சி தரும்.

அப்படியே உள்ளங்கையில் ஏந்திக்! கொண்டு சூரியனைப் பார்த்தபடி காட்டினால் அந்த சூரியன் இறங்கிவந்து கை மேல் அமர்ந்து கொண்டு விட்ட மாதிரி தோன்றும்.

பாரசீகம் பக்கமாக வியாபார விஷயமாக போன போது வாங்கி வந்த வைரம். கோஹினூர் வைரத்துக்கும் ஒருபடி மேல் என்பான்.

அதை விற்றுத்தான் விஹாரத்தை கட்டிக்கொண்டு அன்றாடம் விஹாரம் நடத்தி அவன் வழி பார்த்துக் கொண்டான் என்பார்கள்.

அதை வாங்க ஆசைப்பட்டவர்களில் இந்தர்ஜித் தாராசிங்கும் ஒரு ஆள்.

வெறுமனே அதை விலைக்கு வாங்கி வைத்துக் கொண்டு, பின் நல்ல விலைக்கு விற்று விடுவது தாரா சிங்கின் நோக்கமல்ல. தாராசிங்குக்கும் அப்பொழுது மகாசிரமதசை... 'அந்த தசையின் பாதிப்பில் இருந்து தப்பிக்க உனக்கு வைரம் வழி செய்யும்.

அது உன்னிடம் வந்து விட்டால் நீ குபேர புத்ரன்' என்று ஒரு வைர வியாபாரி அவனிடம் சொல்லியிருந்தார்.

'எப்படி?' என்ற கேள்விக்கு 'அது இருக்கும் இடத்தில் அஷ்டலட்சுமி வந்தாக வேண்டும் என்பது நியதி' என்றவர், குறுகின காலத்தில் பணக்காரனாக அதை வாங்கு.. வாங்கிப் பார்த்து விட்டு சொல் என்றார். அப்படியே அதை ஒருவன் புத்தருக்கே பரிசாகத் தந்தான். அவன் அதை அவர் வேறொருவருக்குத் தந்தது என்றும் கூறினான்.

தாராசிங்கும் க்யானியிடம் அதை வாங்க ஆசைப் பட்டு அணுகியபோது க்யானி அம்பது லட்சம் என்று சாதாரணமாக சொன்னான்!

அவ்வளவு முடியாது முப்பது தா... முப்பத்தைந்து தா என்று பேரம் நடத்த க்யானி மறுத்து விட்டான்.

பின்னர்தான் அதை கிருஷ்ணமோகன் ஐம்பது லட்சம் கொடுத்து வாங்கியது நடந்தது. அன்றைய தினம் கிருஷ்ணமோகன் பேங்க் லோன் வாங்கி மெஷினரீஸ் வாங்கத்தான் அந்தப் பணத்தை வைத்திருந்தார்.

அவர் நல்ல நேரமோ கெட்ட நேரமோ கருடாத்ரி யோகி 'விடாதே வாங்கு... வாங்கிவிட்டு பிறகு சொல்.. அது அசாதாரண வைரம். உன் பெயர் ராசிக்கு பிரமாதமாக வேலை செய்யும்,' என்றார்.



தாராசிங்கும் சரி கிருஷ்ணமோகன் என்ன ஆகிறார் பார்க்கலாம் என்று கூர்ந்து கவனித்ததில் கருடாத்ரி யோகி சொன்னது பொய்யாகவில்லை.

அந்த வைரம் வந்த நேரம் கிருஷ்ணமோகன் இன்று மல்ட்டி மில்லியனர்!

தாராசிங்கிற்கோ நஷ்டத்திற்கு மேல் நஷ்டம்.

ஐய்யோ விட்டு விட்டோமோ என்று சதா புலம்பல். இந்த விஷயம் தெரிந்த ஒரே நபரும் தாரா சிங் மட்டும் தான்.

ஒருநாள் கிருஷ்ண மோகனை சந்தித்து அந்த வைரத்தை ஒரு கோடிக்கு கேட்டபோது, 'வெளியே போய்யா' என்று கிருஷ்ண மோகன் கத்தி விட்டார்.

தாராசிங்கிற்கு அவமானமாகி விட்டது.

மனதிற்குள் ஒரு சவாலும் உருவாகி விட்டது.

'அடேய் கிருஷ்ணமோகன்... அந்த வைரத்தை அடைஞ்சு தானும் பிசினஸ்ல உன்னைத் தாண்டலைன்னா நான் ஹரிகிஷன்சிங் மகன் இந்திரஜித் தாராசிங் இல்லை என்று முண்டா தட்டி விட்டுத்தான் வெளியிலேயே போனார்.

இத்தனைக்குப் பிறகும் கிருஷ்ணமோகன் சும்மா இருப்பாரா? தன் கஜானா போன்ற பீரோவில் வெள்ளிக் கிண்ணத்தில் வைத்திருந்த அதை எடுத்து பேங்க் லாக்கரில் பதுக்கி விட்டார்.

ஒருமுறை திருடன் வந்து பீரோவை உடைக்கப் பார்த்து முடியாமல் ஓடிப்போனான்.

இன்னொருமுறை ஒருகோஷ்டியே வந்து துப்பாக்கி முனையில் விட்டையே சல்லடை இட்டு தேடிப் பார்த்து விட்டு திரும்பிப் போனது...

எல்லாமே தாராசிங் ஏற்பாடு என்பது கிருஷ்ண மோகனின் அபிப்ராயம். இல்லை, நம்பிக்கை. மகனே... என்னிடமே வாலாட்டுகிறாயா என்று தாராசிங்கிற்கு கவுண்ட்டர் கொடுத்தார். அதன்படி ஒரு கோஷ்டி போய் தாராசிங் வீட்டையே அப்பளம் பப்படமாய் அடித்து நொறுக்கி விட்டு வந்தது. காரில் போகையில் தாராசிங்கையும் இழுத்துப் போட்டு கண்மண் தெரியாமல் மிதித்தது.

இவ்வளவு நடந்தும் தாராசிங் போலீசுக்கு போகவேயில்லை போனால் அங்கு தொட்டு இங்கு தொட்டு அந்த பேச்சு வைரத்தில்தான் போய் முடியும், பிறகு அதை பற்றி தெரிந்து கொண்டு இன்னும் பலர் போட்டியில் இறங்கலாம்.

ஏற்கெனவே ஒரு மத்திய மந்திரிக்கு அந்த வைரம் கிருஷ்ணமோகனிடம் இருப்பது அரசல் புரசலாகத் தெரியும் என்று கேள்வி. இந்த நிலையில் நாம் விவேகமாக நடந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தார்...

விவேகமாக என்றால் எப்படி?

மண்டையைப் போட்டுப் பிய்த்துக் கொண்டார்.

அப்பொழுதுதான் இந்த மாதிரி மகா ரிஸ்க்கான சென்சிடிவான வேலைகளை எல்லாம் செய்து தருவதில் ராமேஷ்வர் என்பவன் படுகில்லாடி என்று தெரிய வந்தது.

விஷயத்தை அவனிடம் விட்டுவிட்டால் போதும் வேலையை முடித்துக் கொடுத்து விடுவான்.

கேட்கும் சம்பளத்தையும் சல்லிக்காசு குறைவில்லாதபடி தந்துவிட வேண்டும். அட்வான்ஸாக அதில் பாதியை முதலிலேயே தந்து விட வேண்டும். விஷ



யத்தை ஒப்படைத்த பின்னால் ரிவர்கியர் போடுவதோ , இல்லை வேண்டாம் விட்டுவிடு என்றாலோ பணம் வாபஸ் கிடையாது. முழுப்பணத்தையும் வேறு தந்தாக வேண்டும்.

இதெல்லாம் கண்டிஷன்ஸ்...

தாராசிங் இந்த கண்டிஷன்களுக்கெல்லாம் ஒப்புக்கொண்டு ராமேஷ்வரிடம் போய்விட்டதாக கிருஷ்ணமோகனுக்குத் தகவல் வந்துவிட்டது. அது மட்டுமல்ல... ராமேஷ்வரின் திட்டம் என்ன என்றும் மோப்பம் பிடித்து விட்டார்!''

'அதன்படி கிருஷ்ணமோகனின் மகனை ஒரு பெண் காதலிப்பாள். அவள் வீட்டுக்குள் நுழைந்து வைரத்தை அபகரிக்கலாம்!'

-இந்த தகவலைச் சொல்லவே ஒருவன் கிருஷ்ணமோகனிடம் ஐம்பதாயிரம் பிடுங்கி விட்டான். கிருஷ்ணமோகனும் அதிலிருந்து படுஉஷாராகி விட்டார். மகனைக் கண்காணிக்க கழுகுப் பட்டாளம் வேறு. அவன் வாழ்வில் யாராவது குறுக்கிட்டால் அவர்களை ஒழித்து ஓரம் கட்ட இன்னொரு குருப்...

காசுள்ளவன் நினைத்தால்தான் கைலாசத்திலேயே ரூம் கிடைக்குமே...?

இதெல்லாம் என்ன...?

சுண்டைக்காய்!

## 4

'அந்த வைரத்துக்கு தினசரி பூஜை செய்ய வேண்டும். அதை கையில் வைத்து இரு கைக

மூடிக்கொண்டு தியானமும் செய்ய ளாலும் மூடிக்கொண்டு அதன் கதிர்கள் உடம்பை ஊடுருவ வேண்டும் அதன் கதிர்கள் சொன்னார். வேண்டுமாம் சுருடாத்ரிதான் மனித உயிரின் நலிந்த அதன் ஒளிக்கோடுகள் சேர்ந்து பருமனாகி, ஒளிக் கோடுகளோடு ஊடுருவும்போது நமது எண்ணம், உடம்பில் தேஜஸ் எல்லாவற்றிலும் நாம் வாக்கு, வலிமை பெறுகிறோமாம்.'

இன்ஸ்ட்யூட்!

சொல்ப வயதானவர்கள், நிறைய இளசுகள். காமம் உடம்பில் கடைக்கால் போடும் பருவம். ஆதலால் ஒவ்வொரு ஆண் வரையிலும் சம்பாதிப்பது, கார் வாங்குவது, தங்கம் சேர்ப்பது, அவளோடு பேசுவது என்பதை எல்லாம் விட பெண்ணைப் பார்ப்பது அவளோடு பேசுவது, காதலிப்பதுதான் ஒரு ஆணுக்கான உன்னதமான லட்சியம் என்று நினைத்து அதற்கேற்ப வளைய வந்து கொண்டிருந்தார்கள்.

ஒருவன் சாதாரணமாக அப்படி எல்லாம் மாட்டான். எதற்கெடுத்தாலும் ஓடினான். படிகளில் தாவினான். தலைமுடியை நொடிக்கு நொடி கோதிக் கொண்டான். கொச்சை ஆங்கிலமும் பேசினான். தேவையே இல்லாமல் ஒருத்தி எதிரில் செல்ஃபோனில் யாரோடோ பேசினான்.

பெண்களும் இந்த மன்மத வழிசல்களை ரசித்தார்கள். அஜித், விஜய், பிரசாந்த் பிம்பங்களோடு பொருத்தம் பார்த்தார்கள். நடு நடுவே பாடமும் படித்தார்கள்.

ரம்யா மட்டும் விதிவிலக்காக பாடம் மட்டுமே படித்தாள். பார்த்துக் கொண்டே இருந்தார் மாஸ்டர் மகேந்திரன். ஒரு நாள் கூட மிஸ் பண்ணாமல் வரும் தனஞ்ஜெயனை வேறு|காணோம்!



நேற்று போட்டபோடு அவனைக் குதறி விட்டதா.

இனி வரவே மாட்டானா...?-அவருக்குள் கேள்விகள் கொஞ்சம் நடுக்கமாக கூட இருந்தது. ஒண்ணா நம்பர் பணக்கார பையன். சினிமா வேறு நிறைய பார்ப்பவன். நிச்சயம் ஹாக்கி மட்டை, கிரிக்கெட் மட்டையைச் சுழற்றிக் கொண்டு ஆட்டோவில் ஒரு கூட்டம் வந்து இறங்கப் போகிறது. அப்புறம் என்ன? இன்ஸ்ட்யூட்டின் கம்ப்யூட்டர்கள் சில்லு சில்லாக நொறுங்கப் போகின்றன. ஸ்லோ மோஷனில் பார்த்து ரசிக்க இது சினிமா இல்லை. ஆனாலும் நினைத்து ரசிக்கலாம், ரசிப்பதா... அடித்தளமே அல்லவா ஆடப் போகிறது...

அவருக்குள் பயப் பெருக்கம்,

அதை தீர்த்துக் கொள்ளும் அரிப்பும் கூட...

மெல்ல ரம்யாவை நெருங்கினார்.

''ரம்யா...''

''......''

''கொஞ்சம் ரூமுக்கு வா.''—சொல்லிவிட்டு, தன் அறையை நோக்கி நடந்தார். அவள் சில நொடிகள் யோசித்து விட்டு, பின் தொடர்ந்தாள்.

அறையில்...

''ஆமா, தனஞ்ஜெயன் ஏன் இன்னிக்கு வரலை?''

''என்கிட்ட கேட்டா?''

''நேத்து, நீயும் அவனும் ஒண்ணாதானே கார்ல போனீங்க,''

''ஆமா போனோம். பீச்சுக்கு..''

"அப்ப காதலிக்கறதுன்னு முடிவு பண்ணிட்டியா?"

"சார்... உங்களுக்கு இப்ப என்னவேணும்? இதெல்லாம் என் பர்சனல்! நேத்து தனாவை அந்த வெறு வெறுத்துட்டு இன்னிக்கு எப்படி நீங்க இப்படி என்கிட்ட கேட்கலாம்?"

"சாரிம்மா... நான் நல்லதுக்குதான் சொன்னேன். குறிப்பா உன் நல்லதுக்கு. இன்னொண்ணும் சொல்றேன். நீ ரொம்ப ஜாக்ரதையா இருக்கணும் தனஞ்ஜெயன் பணக்கார பையன் மட்டுமில்ல. அவன் அப்பா தேசிய கொடியில இருக்கற அசோக சக்கரத்தையே ஓட விட்டு பாக்கற அளவு சக்தி உள்ளவர்.

அவர் சொன்னதாலதான் நான் தனஞ்ஜெயனை அப்படி திட்டினேன். அவருக்கு அவரோட மகன் யாரையும் காதலிச்சுடக் கூடாது. மீறி காதலிச்சா மகனை ஒண்ணும் செய்யா மாட்டார். காதலிக்கற பெண்ணை எதுவேணா செய்துடுவார். நீ ஜாக்ரதையா இருந்துக்கோ.."

—மகேந்திரன் மாஸ்டர் இதயத்திலிருந்து பேசுவதாக தோன்றியதால், கோபத்தை விலக்கிவிட்டு நன்றியோடு அதைக் கேட்டுக் கொண்டாள்.

"உங்க எச்சரிக்கைக்கு நன்றி சார். நான் தனஞ்ஜெயனை காதலிக்கிறேன். தனாவும் என்னை எனக்கு சமமா காதலிச்சா அவங்க அப்பா இல்ல... தாத்தா வந்தாலும் பருப்பு வேகாது. அத மட்டும் சொல்லிக்கிறேன்."

—சொல்லிவிட்டு நகர்ந்தாள். மாஸ்டருக்கு மண்டை வலித்தது. கண்டித்து எச்சரிக்கலாம் என்றால், வைத்து அதிகப்படுத்தி விட்டோமோ?



டைனிங்கில் கிருஷ்ணமோகன் வந்து அமரும் போது தனஞ்ஜெயனும் வந்து அமருவான். அவருக்கு கோதுமைக் கூழ்... அவனுக்கு பல்சுவை உணவு!

இன்று என்னாயிற்று?

வேலைக்காரன்போய் எட்டிப் பார்த்துவிட்டு வந்து சொன்னான்.

"ஐயா...சின்ன முதலாளி இன்னும் எழுந்திருக்க லீங்க.."

-உடனே கிருஷ்ணமோகனுக்கு இருப்பு கொள்ளவில்லை. எழுந்து விரைப்பாக நடந்தார். அறைக் கதவை திறக்கப் பார்த்தார். உள்ளே தாழிடப்பட்டிருந்தது. ஜன்னல் கதவு திறந்திருந்தது. படுக்கையில் கோணல், மாணலாகப் படுத்து தூங்கிக் கொண்டிருந்தான்.

பார்க்கும்படியாக பிகார்ட்டி ரம் பாட்டில் தெரிந்தது. புரிந்து கொண்டார்.

துக்கம் வந்தால் தண்ணி தானா புகலிடம்?

கேள்வி கொத்தியது.

அவர் அதிகம் சினிமா பார்ப்பதில்லை. தன்னை சத்திய சந்தனாக காட்டிக் கொள்ளும் ஹீரோ கூட துக்கம் வரும்போது சாராயக் கடைக்கு போய் ஊற்றிக் கொண்டு ஆடிப் பாடுவான். அங்கே அஞ்சாறு அரைடிக்கட்டுகளும், மேல் மார்பை முடிந்த மட்டும் காட்டும் பெண்களும் இருந்து அவனுக்கு ஒத்துப் பாடுவார்கள். இப்படி பவித்ரமான கதாபாத்திரங்களே சந்தோஷத்துக்காக செய்யும் போது மகன் குடித்ததில் ஒரு தவறும் இல்லை என்பது கிருஷ்ணமோகனுக்கு எங்கே புரியப் போகிறது?

சோகமாக வந்து டைனிங் டேபிளில் அமர்ந்து கோதுமைக் கூழ் குடித்தார்.

முகத்தில் தீவிரமான சிந்தனை.

அப்பொழுது சுவாமிநாதன் வந்தார்.

கிருஷ்ண மோகனின் நண்பர்.

இளவயது முதலே கிருஷ்ணமோகனிடம் தொடர்ந்து பழகி வருபவர்.

''வாடா...''

''வர்றது இருக்கட்டும் எங்கே தனா...?''

''தூங்கிகிட்டு இருக்கான். இன்னும் எழுந்திருக்கலை.''

''ஆச்சரியமா இருக்கே.''

''இதுல ஆச்சர்யப்பட என்ன இருக்கு? கோடி கோடியா சம்பாதிக்க அப்பா நான் இருக்கேன். அதட்டி சரியா வளர்க்க அம்மாவும் இல்லை. அவன் அப்புறம் என்னதான் செய்வான்? சொல் பார்ப்போம்...''

-கிருஷ்ணமோகன் குரலில் வருத்தம் புரண்டு புடுத்தது.

''சரி நீ எங்க வந்தே...?''

''ஹிந்து பத்திரிகை ஆபீஸ் வரை போய்ட்டு வரேன்.''

''என்னடா விஷயம்?''

''சிவரஞ்சனிக்கு மாப்ள பாக்கலாம்னு... புரோக்கர்கள் கிட்டயும் சொல்லியிருக்கேன், அப்படியே ஹிந்துலையும் மேட்ரிமோனியல்ல நாலு வரி கொடுத்துடலாம்னு...''



''ஏன் இதை எல்லாம் செய்ய உன்கிட்ட கிளார்க்ஸ் இல்லையா—நீதான் செய்யணுமா?''

-கிருஷ்ணமோகன் கூழை நக்கியபடி கேட்டார்.

''நீ சொல்றது வாஸ்தவம்தான். எல்லா வேலைகளையும் இப்ப அவங்கதானே செய்யறாங்க. இந்த ஒரு வேலையையாவது நான் செய்யலாம்னுதான். அதோட ஆயிரம் காலத்து பயிர் சமாச்சாரம் பாரு...''

-சுவாமிநாதன் சொன்ன விதத்தில் நல்ல யதார்த்தம். அது கிருஷ்ணமோகனை கொஞ்சம் கிள்ளிற்றோ என்னவோ தொடர்ந்து பதில் கூறாமல் கூழை முழுவதும் குடிப்பதில் முனைப்பு காட்டத் தொடங்கினார்.

''ஆமாம் கிருஷ்ணா...எப்ப நீ தனஞ்ஜெயனுக்கு பொண்ணு பார்க்கப் போறே?''-சுவாமிநாதன் விஷயத்திற்கு வரவும் கிருஷ்ணமோகனுக்கு கொஞ்சம் திணறிற்று.

''பார்க்கணும்...''

''சீக்கிரம் பாரு—வயசாகுதுல்ல. சரி நான் வரட்டுமா?''

''உக்காருடா. சாப்ட்டுட்டு போ.''

''பரவால்ல. நீ சாப்டு... [சாரி குடி என்னடா பணக்காரன் நீ?''

''ஏண்டா எனக்கென்ன...?

''உள்ள நுழையும்போது, பார்த்தேன் உன் தோட்டக்காரன். உப்பும் ஒறப்புமா கருவாட்டுக் குழம்பு ஊத்தி சாப்டுகிட்டிருந்தான். எதுக்கும் கொடுத்து வெச்சுருக்கணும்.''

-சுவாமிநாதன் சொன்னவிதம் எழுந்த விதம் எல்லாமே கிருஷ்ணமோகனை பிசைந்தது. பதில்

பேசாமல் பார்த்தபடி இருக்க சுவாமிநாதன் விலகிச் செல்லத் தொடங்கினார்.

பத்து கோடி ரூபாய் சொத்து தேறாது. ஊட்டியில் ஒரு டீ எஸ்டேட், உடுமலைப் பேட்டையில் ஒரு ஸ்பின்னிங் மில்...

இந்த ஆளுக்கு இத்தனை லொள்ளா?

கிருஷ்ணமோகன் தீவிரமாக யோசிக்கும்போது போது போன் வந்தது. பவ்யமாக கார்ட்லெஸ்ஸை எடுத்து வந்து நீட்டினான் யூனிஃபாம் அணிந்த பணியாள்.

''கிருஷ்ணமோகன் ஹியர்''

''சார்...அந்தப் பொண்ணைப் பத்தி டிடெய்ல்ஸ் கலெக்ட் பண்ணிட்டேன். அது தாராசிங் தம்பியான தல்வீர்சிங் வைப்பாட்டி பொண்ணு. சந்தேகமேயில்லை சார்...''

-கிருஷ்ணமோகனுக்கு அடுத்த நொடி கண்களில் சிகப்பு வலை பின்னியது.

''சார் அந்தப் பொண்ணை என்ன பண்ணலாம்?''

''போட்டு தள்ளுங்க. அப்பதான் தாராசிங்குக்கு பயமும், புத்தியும் வரும். என்கிட்டையே அவன் தொடர்ந்து மோதிகிட்டு இருக்கான். இந்த தடவை விட்றக் கூடாது.'

''சரி சார்...''

''டேய் ..காரியத்தை கச்சிதமா முடிக்கணும். பிசிறு தட்டி போலீஸ் பார்வை என் பக்கம் திரும்பினா தொலைச்சிட்டேன். உங்களை...''

''ஐய்யோ அப்படி எல்லாம் சொல்லாதீங்க சார் பிரம்மாவே வந்தாலும் அதைக் கொன்னது யார்னு தெரியாது. போதும்..?''



''ரைட்!''

''கார்ட்லெஸ்ஸை டேபிள் மேல் கிடத்திவிட்டு சற்று சயனப்பட்ட அந்த மனிதர் எதிரில் இப்போது தனஞ்ஜெயன்.

''யாருக்குப்பா குறி?''-என்றபடி நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான்.

கிருஷ்ணமோகன் அவனை முறைத்துப் பார்த்தார்.

''நான் லவ் பண்ற அந்த பொண்ணுக்கு தானே?''

''அவ யார்னு தெரியுமா?''

''அது எனக்கு அவசியமில்லப்பா. நான் அவளை லவ் பண்றேன். அதான் உங்களுக்கு முக்கியம். எனக்கு முக்கியம்.''

''புரியாம பேசறடா நீ. அவ நம்ம எதிரி தாராசிங் கோட ஆள். உன்னை திட்டமிட்டு காதலிக்கறவ அவ.''

''இல்லவே இல்ல...நான்தான் அவளை திட்ட மிட்டுக் காதலிச்சேன். புரிஞ்சுக்குங்க.''

''சரி .அப்படியே இருக்கட்டும். இந்த கல்யாணத் துக்கு நான் சம்மதிக்க மாட்டேன்.''

''இந்த மாதிரி சம்மதிக்க மாட்டேன். கல்யாணம் பண்ணிக்க விடமாட்டேன்கறதெல்லாம் ஓல்ட் ஸ்டைல். ரொம்ப பேசினா இது நான் சம்பாதிச்ச சொத்து. எழுந்து வெளிய போடா நாயேன்னு சொல்வீங்க நான் முடிவு பண்ணிட்டேன். நான் ரம்யாவைதான் கல்யாணம் பண்ணிப்பேன் அதுக்காக மூட்டை தூக்க நேர்ந்தா ஐ டோன்ட்கேர். ஒண்ணு மட்டும் சொல்லிக்கிறேன். அவளுக்கு ஏதாவது ஆனது, நீங்க நிச்சயம் கம்பி எண்ணுவீங்க. அப்பான்னு கூட பார்க்க மாட்டேன். வரேன...''

-தனஞ்ஜெயன் படபடவென்று பொரிந்து தள்ளி விட்டு நகரவும் கிருஷ்ணமோகன் நெற்றியை தேய்த்துக் கொண்டார். பின் கார்ட்லெஸ்ஸில் கொஞ்சம் முன் பேசியவனைக் கூப்பிட்டு ''டேய் கொஞ்சம் பொறுடா. பையன் தேவதாஸ் ஆகியிருக்கான் அவனை சரிகட்டிட்டு அப்புறமா சிக்னல் தரேன்'' என்றார்.

டைனிங்கை விட்டு எழுந்து ஹால் பக்கமாக வந்த போது பெரிய படத்தில் கருடாத்ரி யோகி சிரித்தார்.

சின்ன விஷயத்திற்கும் வழிகாட்டும் மாமனிதர் ஆயிற்றே!

## 5

நேரம் விளையாட்டில் எல்லா காய்களையும் நேராக தள்ளி மட்டும் போட்டுவிட முடியாது. சில காய்களை வேறு சில காய்களைக் கொண்டு தள்ளியும் போடலாம். அப்படிப் போட்டால்தான் வெற்றி நமக்கு...?

அப்பொழுது கிருஷ்ணமோகனின் மனைவி ராஜத்திற்கு மிக ஆபத்தான காலகட்டம்.

ரத்தத்தில் புற்றுநோய் குடியேறி புரட்டி எடுத்துக் கொண்டிருந்தது. தனஞ்ஜெயன் அப்பொழுது கல்லூரியில் கால்வைத்திருந்த சமயம்.

மனைவியைக் காப்பாற்ற கிருஷ்ணமோகன் துடித்த துடிப்பு இருக்கிறதே... அடேயப்பா!

அப்பொழுதுதான் ஒருவர் கருடாத்ரி பற்றி சொன்னார்.



''போய்ப் பாருங்க கிருஷ்ணமோகன். சுவாமிஜிக்கு அபார ஞானம். உங்க மனைவி சம்பந்தமான விஷயத்துக்கு சுவாமிஜி தீர்வு கொடுத்துடுவார்.

ஆரம்பத்தில் பெரிதாக இதில் நம்பிக்கை வைக்கவில்லை இருந்தாலும் மனைவியின் உடல்நிலை எதைத் தின்னா பித்தம் தெளியும் என்பதுபோல அவரை ஆக்கியிருந்தது. எனவே கருடாத்ரி யோகியை தேடிப்போனார்.

அப்பொழுது யோகியின் ஆசிரமமும் மிகச் சிறியது. ஐம்பதுக்கு ஐம்பது குடிசைதான்...

உள்ளே கயிற்றுக் கட்டில். அதில் படுத்துக்கொண்டிருந்தார் கருடாத்ரி. கிருஷ்ணமோகன் வரவும் அவர் கூறாமலே அவரது வரலாற்றை சொல்லத் தொடங்கிவிட்டார்.

''என்ன சம்சாரத்துக்கு புத்துநோயா?''

''ஆமாம் ஸ்வாமி''

''பூர்வஜென்ம வினை. ஒண்ணும் பண்ண முடியாது.''

''ஐய்யோ இப்படி சொன்னா எப்படி? டாக்டர்களும் இதையேதான் சொல்றாங்க. நீங்களுமா...''

''நான்னா...? நான் என்ன கடவுளா... உயிரைக் கொடுக்க...''

''அப்ப வேற வழியே இல்லையா...?''

''விதியை யார் மாற்ற முடியும். யாராவது மாத்தறேன்னு சொன்னா அது முட்டாள்தனம். இந்த துக்கத்தை தாங்கிக்க தயாராகு. இதை தாங்கிட்டா உனக்கு பிரமாதமான எதிர்காலம் இருக்கு...''

''என் மனைவியை இழந்து எனக்கொரு எதிர்காலமா?வேண்டாம் சுவாமி அப்படி ஒரு எதிர்காலம்...''

கருடாத்ரி சிரித்தார். இந்த பாச பந்தத்தைபோல மனதைப்படுத்தும் விஷயம் இந்த உலகத்திலேயே இல்லையே.

இறுதியில் கருடாத்ரி சொன்ன மாதிரிதான் ஆனது.

ராஜம் போய்ச் சேர்ந்தாள். அழுதும் அரற்றியும் ஒரு மாதிரி தாங்கிவிட்டார் கிருஷ்ணமோகன்.

அந்ததுக்கத்தோடு ஒருநாள் கருடாத்ரியை பார்க்க வந்தபோது...

''கைல என்ன மோதிரம் போட்ருக்கே?''

''பவழ மோதிரம் ஸ்வாமி.''

''பவழம் உனக்கு ஆகாதே...''

''ஐய்யோ-ரொம்ப ராசின்னு ஒரு ஜோசியக்காரர் சொன்னான். அதான் போட்டுருக்கேன்.''

'இல்லை... அவன் தப்பா சொல்லியிருக்கான். நீ வேணும்னா பார். இன்னும் மூணு நாள்ல உனக்கு விபத்து ஏற்படும். அப்ப தெரிஞ்சுப்பே...''

''ஐய்யோ பயமுறுத்தறேளே...''

''உனக்கு வைரம்தான் ரொம்ப சிறப்பான ஒண்ணு. அது உன் கையில இருந்தா உன்னை யாராலையும் ஒண்ணும் பண்ண முடியாது.

''அது எப்படி ஸ்வாமி... ஒரு கல்லுக்கு எப்படி அப்படி ஒரு சக்தி?''

''அது கல் இல்லை. அது உயிரி...''

''உயிரின்னா...?'



''கண்ணாடிபோல... கண்ணாடி ஜடம்தான். இருந்தாலும் அது நம்ம பிம்பத்தை காட்டுது இல்லையா?''

ஆமாம்''

''அதே போல பிரபஞ்ச வெளியில இருந்து வரக்கூடிய கதிர்களை ஒரு ஆன்ட்டெனா போல இருந்து வாங்கி அதுல இருக்கிற நல்லதை உன் உடலுக்குள்ளேயும் கெட்டதை வெளியேயும் தள்ளுவது இந்த கற்கள் தான்.

அன்று அவர் கொடுத்த விளக்கத்தில் புதுப்புது அர்த்தங்கள்.

கற்களுக்கு இப்படி ஒரு சக்தியா?

கருடாத்ரி சொன்னபடியே கிருஷ்ணமோகனுக்கு மூன்று நாளில் ஒரு விபத்து நேரிட்டது.

அவர் மிக ஜாக்கிரதையாகவும் கருடாத்ரி சொன்னதை பொய்யாக்கிவிட வேண்டும் என்று தீர்மானித்தும் வீட்டை விட்டு வெளியே செல்லவில்லை.

இருந்தும் பாத்ரூமில் வழுக்கி விழுந்ததில் மூட்டு இடம்மாறிப் போனது.

ஆஸ்பத்திரியில் போய் காலுக்கு கட்டு போட்டுக் கொண்டு படுக்கும்படியானது.

அதன்பின் கருடாத்ரி எது சொன்னாலும் அது வேதம் என்று ஆகிவிட்டது.

எப்பொழுது பார்த்தாலும் 'கருடாத்ரி நாமாவளி தான் பஜனைதான் கருடாத்ரியும் தனக்காக ஒரு பரம பக்தன் உருவாகிவிட்டதை அறிந்து, பூரித்துப் போனார்.

பக்தனுக்கு அனுக்ரஹம் செய்யாவிட்டால் எப்படி?

அப்பொழுது தெரியவந்ததுதான் மகான் புத்தரின் கை பட்டதாக நம்பப்படும் அந்த கூர்ஜர வைரம்!

பூமியில் நிச்சயம் அரை லட்சம் ஆண்டாவது அ கிடந்திருக்க வேண்டுமாம். அத்தனை காலத்துக் மூந்தைய ஒரு மரத்துண்டு பூமியில் விழுந்து மழை நீர், காற்று இவைகளில் மட்காமல், மடியாமல் இருந்து கல்லாகி, பின் கரியாகி, பின் வைரமாகியிருக்கிறது என்றால் அதற்கு எத்தனை ஆயுள்பலம் இருக்க வேண்டும்?

வைரம் என்றாலே ரூபாய் மதிப்பு மட்டுமின்றி அதிர்ஷ்ட ரீதியாகவும் மதிக்கப் படுவதற்கு இதுதானே காரணம்?

அப்படி ஒரு வைரத்தை ஆப்பிரிக்க நாட்டிலே வெட்டி எடுத்தவன் நல்ல விலைக்கு விற்றதில் 'அது' பல கை சுற்றியடித்துவிட்டு மகான் புத்தரின் கைக்கும் வந்து சேர்ந்தது.

ஒரு தேர்ந்த பாரசீக வாணிகன் அதை புத்தரின் திருவடிகளிலும் வைத்து வணங்கி அதை அவருக்கே காணிக்கையாக தர முன் வந்தான். பதிலுக்கு அவன் கேட்டது மோட்சம்.

இப்படி அந்த வைரத்தின் பின்புலத்தில் பல கதைகள். அதை அதன் பின் க்யானியின் வம்சத்தவர்கள் வாங்கி பாதுகாத்து வந்ததாகவும் ஒரு நாள் கனவில் புத்தர்பிரானே க்யானியின் கனவில் தோன்றி எனக்கு விஹாரம் எழுப்பு என்று சொன்னதால் அதை க்யானி 'விற்று'விட முடிவு செய்தான் என்றும் கூறினார்கள்

இது எப்படி கருடாத்ரிக்கு தெரிந்ததோ மூ காரியமாக கிருஷ்ணமோகனிடம் கூறினார்.

''கிருஷ்ணா...போ எப்படியாவது அதை வாங்கு...



''ஸ்வாமி... அவ்வளவு பணம் என்கிட்ட ஏது?''

கடனை வாங்கியாவது வாங்கு. அப்புறம் பார், அந்த கடனும் நீங்கி பெரிய செல்வந்தனாகப் போறதை...''

''சரி ஸ்வாமி...நீ சொல்றதனால அதை எப்படியாவது வாங்கிடறேன்...ஃபேக்டரி கட்டலாம்னு இருக்கேன். பேங்க்லையும் லோன் கேட்ருக்கேன் மெஷினரிஸ் வாங்க சேங்ஷன் ஆகியிருக்கு. அதைக் கொண்டு அதை வாங்கறேன்...''

''வாங்கினாப் பத்தாது...கையாளத் தெரியனும்.''

''எப்படி ஸ்வாமி''

''உலகத்துல சர்வத்துலையும் தோஷம் போக்கக் கூடியது பால்தான். அதனாலதான் பிறந்த உடனே பால் விடறோம் இறந்த பிறகும் பால் விடறோம். வீடு குடிபோகும்போது, முதலிரவின்போதுன்னு முக்கிய கட்டங்கள்ல பாலோட பங்கு அதிகம். அதுல போட்டு வை. அதை முழுசா நம்பு. அதை நீ நம்பற திருப்பதி பெருமாளாவே நினை. சந்தேகப்படதே, புத்தர் கைப் பட்ட வைரம் கண்டவன் கை அது படக்கூடாது. ஜாக்கிரதை...எத்தனை பேர் அதை பாக்கிறாங்களோ அத்தனைக்கத்தனை அதன் சக்தி மற்றவர்களால கவர்ந்திழுக்கப்படலாம்.

க்யானியேகூட விற்க முன்வரும்போதுதான் வெளிய எடுப்பான். மற்றபடி யார் கண்ணுலையும் காட்டமாட்டான். அது வர்த்தக எச்சரிக்கை மட்டுமில்லை. அதுதான் வைரத்தை கையாள்ற முறை.'' என்று ஒரு நீண்ட விளக்கம் தரவும் அப்பொழுதேதான் குபேரனுக்கு பக்கத்தில் போய் நின்று விட்டதாக கருதினார் கிருஷ்ணமோகன்.

இதே உபன்யாசத்தைதான் தாராசிங் வரவும் அவனிடமும் நிகழ்த்தினார். ஆனால் தாராசிங்கால் அன்றைக்கு இருந்த நிலையில் வைரத்தை வாங்க முடியவில்லை. அன்று வென்றது கிருஷ்ணமோகன் மட்டுமல்ல. கருடாத்ரி யோகியும்... இன்று?

மகாபலிபுரத்தை ஒட்டி இருக்கிறது கருடாத்ரி யோகியின் ஆசிரமம். நிறைய வெள்ளைக்காரர்களும் வந்து போகும் இடம்.

அங்கங்கே நவீன கொலாஜ் சிற்பங்கள்-நீர் ஊற்றுகள், மேடும் பள்ளமுமாய் ஆஸ்திரேலிய புல்வெளிச் சதுக்கங்கள்.

விஸ்தாரமான இடம். கிட்டதட்ட இருநூறு ஏக்கரில் பண்ணைக் காடாக சவுக்கு வளர்ந்து கிடந்த பகுதியில் இன்று மேல் நாட்டுத் தாக்கத்தோடு ஆஸ்ரமம்.

அதனுள் பிரவேசிக்கிறது ஒரு தக்காளி ; நிற மாருதி கார். உள்ளிருந்தாள் சாரதா சௌத்ரி.

கதாநாயகியாக நடிக்கும் இளமையை இழந்து விட்ட முப்பது வயது சினிமா நடிகைகளைப் போல் ஒரு தோற்றம்.

முகத்தில் இனம் புரியாத சோகம்.

காரைவிட்டு இறங்கியவள் ஆசிரமத்தின் ரிசப்ஷனில் தொடர்பு கொண்டபோது கருடாத்ரி யோகி அமெரிக்க யாத்திரை போய்விட்ட சேதி அவளிடம் சொல்லப்பட்டது. அதுவும் மிக ஸ்டைலான ஆங்கிலத்தில். அவள் முகம் மாறிப்போனது. வெளியே வந்தாள். தன் காரை நோக்கி சோர்வாக நடையிட்டாள். அப்பொழுது கடந்து போன கார் ஒன்று சாலையில் கொஞ்சமாய் தேங்கியிருந்த மழை நீரை வாரி, அவள் புடவை,முகம் என்று எல்லா பாகங்களிலும் இரைத்தது.



அவள், அடுத்த நொடி கோப உச்சி ஏற... அந்த அசம்பாவிதம் பண்ணிய காரும் நின்று பின்னால் ரிவர்சில், திரும்பி வந்தது.

உள்ளே கிருஷ்ணமோகன்!

"வெரி வெரி ஸாரி மேடம்" என்றார் மிக கனிவாக. முதலில் முறைத்தவள் பின் "இட்ஸ் ஓ.கே..." என்றாள். கிருஷ்ணமோகன் காரிலேயே உட்கார்ந்தபடி ஒப்பேற்றாமல் இறங்கி அவளை நெருங்கினார்.

"வாங்க பக்கத்துலதான் இருக்கு பாத்ரூம். ஐ வில் ஷோ யூ" என்று சற்று பதட்டத்துடன் முன் நடக்க, அவளும் அவரைப் பின் தொடர்ந்தாள்.

பதினைந்து நிமிடத்தில், கருடாத்ரி யோகி அமெரிக்கா போய் விட்ட தகவலும், ஆசிரமமே யாரும் இல்லாமல் யோகா பயிற்சி செய்பவர்கள் மட்டும் தங்கியிருக்க அது வெறிச்சோடி விட்டதும் அவருக்குத் தெரிந்து போயிருந்தது.

"தேங்க் யூ ஸோ மச்..."-என்றபடி எதிரில் வந்து அமர்ந்தாள் அவள்.

"யு ஆர் ஃப்ரம்?"

"....... ஐ ஆர் சாரதா சௌத்ரி."

"மை நேம் ஈஸ் கிருஷ்ணமோகன்..." என்றபடி தனது விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டியவரைப் பார்த்து விக்கித்துப் போனது அவள் முகம்.

"வாட் எ சர்ப்ரைஸ்...உங்களை சந்திக்கத்தான், நான் சென்னை வந்தேன்." -அவளிடம் நல்ல தமிழ்.

"என்னையா?"

"ஆமாம்...யோகியோட எனக்குப் பத்து வருஷமா தொடர்பு. சமீபத்திய கார்கில் வார்ல என் கணவர்

ராய் சௌத்ரி இறந்துட்டாரு. வாழ்க்கையே எனக்கு போய்ட்ட மாதிரி ஒரு ஃபீலிங். அவர் இல்லாத நிலையில கல்கத்தாவுல இருக்கவும் எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கல. யோகியோட ஆசிரமத்துலையே பர்மனன்டா தங்கிட முடிவு செஞ்சேன். எனக்கு ஹார்டி கல்ச்சர்ல நல்ல இன்ட்ரஸ்ட். அதுல நான் டாக்டரேட் வாங்கினவள்.

அதைக் கேள்விப்பட்ட யோகி சென்னைய கிருஷ்ணமோகன்னு ஒரு இண்டஸ்ரிய லிஸ்ட் இருக் கார். அவர் கோவளம் பக்கமா ஒரு பண்ணை வாங்கிப் போட்ருக்கார் அதுல நான் அவர் கிட்ட சொல்லி சேர்த்து விட்றேன்னு சொல்லி எனக்கு லெட்டர் போட்ருந்தார். இதோ அந்தக் கடிதம்...''-அவள் ஹேண்ட் பேக்கிலிருந்து ஒரு கடித உறையை எடுத்து நீட்டினாள். அதில் கருடாத்ரி யோகியின் ஆசிரம எம்பளம். டு அட்ரஸிலும் சாரதா சௌத்ரியின் பெயரும் கல்கத்தா முகவரியும்...

விரித்துப் பார்த்தவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

நன்கு டைப் செய்யப்பட்டிருந்த அந்தக் கடிதத்தில் கருடாத்ரி யோகி கையெழுத்திட்டிருந்தார்.

''ரியலி ஒண்டர்!''-படித்து முடித்த நிலையில் கிருஷ்ணமோகனிடம் கமெண்ட்.

''யோகி இப்படி திடீர்னு அமெரிக்கா போவார்னு நான் எதிர்பார்க்கலை. அவர் இருந்திருந்தா அவரே என்னை அறிமுகப்படுத்தி வெச்சிருப்பார்...''

''அதனால என்ன... அவர்தான் மழை நீ சாலைல தேங்கியிருந்து உங்க மேல பட்டு அதுக் காரணமான என்னையும் ஆக்கி, இந்த இணைப்ப உருவாக்கியிருக்கார்னு நான் நினைக்கிறேன்.''



''ஷ்யூர்... தெய்விகமானவர்கள் எங்க எப்படி வழி காட்டுவாங்கன்னு சொல்ல முடியாது. நமக்கு புரிஞ்சுக்கற சக்தி இருந்துட்டா போதும்... அப்ப நான்...''

''நோ பிராப்ளம். இப்பவே உங்கள அந்த ஃபார்ம் ஹவுஸுக்கு கூட்டிகிட்டு போறேன். அங்க கெஸ்ட் ஹவுஸ் இருக்கு. நான் போனா பாத்துக்க சர்வண்ட்ஸ் இருக்காங்க அவங்க உங்களையும் பார்த்துப்பாங்க...''

''அது இருக்கட்டும். என் பயோடேட்டா சர்ட்டிஃபிகேட்ஸ் இதை எல்லாம் பார்க்க வேண்டாமா நீங்க...?''

''பார்க்கணுமா?''

''பாத்துடுங்க. அதுதான் எனக்கும் நல்லது. அப்பதான் என் சம்பள விஷயமா நான் நெகோஷியேஷன் க்ரியேட் பண்ண முடியும்.''

''ஓ...சம்பளக் கவலையா? அதுசரி, இவ்வளவு நல்லா தமிழ் பேசறீங்களே எப்படி?''

''நான் தமிழ்நாடுதான். தஞ்சாவூர்! கல்கத்தால என் அப்பாக்கு ஜாப் ட்ரான்ஸ்ஃபர் ஆனப்ப அங்க போனோம். அங்க நான் ராய் சௌத்ரிய மீட் பண்ணேன். காதலிச்சோம். கல்யாணமும் பண்ணிகிட்டோம். ஆனா அவரோட சேர்ந்து வாழத்தான் கொடுத்து வைக்கலை. வருஷத்துல முக்காலே மூணு வீசம் அவர் மிலிட்ரி மிலிட்ரின்னே வாழ்ந்துட்டு கடைசியா போயும் சேர்ந்துட்டார்.''

''இப்ப உங்க அப்பா அம்மால்லாம்...''

''இருக்காங்க...முத்துப்பேட்டைல கொஞ்சம் ப்ராப்பர்ட்டி இருக்கு. அதை பாத்துகிட்டிருக்காங்க. ஆனால், நான் அங்கே போறதில்லே... அவங்க சம்மத

மில்லாம கல்யாணம் பண்ணிக்கிட்டேன். இப்ப முண்டச்சியா அவங்ககிட்டபோய் அவங்க நிம்மதிய கெடுக்க விரும்பலை.''

''இஷ்யூஸ்...?''

''நோ. பொறக்காதவரை கவலை இருந்தது. இப்ப அதுவே பெரிய ரிலீஃப்பா இருக்கு.''

''ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்ககூடாது.''

''அத பத்தி எல்லாம் எண்ணமே இல்லை. ராய் மாதிரி ஒரு மனுஷனை பாத்தா எண்ணம் வருமோ என்னவோ... ராய் கூட ஃபீல்டுல இருந்து வார் அட்டெண்ட் பண்றதுக்கு முன்னால ஒரு 'லெட்டர் போட்டுருந்தார். எனக்கு ஏதாவது ஆயிட்டா நீ இன்னொரு கல்யாணம் பண்ணிக்கணும்னு. அது அவரோட பெருந்தன்மை. என்னோட பெருந்தன்மை நான் இப்படியே இருந்துட்றதுதான் சரின்னு தோணுது...''

-சாரதா பேசும்விதம், அவள் தோள்களை குலுக்கிக் கொள்ளும் மானரிசம் எல்லாமே கிருஷ்ணமோகன் கண்ணிலேயே நின்றது.

''சரி கிளம்பலாமா?''

''நான் ரெடி.''

-அடுத்த நொடி அவர்கள் இருவரும் புறப்பட்டனர். அந்த தக்காளி நிற மாருதியை ராயின் சென்னை நண்பர் வைத்ய ப்ரஸாத் என்பவர் வீட்டுக்கு அனுப்பிட அவள் முடிவு செய்தாள்.

''அது ப்ரசாத் கார்...உங்க டிரைவரால அதை அவர்கிட்ட சேர்க்க முடியுமா?''

''ஷ்யூர்...நீங்க கிளம்புங்க, அத நான் பார்த்துக்கறேன்'' என்றபடி இருவரும் பண்ணை நோக்கிப் புறப்பட தயாராகினர்.



கிருஷ்ணமோகன் அரைமணிப் பொழுதில் ஒரு புதிய அறிமுகத்தோடு தன் காரில் பண்ணை வீடு நோக்கி காரை செலுத்திக் கொண்டிருந்தார்.

அவள் வசம் ஒரே ஒரு ஹேண்ட் பேக் மட்டுமே...

மற்ற துணிமணிகள்—பொருட்கள்?

கேட்டார்.

''எல்லாம் கல்கத்தால இருக்கு இங்க இவ்வளவு சீக்கிரம் உங்க சந்திப்பும், ஜாப்பும் கிடைக்கும்னு நினைக்கல. இனி அதெல்லாம் பிரகாஷ் ஃப்ரைட் கேரியர்ல வந்துடும்'' -என்று சொல்லி தோள் குலுக்கினாள்.

மீண்டும் ரசித்தார் அந்த பெரியமனிதர்.

மனதில் மகனைப் பற்றிய கவலை எல்லாம் மறந்து விட்டிருந்தது.

தாராசிங்கும், அவனது சவால்களும் மழையின் போது மறைந்துபோன சூரியனாட்டம் மறைந்து போய் விட்டிருந்தன.

கார் கோவளம் நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

''ஆமா பண்ணைல இப்ப என்ன போட்டுருக்கீங்க?''

''தெரியாதும்மா... வின்செண்ட்டுன்னு ஒருத்தன் இருந்தான். தென்னை, கொய்யா, கொஞ்சம் முந்திரி கூட ட்ரை பண்ணான்னு நினைக்கிறேன். எனக்கு ரோஸ்னா ரொம்ப இஷ்டம். அப்படியே வெஜிடபிள்ஸ் இதை எல்லாம் நீங்க ட்ரை பண்ணலாம்.'' -அவளுக்கு பதில் சொல்லிவிட்டு. அப்படியே ஓடும் காருக்குள் யாரோடோ தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

ரகசியக் குரலில் பேசியதால், பேசியது என்ன வென்று காதில் விழவில்லை.

நடுவில் ஸ்டிரியோவை தட்டிவிட்டதில் மடோனா அலறினாள். சாரதா அதைக்கேட்டு உட்கார்ந்த நிலை யில் உடன் சேர்ந்து சின்னச் சின்ன மூவ்களோடு ஹம் செய்தாள்.

"வெஸ்டர்ன்னா பிடிக்குமா?"

"வெஸ்டர்னும் பிடிக்கும். அப்படியே நம்ம கிளாசி களும் பிடிக்கும்." என்று ஆச்சரியமளித்தாள். நடு நடுவே முன்பாகத்தில் மேலாடை நழுவிட, சரிசெய்து கொண்டாள். எல்லா விதத்திலும் மிக வைட்டமான வளர்ச்சி.

கிருஷ்ணமோகன் என்ன சன்யாசியா?

தனஞ்ஜெயனுக்கு அப்பாதானே...

ஓரப் !பார்வையும் திருட்டு ரசனையும்தான் ஒரு எம்.டி. என்கிற எல்லா நினைப்புகளையும் மீறி பெருக் கெடுக்கத்தான் செய்தது.

# 6

வியாபார தர்மம் என்பது எது தெரியுமா? மிதித்து மேலேறுவதுதான்-யுத்த களமும் வியா பாரச் சாலையும் ஒரு வகையில் ஒன்றுதான். பாவ புண்ணியங்களை தூர வைத்துவிட்டுப் போராடு-இந்தப் போராட்டத்தில் கில்லாடி இந்தர்ஜித் தாராசிங்!



தாராசிங் ஒரு அறிமுகம்!

'ஜாதியான வாலா ஹே...!' ஆனாலும் முப்பது வருஷமாக சென்னைவாசி. எனவே தமிழ் அச்சா மாலும் ஹே...

டிப்பிக்கல் பஞ்சாபி ஸ்டைலில் தலைமுடி, தாடி டர்பன் எல்லாம் கிடையாது. அந்த ஊர் கோதுமை தந்த சிவந்த நிறமும் மதர்த்த உடம்பும் மட்டும் உண்டு.

சின்ன கண்கள்.

அதை வைத்துக்கொண்டு தாராசிங் பார்க்கும் விதமே வேடிக்கையாக இருக்கும்.

முதலில்சைக்கிள் ஸ்பேர் பார்ட்ஸில் வியாபாரத்தை தொடங்கினவன், பின்னர் ஸ்கூட்டர் கார்பரேட்டரை வாங்கி விற்கத்தொடங்கினான். இன்று கார், பஸ்சுக்கே சப்ளை செய்யும் அளவு வளர்ச்சி.

இருந்தாலும் சென்னையில் திரும்பின பக்கமெல் லாம் இந்த தொழிலில் போட்டி. ஆட்டோமொபைல் இண்ட்ஸ்ட்ரியும் மொத்தமாக உலகம் முழுக்க ஆட்டம் கண்டு கிடக்கும் நிலையில் என்ன செய்தால் பிழைக்க லாம் என்ற கேள்வி வந்தபோதுதான் அறிமுகமானார் கருடாத்ரி யோகி. சொல்லப்போனால் இந்தவைரத்தை க்யானியிடம் இருந்து வாங்கி முதலில் தா விரும்பியது இவருக்குதான் ஆனால், வைரத்தை உறுதியாக தாரா சிங்கால் க்யானிடம் இருந்து வாங்க முடியவில்லை. அங்கேயும் போய் அல்பத்தனமாக பேரம் பேசியதில் எல்லாமே கைவிட்டுப் போனது. ஆனாலும் தாரா சிங்கிடம் ஒரு நல்ல பழக்கம். எந்த முயற்சி எடுத்தாலும் பிணமாகிவிட்டாலும் நமது ஆவியாவது வந்து அதை முடித்துவிட வேண்டும் என்று கூறுபவன். அந்த அளவு தீவிரமானவன்.

வைரத்தை பற்றி கேள்விப்பட்டபோது சிரித்த சிரிப்பு இருக்கிறதே— அது எட்டுத் திக்கையும் விட்டுக் கிழித்தது.

''ஒரு வைரம் ஒரு மனுஷனை முன்னேற்றுமா... என்னா கதைடா இது...? ஒரு வெளிச்சமான கரித் துண்டு நம்மள முன்னேற்றுமா நம்பறியா நீ?'' என்று சகாக்களிடம் கேலி பேசினான்.

இருந்தபோதிலும் அவர்களில் ஒருவர் நான் வைர மோதிரம் ஒன்றை செய்து போட்டுக் கொண்டபிறகு தான் பெரிய அளவில் முன்னுக்கு வந்தேன் என்று கூறியபோது அவன் வாய் அடைபட்டுவிட்டது.

''விஞ்ஞானப் பூர்வமாக இதை நீ போக்க முடியுமா?'' கேட்டான்.

''அதெல்லாம் தெரியாது தாரா— இது நம்பிக்கை சார்ந்த விஷயம். உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் விட்டுத்தள்ளு'' என்றார்கள் சகாக்கள்.

நாலு நாளைக்கு மனம் புழுங்கிவிட்டு அவனும் கருடாத்ரி யோகியைப் போய் பார்த்தான். அப்பொழுது அவனுக்கு மூச்சிளைப்பு இருந்தது. ஆஸ்த்மா என்று நினைத்துக்கொண்டிருந்தான். டாக்டர்களும் அதையே சொல்லி ஊசி மருந்து என்று அவனிடம் பணம் கறந்துகொண்டிருந்த வேளை...

அதை அறிந்த கருடாத்ரி பிராணாயாமம் சொல்லிக் கொடுத்தார்.

இந்த மூச்சுச் சிக்கலுக்கு காரணம் உனக்கு எப்பொழுதும் பிடித்திருக்கும் ஜலதோஷமே என்றார். இதன் காரணமாக எப்பொழுதும் ஒரு மூக்கு அடைபட்டு, ஒரு வழியாக மட்டுமே சுவாசம் நிகழ்வதால் சுவாசப் பையும், இதயப் பரப்பும் ஒரு குறிப்பிட்ட பகுதி



யில் மட்டும் அதிக செயல்பாட்டோடும் அதன் எதிர் பரப்பில் செயல்பாடு குறைவாகவும் இருந்து. நுரையீரல் சுருங்கி விட்டது என்றவர் பிராணாயாமம் செய்யக் கற்றுக்கொடுத்து அந்த மூச்சுக் காற்று பிரச்சினையை சரி செய்து தந்தார்.

அவ்வளவுதான்... தாராசிங் அம்பேல்!

அதன்பின் அவனுக்கும் கருடாத்ரி யோகி சொல்வது தான் வேதம் என்றாகி விட்டது.

இருந்தபோதிலும் கிருஷ்ணமோகன் வைரத்தை வாங்கி வேகமாக முன்னுக்கு வரத் தொடங்க அவரோடு கருடாத்ரிக்கு இணக்கம் கூடிப்போக தாராசிங் காலப் போக்கில் விலகிக் கொண்டான்.

கிருஷ்ணமோகன் கருடாத்ரியோகியையே தன் பண பலத்தால் வசப்படுத்தி விட்டதாகத்தான் நினைக்கிறான்.

இன்றைய நிலையில் தாராசிங்குக்கு கிருஷ்ண மோகன் மட்டுமல்ல கருடாத்ரியும்தான் எதிரி.

இந்த சாமியார்களுக்கெல்லாமும் பணக்காரர்களைக் கண்டால்தான் பிடிக்கிறது. இது தாராசிங்கின் ஈகோவையும் குத்திக் கிழித்து காயப்படுத்தி விட்டது.

அவன் ஜாதகம் வேறு முன்னேறவோ, உருப்படவோ வாய்ப்பே இல்லை என்று சொல்லும்போது அவனுக்குள் இன்னமும் ஆத்திரம்.

இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தான்.

ஜாதகமாவது புடலங்காயாவது... அதை மாற்றி அந்த வைரத்தை அபகரித்து இதே கருடாத்ரியை நான் என் பக்கம் திரும்ப வைக்கவில்லை என்றால் நான் தாராசிங் இல்லை என்று தனக்குள்ளேயே சவால் விட்டுக் கொண்டான்.

பலர் சொல்லிப் பார்த்தனர்.

"தாரா...என்னதான் உயரப் பறந்தாலும் ஊர் குருவி பருந்தாக முடியாது" என்றனர் சிலர்.

எல்லாம் தாராசிங்கிற்கு எதிராகவே போய்ச் சேர்ந்தது.

அடக்க நினைத்து சொன்னதெல்லாம் எழுப்பிவிட வழிசெய்து விட்டது.

சிலர் இப்படித்தான்-மூர்க்க ஜாதி.

எவ்வளவு சொன்னாலும் புரியாது. பட்டுத் திருந்த வேண்டியவர்கள் இவர்கள். ஆனால், தாராசிங் திருந்தப் போகிறானா இல்லை திருத்தப் போகிறானா?

தாராசிங் இந்த மனோநிலையை கிருஷ்ணமோகனும் தெரிந்துதான் வைத்திருந்தார்.

கருடாத்ரியும் சொல்லி வருத்தப்பட்டார்.

கருடாத்ரி சிரித்தபடியே "குரைக்கற நாய் கடிக்காது கிருஷ்ணா" என்று சமாதானப்படுத்திவிட்டார். அப்படியே தாராசிங்கையும் அழைத்து எச்சரிக்கை செய்தார்.

"தாராசிங்...ஏன் இப்படி பைத்தியகாரத்தனமா நடந்துக்கறே?"

"இல்லை சாமி...நீங்கதான் நடந்துக்கறீங்க. நீங்க முதல்ல எனக்குதான் அந்த வைரத்தை வாங்கித் தாரதா சொன்னீங்க..."

"சொன்னேன்... நீ வாங்கலையே... பேரம் பேசினியே..."

"என் நிலைமை அப்படி..."



"அப்ப உனக்கு கொடுப்பினை இல்லை. விட்டு விடு."

"விடமுடியாது சாமி...நான் முன்னுக்கு வரேன் வரேலை. அது வேற விஷயம். அந்த கிருஷ்ணமோகனுக்கு திமிர் ஏறிப்போச்சு. தொழில் பண்றதுல என்னமோதான் தான் பெரிய மூளைக்காரன் மாதிரி நடந்துக்கறான்...

புதுப் பணக்காரன்கறது சரியா இருக்கு. நான் விட மாட்டேன் சாமி."

என்று கறுவி விட்டுப்போனான். போன நொடியிலிருந்தே கிருஷ்ணமோகனுக்கு எதிராக காய் நகர்த்துவதுதான் வேலையாக இருக்கிறது.

அடுத்தது அம்புகள்.

விழுவாரா கிருஷ்ணமோகன்?

## 7

'குறி மட்டும் சரியா வைத்து விட்டால் விழ வேண்டியது விழுந்தே தீரவேண்டும் புலிக்கு வலை, பறவைக்கு தோட்டா, மனிதனுக்கு பெண்...'

வகுப்பு முடிந்து எல்லோரும் வெளியே வரும் போது திவ்ய மாலைப் பொழுதின் நான்கு மணி ஆரம்பம்.

வாத நாராயண மரத்தடியில் ஸ்கூட்டியை தொடப் போன ரம்யாவை 'ரம்' என்று கூறித் திருப்பினான் தனஞ்ஜெயன்.

''பக்கமாய் காரை நிறுத்திவிட்டு சாவியை சுழற்றிக் கொண்டு அதில் படுத்திருந்தான்.

''என்னடா கிளாசுக்கு வரலியா இன்னிக்கு—'' —அவள் கேள்வியோடு அவனை நோக்கினாள்.

''நோ...இனி வரமாட்டேன்.''

''ஏன்டா...என்னை பாக்க நெருடலா இருக்கா?''

''ஃபூல் மாதிரி பேசாதே ரம்...உன்னை பாக்க எனக்கு எதுக்கு நெருடணும். நான்தான் உன்னை கல்யாணம் பண்ணிக்க முடிவு செய்துட்டேன...''

''அப்டிங்களா...இதை நான் நம்பவா?''

''தாலி கட்டும்போது நம்பித்தானே தீருவே—''

''அப்ப கிளாசுக்கு வந்திருக்க வேண்டியதுதானே!''

''இல்ல... அந்த மாஸ்டர் நேத்தி ரொம்ப தாளிச்சிட்டான். அவன் என் அப்பாவோட ஆள்னு நினைக்கிறேன். அதனால கோர்ஸே வேண்டாம்.''

''பை த பை. அப்பாகிட்டேயும் பேசிட்டேன்.''

''கூட்டிக்கிட்டு வா பாத்துட்டு சொல்றேன்னு சொன்னாரா?''

''அதான் இல்ல...நீ அவர் எதிரியோட ஆளாம். திட்டமிட்டு என்னை காதலிக்கிறியாம். உளறித் தள்ளினாரு. இல்லைய்யா...எல்லாமே நேர் எதிர். ரம்யாவும் என் உயிர், மாட்டேன்னா வண்டி இழுத்து அவளைக் காப்பாத்த எனக்கு சக்தி இருக்குன்னு சொல்லிட்டேன்.''

–சாதாரணமாக, கீ செய்னை சுழற்றிக் கொண்டே அவன் சொன்னதைக் கேட்டு நெடுநேரம் ரம்யா எதுவும் பேசவில்லை.



இன்ஸ்ட்டிட்யூட் மொத்தமாக கலைந்திருந்தது.

இது காதல் காலம் போலும். நிறைய ஜோடிகள் உருவாகி டூ வீலரிலும், காரிலும் கிளம்பிப் போயிருந்தார்கள்.

இன்ஸ்ட்டிட்யூட் வராண்டாவில், நின்றபடி மாஸ்டர் மகேந்திரன் மட்டும் பார்த்துக் கொண்டிருந்தார்.

''மாஸ்டர் பாக்கறான் போல இருக்கே...''

''உம்...''

''சரி கிளம்பு. வயிறு எரியப் போறான்.''

''இல்ல தனா...அவர் ரொம்ப நல்லவர். இன்னிக்கு என்கிட்ட உன் அப்பா பற்றி நிறைய சொன்னார்...''

''என்னன்னு...?''

''உன் அப்பா கிட்டதட்ட சினிமா நம்பியார்னு நினைக்கிறேன்.''

''நம்பியார் இல்ல...ஹிந்தி ஆக்டர் அனுபம் கெர் பாத்துருக்கியா?''

''சொல்லு—''

''அந்த மாதிரி...அதே மாதிரி வழுக்கை...அதே பார்வை. பேச்சு எல்லாம். அதை விடு. இப்ப என்னை ஏத்துக்கறதுல உனக்கு ஆட்சேபனை இல்லையே...''

''இல்லை...ஆனா எனக்காக நீ அவரை, அப்றமா உன் ஜெ.எம்.டி.ங்கற ரெஸ்பான்ஸை எல்லாம் தியாகம் பண்ணத்தான் வேணுமா? நான் ஆஃப்டரால் ஐம்பது கிலோல உள்ள ஒரு அழகான சதைப் பிண்டம். நீ நினைக்கற வேல்யூ எனக்கு இல்ல தனா...''

'ரம்யாவின் குரலில் கழிவிரக்கம் சொட்டிற்று...'

''எல்லா காதல்லையுமே இதுதான் இருக்கு. அப்படிப் பார்த்தா யாருமே காதலிக்க முடியாது. கவலைப் படாதே... அப்பாக்கு என்னை விட்டா யாரும் இல்லை. அவர் கடைசியா என் ஆசைப்படிதான் நடந்துக்குவார். அதை விடு...உன்கிட்ட ஒரு கேள்வி.''

''என்ன?''

''உன் அம்மாவை ஒருத்தர் வெச்சிருக்கார்னு சொன்னியே... அவரை நீ அப்பாவா ஏத்துக்கிட்டியா?''

''அதுக்கு அவர் எங்கம்மா கழுத்துல தாலி கட்டணுமே?''

''அப்ப எப்படி இப்படி ஒரு இல்லீகல் உறவை நீ ஒத்துக்கிட்டு இருக்கே...உங்கம்மாவும் ஒத்துக்கிட்டிருக்காங்க?''

''தலை எழுத்துன்னு ஒரு வார்த்தையை தவிர இதுக்குமேல எதையும் சொல்ல எனக்கு தெரியல தனா. நான் கைக்குழந்தையா இருக்கும் போது நேர்ந்த உறவு அது. எனக்கு விபரம் தெரியும்போது எல்லாமே கை மீறிப் போயிருந்தது. ஏதோ இந்த மட்டுல அம்மா ஒரே நபர்கிட்ட பாதுகாப்பா இருக்காளேன்னு நினைச்சு சந்தோஷப் பட்டுக்கறத தவிர நான் வேற என்ன செய்ய முடியும்?''

''ஆமா, அவர் தாராசிங் பிரதர் தன்வீர் சிங் தானே?''

''பரவால்லியே...உனக்கும் தெரிஞ்சிருக்கே. எப்படி தனா?''

''எல்லாம் என் அப்பாவோட கைங்கர்யம். அவருக்குதான் இந்த மோப்பம் பிடிக்கற வேலையெல்லாம்...''

''அப்ப என் ஜாதகத்தையே உங்கப்பா அலசி டாரா?''



''அலசியிருக்கணும். அதே சமயம் அவர் செயல்ல ஒரு நியாயமும் இருக்கு ரம்யா...''

''என்ன தனா?''

''உன் ஸ்டெப் ஃபாதரோட பிரதர் இந்தர்ஜித் தாராசிங் என் அப்பாக்கு தொழில் ரீதியாவும், எல்லா விதத்துலையும் எதிரி. என் அப்பாகிட்டே ஒரு வைரம் இருக்கு. அதைத் திருடியாவது அடைஞ்சிட அவர் துடிக்கிறாரு. அதனாலதான் அப்பா உன் விஷயத்துல ரொம்ப எச்சரிக்கையா இருக்காரோன்னு நினைக்கிறேன்...''

தனஞ்செயன் அங்கே இங்கே தொட்டு அதிமுக்கியமான அந்த ரகசியத்தை நெருங்கினான். ரம்யா அதைக் கேட்டு சிரித்தபடி கேட்டாள்.

''தாராசிங்குக்கும், தன்வீர் சிங்குக்கும் பேச்சு வார்த்தை முறிஞ்சே பத்து வருஷம் ஆச்சு. இந்த விஷயத்துல அவர் எப்படி தன்வீரையும் என்னையும் சந்தேகப்படறார்?''

''அப்படியா...! காமாலை கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சளா தெரியுமாம். அப்படித்தானோ என்னவோ?''

''அப்ப எப்படி அந்தக் காமாலையை குணப் படுத்தப் போறே?''

''பார்க்கலாம். முடிஞ்சா பண்ணுவேன். இல்லாட்டி போய்யா நீயும் உன் சொத்தும்னுட்டு வெளிய வந்துட வேண்டியதுதான்.''

-மிக சாதாரணமாக சினிமா தியேட்டரில் டிக்கெட் கிடைக்கா விட்டால் தோன்றும் உணர்ச்சிக்குச் சமமாக அவன் பேசியது அவளுக்கு நிறைய ஆச்சரியம் அளித்தது.

''தனா...எனக்காக நீ அவ்வளவு பெரிய இழப்புக்கு கூட தயாராயிட்டியா?''

''என்ன ரம்யா அப்படி கேட்டுட்டே—? காசு பணத்தை எப்ப வேணா சம்பாதிச்சுக்கலாம். உன்னை என்னால திரும்ப சம்பாதிக்க முடியுமா—?''

அவளுக்கு அந்த பதில் சிலிர்ப்பை ஊட்டியது.

காதலுக்கு அவள் கிறுக்குத்தனமான ஒரு அர்த்தம் வைத்திருந்தாள். அதை மாற்றிக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது.

நெடு நாட்களுக்கு பின் கண்களில் கண்ணீரின் துளிர்ச்சி.

## 8

'அறிவு உணர்வை ஆளவேண்டும் மாறிப் போனால் எல்லாமே மாறிப்போகும். ரமேஷ் வரர் அடிக்கடி சொல்வான் உணர்ச்சி வசப்படுகிறவன் உருப்பட முடியாது என்று!...'

கிருஷ்ணமோகனின் கார்பரேட் ஆபீசில் நித்ய உற்சவம் ஆங்லோ இந்திய ரிசப்ஷனிஸ்ட் புடவை, பூ, பொட்டு என்று அதன் உயிரையே பிசைந்து பார்த்திருந்தாள்.

வண்ணத்துக்கு ஒரு தொலைபேசி, ஒவ்வொன்றுக்கும் ஒரு சப்தம். ஒன்றுக்கு காது கொடுத்தபோது பெண்டிக்ட் என்பவன் பேசினான். கிருஷ்ணமோகனுடன் பேசவேண்டும் என்றான். அவளும் கிருஷ்ணமோகனை தொடர்பு கொண்டு கேட்டாள்.



''முதல்ல கொடு...'' என்று உத்தரவு பிறந்தது.

இனி....

''குட் மார்னிங் சார்... அந்த சாரதா செளத்ரி பத்தி தோண்டி நுங்கு எடுத்துட்டேன். அவ தாரா சிங் அனுப்பின ஆள்தான்....''

''அப்ப யோகி எழுதின லெட்டர்லாம்—?''

''எல்லாம் ஃபோர்ஜரி. ஐநூறு ரூபா நோட்டை கலர் ஜெராக்ஸ் போட்டே ஏமாத்தற உலகத்துல இருக்கோம். இதெல்லாம் என்ன சார்—''

''அப்ப அந்தக் கழுத முண்டையைக் கழுத்த பிடிச்சு தள்ளிட்டுதான் மறுவேலை...''

''அவசரப்படாதீங்க...அவளை அனுப்பினா இன்னொரு ரூபத்துல தாராசிங் வேலையை காட்டுவான். ஆகையால அவளை நம்பற மாதிரி கூட வெச்சே சமாளிக்கணும்.''

''அதுவும் சரிதான். என் பையனுக்கு ஒரு பொண்ணு...இங்க எனக்கு ஒரு பொண்ணா—தாராசிங் ரொம்பதான் என்னை இளிச்ச வாயனாக்க பாக்கறான் பெனடிக்ட்.''

''என்ன சார் பண்றது...உங்க கிட்ட இருக்கற சரக்கும் மகா வேல்யூ உள்ளதாச்சே...''

''சரி பெனடிக்ட்... இப்ப என் பையன் என்ன நிலைல இருக்கறான்?''

''அந்த பெண்ணோட அஞ்சாறு டூயட் பாடிட்டாரு. மகாபலிபுரம் எம்.ஜி.எம்.,மாங்காடுன்னு சுத்திகிட்டுருக்காங்க....''

''மாங்காட்ல யார் இருக்கா?''

''காமாட்சி... அதாங்க சாமி! காமாட்சியம்மன் சாமி. அந்த பொண்ணுக்கு அது இஷ்ட தெய்வம் போல...''

''சரி...நீ கன்டினியூ பண்ணு. மத்ததை நான் பாத்துக்கறேன்'

.ரிசீவரை வைத்துவிட்டு கிருஷ்ணமோகன் கைகளை கூப்பிக் கொண்டு தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தார். முக்கியமான இந்த சமயத்தில் வழிகாட்ட வேண்டிய யோகி வேறு அமெரிக்கா போய்விட்டார். என்ன செய்யலாம்...? மண்டையைக் குடைந்து கொண்டபோது, திரும்ப கூப்பிட்டாள் ரிசப்ஷனிஸ்ட்.

''என்ன க்ளாரா?''

''சுவாமிநாதன் ஹேஸ் கம் சார்...''

''அனுப்பு.''-அடுத்த பத்தாவது நொடியில்-சுவாமிநாதன் கதவை திறந்து கொண்டு உள் நுழைந்தார்.

''வாடா சுவாமி...''

''அப்றம்... எப்படிடா இருக்கே கிருஷ்ணா?''

''இருக்கேன் உக்கார்... என்ன விஷயம்?''

'பொண்ணுக்கு மாப்ள, பாத்துட்டேன். நாளைக்கு நிச்சயதார்த்தம். ஈவினிங் 7 o' clock ராகவேந்த்ரா கல்யாண மண்டபத்துல...''

''மாப்ள என்ன பண்றான்?''

''கே. எம். ஜி. அசோஸியேட்ஸ்ல சீஃப் அக்கவுண்டன்ட்.''

''கங்கிராட்ஸ்... அவசியம் வந்துட்றேன்.''

''ஏமாத்திடாதே கிருஷ்ணா. போர்ட் மீட்டிங் கான்ஃப்ரன்ஸ்ன்னு எதாவது காரணம் சொல்லாதே. நிச்சயமா வரணும்.''



''டோன்ட் ஒர்ரி... ஐ வில் கம்.''

''சரிடா நான் புறப்பட்றேன்.''

''இரு ஃப்ரெஸ் லைம் சாப்டுட்டு போலாம்.''

''சாரிடா... பயங்கர கோல்ட். எனக்கும் சேர்த்து நீ குடிச்சுக்கோ, நாளைக்கு வந்து சேர்.''

—சுவாமிநாதன் கிளம்பினார். கதவுக்கு அப்பால் தலை மறையவும் சுவாமிநாதன் போல் தானும் பொறுப்புள்ள அப்பாவாக நடந்து கொள்ளவில்லையோ என்பது போல் ஒரு சந்தேகம்.

வழுக்கைத் தலைமேல் எண்ணை புரள்கிற மாதிரி ஒரு குறுகுறுப்பு.

தனஞ்ஜெயன் பேச்சலராக இருப்பதால்தானே காதல், கச்சடா என்று எதிரி வலை விரிக்கிறான். அவனுக்கு திருமணம் முடித்து விட்டால்...?

கேள்வியின் எதிரொலி நெடுநேரம் ஃபைல் பார்க்க விடாதபடி கட்டிப் போட்டது. போர்டு மீட்டிங்கில் பிசினஸ் பற்றி பேசவந்திருந்த ரங்காச்சாரியிடம் அது எதிரொலித்தது. கல்யாணம் பற்றி எல்லாம் கேள்வி கேட்கச் செய்தது.

''மிஸ்டர் சாரி... வாட் அபவுட் யுவர் டாட்டர்?''

''ஐ. ஏ. எஸ் எழுதிட்டு ரிசல்ட்டுக்காக காத்திண்டுருக்கா, ஐ ஹேவ் நோ டவுட், டெஃபனட்லி ஷி வில் பாஸ்.''

''ஐ.சீ... கல்யாணம் பண்ற உத்தேசம்லாம்...''

''எனக்கு ஆசைதான் சார். ஆனா, அவ இப்ப வேண்டாம் முதல்ல இண்டியன் அட்மினிஸ்ட்ரேடிவ்

சர்வீஸ், தென் ஃபேமிலி சர்வீஸ்னு எனக்கே அல்லவா கொடுக்கறா...''

சாரி மிக ஆசாரமான மனிதர்.

சாரியின் அப்பா வேலாமூர் வரதராஜன் தமிழ் நாடே போற்றும் மிகப் பெரிய கர்நாடக சங்கீத வித்வான்.

சாரியின் மகள் ஷ்யாமளாவை சில சமயங்களில் கிருஷ்ணமோகன் பார்த்த ஞாபகம்.

மைதா மாவில் நிறைய நெய் விட்டு செய்த பன்னாட்டம் பதமான சிவப்பிலும் பூரிப்பிலும் இருப்பவள்...

ஐ. ஏ. எஸ். வரை எகிறியிருக்கும் கல்வி வீச்சு வேறு...

போட்டு அமுக்கினால் என்ன?

கேள்வியில் எவ்வளவுதான் ஊசலாட முடியும்?

சாரியோ அது புரிந்தது போல கேட்டார்.

''என் பொண்ணு விஷயம் இருக்கட்டும் சார். வாட் அபவுட் யுவர் சன்?''

''பண்ணனும். கூடிய சீக்கிரம் பண்ணணும்,''

''பண்ணிடுங்கோ... இல்லேன்னா அவரா பண்ணின்டுடப் போறார்''

—சாரி யதார்த்தமாக சொன்னாரா இல்லை தனஞ்ஜெயன் பற்றி தெரிந்து சொன்னாரா என்று தெரியவில்லை. கிருஷ்ணமோகன் முகத்தில் கொஞ்சம் உயிரோட்டம் குறைந்து போனது. அப்படியே எண்ணங்களில் தாராசிங் குறுக்கில் புகுந்து போனான்.



மீட்டிங்கில் பிசினஸ் சம்மந்தமாய் பேசும்போது, உஜ்ஜல் சிங் என்பவர் வந்திருந்தார். அவரை பல தடவை தாராசிங் தாராசிங் என்று தப்பாக அழைத்ததில் இருந்தே மற்றவர்களும் புரிந்து கொண்டனர்.

கிருஷ்ணமோகனுக்கே கஷ்டமாக இருந்தது.

கரையான் மண்ணில் புற்று கட்டலாம். மனதில் கட்டக் கூடாது. அப்புறம் எதிலும் முழுமையாக ஈடுபட முடியாது. அதிலும் கிருஷ்ணமோகன் போன்ற மேனேஜிங் டைரக்டர்கள் மனது ஸ்படிகம் போல துல்லியமாக அல்லவா இருக்க வேண்டும்?

சாதாரணமாக இந்த மாதிரி சலன சஞ்சலங்கள் இருக்கும்போது அந்த வைரத்தை கைகளில் வைத்துக் கொண்டு தியானம் செய்வது நல்லது என்று கூறியிருக்கிறார் கருடாத்ரி.

இன்று அதுபோல செயல்பட்டால் மனதுக்கு பலமாக இருக்கும் என்று தோன்றியது.

மீட்டிங்கை நடுவிலேயே முடித்துக் கொண்டார்.

வைரம் இருக்கும் இடம், நோக்கி கிளம்பிப் போனார்.

பேங்க் லாக்கரில் இருந்தது அது. பேங்க் மேனேஜர் துணையுடன் அதை லாக்கரில் இருந்து எடுத்துக் கொண்டு கிளம்பும்போது மாலை ஆரம்பமாகி விட்டது.

வீட்டில்தான் பெரிய பூஜை அறை இருக்கிறது.

பவழக்கால் மணி மண்டபமும், உள்ளே தங்கத்தாலான ஸ்ரீனிவாச பெருமாளுமாக வெரி காஸ்ட்லி பூஜை ரூம்.

உள்ளே நுழைந்த மாத்திரத்தில் பெருமாளுக்கு எதிரில் உள்ள வெள்ளிப் பாத்திரத்தில் வைரத்தைப் போட்டு மூடினார்.

பின் உள்ளே போய் குளித்துவிட்டு பட்டு உடுத்திக் கொண்டு வந்தார்.

பார்க்க பக்திப் பழமாகத் தெரிந்தார்.

மனதில் தாராசிங் குதித்துக்கொண்டே இருந்தான்.

எரிமலையாட்டம் குமுறிக்கொண்டே இருந்தது மனது.

கருடாத்ரி யோசி இந்த மாதிரி சமயங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொன்னது ஞாபகத்தில் வந்தது.

வைரத்தை கைகளில் எடுத்துக் கொண்டார். பத்மாசனம் போட்டு அமர்ந்தார். வைரம் உள்ள கைகளை முன்னால் மூடிக் கொண்டார்.

''ஐந்து நிமிடம்... ஐந்தே நிமிடம்... இந்த நிலையில் மனதில் எந்த எண்ணமும் இல்லாமல் இருந்து விட்டால் போதும்.

அதன் பின் மனது வைரம் பாய்ந்து விடும். பயமான எண்ணங்களே தோன்றாது. உலகத்தையே ஃபுட்பாலாய் உருட்டி விளையாடலாம் எனும் அளவு தைரியப் பெருக்கம் இருக்கும். பகவான் புத்தரின் கை பட்ட வைரமென்றால் சும்மாவா?''

இதெல்லாம் அவர் சொன்னது—

அந்த மாதிரியே ஆனது. ஐந்து நிமிட தியானத்தில் ஏதோ ஒரு மூட்டை விட்டமினை சாப்பிட்ட மாதிரி சுறுசுறுப்பாகவும் இருந்தது. பூஜை அறையை விட்டு வெளியே வந்தபோது எதிரில் தனஞ்ஜெயன் வந்தான். கிருஷ்ணமோகனை பக்தி சொருபத்தில் பார்த்துவிட்டு இடக்குச் சிரிப்பு சிரித்தான்.

அவருக்கும் புரிந்துபோனது.



''சிரிக்காத தனா— என்னப் பார்த்தா உனக்கு சிரிப்பா இருக்கா?''

''இல்லிப்பா... கோட்டும் சூட்டுமாவே பாத்து பழகிட்டேனா. இந்த மாதிரி பக்தி பூர்வமா பாக்கும் போது சிரிக்காம இருக்க முடியல...''

''சரி... உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.''

''என்னப்பா... என் காதல் விஷயத்த பத்தி மட்டும் பேசிடாதீங்க. நான் அதுல எந்த நிலைலயும் பின் வாங்க மாட்டேன்.''

''இதோபார்.. உனக்கு கல்யாணம் பண்ணி வைக்க வேண்டியது என் கடமை. அது உன் விருப்பப்படியே நடந்தா எனக்கு சந்தோஷம்தான். எதிர்க்க எதிர்க்க உன் வீம்பும் பிடிவாதமும் அதிகமாகும்னு எனக்குத் தெரியும். ஆகையால அந்த பெண்ணுக்கு உன்னை கல்யாணம் பண்ணி வைக்கறதுன்னு முடிவு பண்ணிட்டேன். ஆனா ஒரு கண்டிஷன்...''

''என்னப்பா...''

''கல்யாணமும் சரி, அதுக்கப்புறமுமான வாழ்க்கையும் சரி, இங்க... சென்னைல இல்ல. ஸ்டேட்ஸ்ல... சரியா?''

—அவன் அதைக்கேட்டு சில நிமிடம் வரை மௌனித்தவன் அவர் எதற்காக அப்படிச் சொல்கிறார் என்பதைப் புரிந்து கொண்டவனாக தலையை அசைத்தான்.

''குட்... ஆனா இப்ப சொல்றேன். அந்த பொண்ணு இதுக்கு சம்மதிக்கமாட்டா பாரு.''—அவர் புதிர் போட்டார்.

''அப்பா இது உங்க சந்தேகம், ரம்யா இதைக் கேட்டு ரொம்ப சந்தோஷப்படுவா, நிச்சயம் சம்மதிப்பா...''

''மாட்டேன்னு சொன்ன...''

''சொன்னா...?''

''அவ நான் சந்தேகப்பட்ற மாதிரியான பொண்ணு. இங்க இருந்து உன்னையும், என்னையும் டபாய்ச்சிட்டு வைரம் திருட வந்தவங்கறத ஒத்துக் கறியா?''

''அப்படி மட்டும் இருந்துட்டா காறித்துப்பாம வர மாட்டேன் தெரிஞ்சுக்குங்க...''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்னு வந்துடு ..அது போதும். அதே சமயம், நான் பார்க்கிற பெண்ணை நீ கல்யாணம் பண்ணிக்கத் தயங்கக்கூடாது ..''

''நிச்சயமாய்...ஆனா நீங்க ஏமாறப் போறீங்க..''

யார் ஏமாறப் போறோம்னு போகப் போகப் பார்ப் போமே. .''-அவன் அடுத்த நொடியே புறப்பட்டான். சந்தோஷமான இந்த விஷயத்தை கூற நேராக ரம்யா வின் வீட்டுக்கே போய் விடுவது என்று தீர்மானித்து காரை அங்கே செலுத்தினான்.

## 9

'அவனது அசைன்மென்ட் எல்லாமே நாட் களில் முடியக் கூடியவை அல்ல. மாதங்களில், வருடங்களில் முடியக் கூடியது அது.



காரியம் சாதிக்க எல்லா முறை உறவுகளை யும் விலைக்கு வாங்கியாக வேண்டும் என்றால் வாங்கத்தான் வேண்டும் என்பது அவன் பாலிசி.'

அவனை அவள் துளிகூட எதிர்பார்க்கவில்லை. எதிரே ஒரு சந்தோஷச் சிற்பமாக கீ செய்னை சுழற்றிய படி நிற்பனை உள்ளே அழைக்கக் கூட தோன்ற வில்லை.

''என்ன ரம் அப்படிப்பாக்கறே..? அப்பா நம்ம கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டாரு...''

அவன் வாசலுக்கு முன்னால் நின்று கொண்டு உற்சாகமாகப் பேசினான்.

அவளுக்கு பின்னாலேயே முக்காடிட்ட நிலையில் ஒரு பெண் உருவம்! அவள் அம்மா பானுமதியோ?

''வணக்கங்க ..நான் தனஞ்ஜெயன். ரம்யா சொல்லி யிருப்பான்னு நினைக்கறேன்...''

-தனஞ்ஜெயனிடம் ஆர்வம் பீறிட்டது.

பானுமதி தயங்கியபடி அழைத்தாள். அவனும் உள்ளே நுழைந்தான். மயக்கியது சூழ்நிலை.

எல்லா வசதியும் செய்து தந்திருந்தார் தன்விர்சிங்.

வைப்பாட்டியையே இந்த அளவு தாங்குபவர் மனைவியை நிச்சயம் தாஜ்மஹால் லெவலுக்கான கட்டிடத்தில் வைத்திருப்பாரோ?

''உக்காருப்பா...''-ரம்யாவின் அம்மா பானுமதி சொல்லவும், அவன் உட்கார்ந்தான்.

ரம்யாவிடம் எந்த பேச்சுமில்லை.

புதுப்பெண்போல தலை தாழ்ந்தபடி நின்று கொண் டிருந்தாள்.

''என்ன ரம்யா...உன்னால நம்ப முடியலைலல்ல?''

—அவன் திமிண்டினான்.

''... ... என்ன சொன்னீங்க?''

''என்னது— சொன்னீங்கவா? என்ன இது புது மரியாதை?'

—அவளிடம் திரும்பவும் மௌனத்தின் தொடர்ச்சி.

—என்ன ரம்... உடம்பு சரியில்லையா?''

''இல்லே... அதெல்லாம் ஒண்ணுமில்லே,''

''பொய் சொல்றே... என்னம்மா இது. வந்ததுல இருந்து நானே பேசிகிட்டிருக்கேன் நீங்களோ, ரம்யாவோ எதுவுமே பேச மாட்டேங்கிறீங்களே...''

''என்ன பேசணும்?''

''என்ன பேசணுமா... நான் எவ்வளவு பெரிய சந்தோஷமான விஷயம் சொல்லிருக்கேன். நீங்க எதுவுமே சொல்லலையே...''

''இல்ல தம்பி....இது சரிப்பட்டுவராது ''—பானுமதி அவனுக்கு நேர் எதிரான பதிலைச் சொல்லிவிட்டு—

''தம்பிக்கு காப்பி எடுத்துகிட்டு வா ரம்யா...'' என்று ரம்யாவையும் தூண்டினாள்.

அவனிடம் கணிசமான அதிர்ச்சி. அதோடு கேட்டான்.

''ஏங்க?''

''நான் எந்த பதிலையும் இதுக்குமேல் சொல்ல விரும்பல. நீங்க ரம்யாவை மறந்துடுங்க தம்பி.''

''மறக்கறதா...ரம்....'' -அவன் பார்வை உடனே அவளைத் தேடியது.



அவள் சமையல் கட்டில் இருந்தாள். அவன் அதற்காக துளி கூட லஜ்ஜைப்படவில்லை. எழுந்து அங்கேயே சென்றான்.

''ரம்யா— என்ன இது... உங்கம்மா என்னென்னவோ சொல்றாங்க''

''உள்ளதைச் சொல்றாங்க தனா...''

''என்ன ரம்யா குண்டைத் தூக்கி போட்றே. நாம இந்த ஊர்லேயே இருக்கப் போறதில்ல. கல்யாணத்துக்கு பிறகு ஸ்டேட்க்ஸுக்கு போய்டுவோம். உங்கம்மாவும் கூட வரலாம். நோ பிராப்ளம்.''

''இதோ பார் தனா... வந்த மரியாதைக்கு உனக்கு காபி தரப்போறேன். சாப்பிட்டு புறப்படு இந்த கல்யாணம் கத்தரிக்கல்லாம் சரிப்படாது. மறந்துடு.''

''என்ன ரம்யா... என்னாச்சு உனக்கு?''

—அவளிடம் பதட்டம் உச்சம் நோக்கி போனது.

''எதுவும் ஆகலை. ரொம்ப போட்டு அலட்டிக்காதே. நானும், அம்மாவும் ரொம்ப நேரம் யோசிச்சோம். உன் அப்பா நிச்சயமா உள்ளூர்ல நாம வாழ அனுமதிக்க மாட்டார்னு நான் கெஸ் பண்ணியிருந்தேன். நீ புரூஃப் பண்ணிட்டே ''

''அப்ப அவர் உன்னை பத்தி சந்தேகப்பட்டது சரிதாங்கறியா?''

''நீ எப்படி வேணா எடுத்துக்கோ. ஐ டோண்ட் கேர்''

—அவள் சாதாரணமாக சொல்லிக்கொண்டே காபி டம்ளரை அவன் எதிரில் நீட்டினாள்.

அவன் மீசை துடிக்கத் தொடங்கியிருந்தது. குத்தீட்டி போல பார்த்துவிட்டு காப்பி தம்ளரை ஆவேசத்தோடு தட்டிவிட்டான். அவள் அதைப் பார்த்து சிரித்தாள்.

''சிரிக்காதே ரம்யா...காதலை நீ ரொம்ப கேவலப் படுத்திட்டே...''

''அப்படிங்களா...உங்க இழுப்புக்கெல்லாம் வந்தா நான் நல்ல காதலி, இல்லேன்னா கேவலப் படுத்தறவளா?''

''பேசாதே...என் அப்பா சொன்னதுதான் சரி. நான் வரேன்''

—அவன் விசையோடு புறப்பட்டான். அவள் கண்கள் அவனுக்குத் தெரியாத விதத்தில் கலங்கியிருந்தன. அந்த க்ஷணத்தில் அதுவரை அடைத்திருந்த அறைக் கதவு ஒன்று திறந்து கொண்டது.

உள்ளிருந்து வெளியே வந்தான் ஐம்பது வயது மதிப்பில் ஒருவன். தன்வீர்சிங்!

''சபாஷ் ரம்யா... சொன்னபடி நடந்து உன் நன்றியை காமிச்சுட்டே. இனி நீ யாரை லவ் பண்ணினாலும், உனக்கு இந்த தன்வீர் சிங் கட்டி வைப்பேன். கவலைப்படாதே. உன்னை நான் பெத்த மகள்னே சொல்லிகட்டி வைக்கறேன்.''

அவன் சொல்லச் சொல்ல அவள் அழுகை பல மடங்காகியது. அதைபற்றி அவன் லட்சியம் செய்த மாதிரியே தெரியவில்லை.

வீட்டுக்குள்ளே இருக்கப் பிடிக்காதவள் போல வெளியே ஓடினாள்.



அதைப் பார்த்த அவனும் இளக்காரமாக சிரித்தான். அம்மாவின் நெஞ்சு மொத்தமாக எல்லாவற்றுக்குமாக வலித்தது. சேர்த்து வைத்துப் பேசினாள்.

''இது கொஞ்சம் கூட நல்லா இல்லை...''

''இதை எத்தனை தடவை சொல்வே பானுமதி.''

''ஆயிரம் தடவை சொன்னாலும் ஆற மாட்டேங்குதே.''

'இதோ பார்... உனக்கு நான் கிடைச்சதே பெரிய விஷயம். உன் பொண்ணு இவ்வளவு தூரம் சுதந்தரமா இருக்கறதும், படிக்கிறதும் அதை விட பெரிய விஷயம்.

விட்டிருந்தா பம்பாய் டோம்பி வில்லில நீயும் உன் மகளும் கானா பாட்டு பாடி பொழைச்சிக்கிட்டிருப்பீங்க. ஞாபகம் இருக்கட்டும்.

அலட்டிக்காம போய் வேலையைப்பார்.

எனக்கு தெரியாம அந்த பையனைப் பார்த்து ஓடிப் போற வேலை எல்லாம் வேண்டாம்.

அவனுக்கு வேற இடத்துல பொண்ணு ரெடியா இருக்கு...

—தன்வீர் பேச்சின் முடிவில் வைத்த விஷயம் அவளைத் தொப்புளைத் தைத்த கத்தி போல நிமிர்த்தியது.

''என்னங்க சொல்றீங்க...''

''ஆமாம் பானுமதி. அந்தப் பணக்காரன் தன் அந்தஸ்த்துக்கு தகுந்த மாதிரி பெண் பார்த்துட்டான். என்னையும் என் அண்ணனோட சம்மந்தப்படுத்தி சந்தேகப்பட்டான். நான் என் அண்ணன் பேச்சைக் கேட்காம இருக்க பத்து லட்சம், ரம்யாவை இப்படி

சொல்ல வைக்க பத்து லட்சம்னு மொத்தமா எனக்கு இருபது லட்சம்.

லட்சுமி என் விட்டுக் கதவை தானா வந்து தட்றா. எனக்கும் என் அண்ணனுக்கும் பேச்சே இல்லை நம்புய்யான்னு சொல்லப் பார்த்தேன். அவன் அதை நம்பப் போறதில்லைன்னு தெரிஞ்சு விட்டுட்டேன்.

நானா கேட்கலை...தானா வருது...எதுக்கு விடணும்? பணக்காரங்களுக்கும் எப்பவும் ஜாதி, அந்தஸ்து, கௌரவம் இதானே பெரிசு? என்னைக் கேட்டா இப்படி காதலிக்கறதும், பின்னால அதை மறக்க பணம் வாங்கிக்கறதும் கூட ஒரு நல்ல பிசினஸாதான் இருக்கு என்ன சொல்றே...?

—தன்வீரின் பேச்சில் எக்காளம். ஆனால் பானுமதி கையாலாகாத தன் நிலையை நொந்து கொண்டாள். ஒரு நல்ல வாழ்க்கை பெண்ணுக்கு வரப்போகிறது; அவள் நல்ல விதமாக வாழப் போகிறாள் என்கிற கற்பனையில் இப்படியா மண் விழும்? கேள்வியோடு தொடர்ந்து அழுதாள்.

## 10

'ராமேஷ்வர் பயங்கர கில்லாடி...கொஞ்சம் நேர்மையான பிசினஸ் மேன். அவன் வரையில் தாராசிங்கின் அசைன்மென்டில் சில சந்தேகங்கள் உருவாகி விட்டன! அது தீர்ந்தால் தான் வேலை தொடரும்...'

போர்டிகோவில் நுழைந்த காரில் இருந்து புயல் போல இறங்கி உள் நுழைந்தான் தனஞ்ஜெயன்



செய்தி உடனடியாக கிருஷ்ணமோகனுக்குப் போனது. ஒரு வேலைக்காரன் மூலம்...''

''ஐய்யா...சின்ன முதலாளி நீங்க எதிர்பார்த்தா மாதிரியே கோபமாவும், வருத்தமாவும்தான் இருக்காங்க...''

''நல்லது...அவனை தொடர்ந்து கவனி. அப்பப்ப தகவல் சொல்லு...''

''சரிங்க.'' -தொலைபேசியை முடக்கி விட்டு தனஞ்ஜெயனின் அறையில் எட்டிப் பார்த்தான்.

கழுதை கெட்டால் குட்டிச் சுவர்.

தனாவுக்கு பிகார்டி ரம்.

இடையில் அவனது செல்போனில் சிணுங்கல்.

எடுத்து திரையைப் பார்த்தான்.

கிருஷ்ணமோகன்தான் கூப்பிட்டிருந்தார்.

காதைக் கொடுக்கவே சங்கடமாக இருந்தது.

''என்ன தனா... என்னாச்சு?''

''எதுப்பா?''

''எதா... என்னடா... என்ன சொன்னா அந்தப் பொண்ணு?''

''...............''

''பேசுடா, இப்படி மௌனமா இருந்தா நான் என்னன்னு நினைக்கறது?''

''அப்பா... இப்ப என்னை எதுவும் கேக்காதீங்க.''

-அவன் தோல்வியை ஒப்புக்கொள்ள மனமின்றி செல்லை ஆஃப் செய்தான்.

LIBRARY 162, Road

மறுபக்கம். ஏராள சிரிப்போடு நிமிர்ந்தார் கிருஷ்ண மோகன்.

''ஒரு கல்லுல இரண்டு மாங்காய்...''-உற்சாகமாக சொல்லிக் கொண்டார்.

எதிரில் சுவாமிநாதன்.

''இரண்டு மாங்காயா— எப்படிடா?''

''ஆமாண்டா சுவாமி. ஜஸ்ட் இருபது லட்சத்துல அந்த தாராசிங்குக்கும் செக் வெச்சுட்டேன் அப்படியே ஒரு வைப்பாட்டி மக எனக்கு மருமகளாகப் போன விபத்தையும் தவிர்த்துட்டேன்...''

''இப்ப ஜெயிச்சுட்டே... இப்படியே தாராசிங்க சமாளிக்க செலவு பண்ணிகிட்டேயிருப்பியா?''

''என்ன பண்ணச் சொல்றே...? அந்த அதிர்ஷ்ட வைரத்தை அவன் கேக்கற விலைக்கு கொடுத்துடச் சொல்றியா?''

''எனக்கு சொல்லத் தெரியல... ஆனா இப்படியே நீ டென்ஷனோட எந்த முனையில எப்படி பிரச்சினை வரும்னே தெரியாம காலம் தள்றதும் கஷ்டம் கிருஷ்ணா...''

''உண்மைதான். அதுக்குதான் ஒரு நல்ல ஏற்பாடு பண்ணியிருக்கேன். நம்ம சாரி இல்ல...''

''யாரு— போர்ட் பிரசிடென்ட் ரங்காச்சாரியா?''

''ஆமாம்... அவர பத்தி என்ன நினைக்கறே?''

''நைஸ்மேன். அவருக்கென்ன...?''

''அவருக்கு ஒண்ணுமில்லடா, அவரோட டாட்டர் ஷ்யாமளா பத்தி கேள்விபட்டிருக்கேல்ல...''



''சொல்லு...டி.வி.ல கூட பாடியிருக்கானே..?''

''பாட்டு மட்டுமில்ல...ஐ ஏ எஸ் கூட எழுதியிருக்காளாம்.

''புரியுது கிருஷ்ணா... அவளை உன் பையனுக்கு முடிச்சுப் போடப் போறியா?''

''ஆமாம்...அவன் பேச்சலரா இருக்கறதலா தானே அந்த தாராசிங் இப்படி எல்லாம் ட்ரை பண்றான்?''

''ஃபூல். அவன்தான் கொக்குதலைல வெண்ணை வைக்கறான்னா... நீ அதுக்குமேல அலட்டிக்கறியே. உன் கைல இருக்கற வைரத்தை உன் அனுமதி இல்லாம உனக்கு தெரியாம யார் என்னடா பண்ணிட முடியும்? ஏன் உனக்கு அந்த தைரியம் இல்ல?''

''அப்படிதான் நானும் நினைச்சேன் சுவாமி ஆனா இந்த விவகாரம் இப்படி இல்ல. வெளிய இருந்து தாரா சிங் ஆட்கள் உள்ள நுழைஞ்சிட்டா அவங்க எதுவேணா செய்யலாம்.

நான் சாப்பிட்ற சாப்பாட்டுல ஸ்லோ பாய்சன கலக்கலாம். தூங்கும்போது என் கழுத்தையும் நெரிச்சே கொல்லலாம்.

அதுலையும் அந்த ராமேஷ்வர் ஒரு அசைன்மென்ட் எடுத்தா அத முடிக்காம விடமாட்டானாமே...?''

''ஐ சீ... மொத்தத்துல அவங்க வைரத்தை அடைஞ்சுட்டாங்களோ இல்லையோ, உன்னை நல்லாவே உலுக்கிட்டாங்க. உலுக்கிகிட்டும் இருக்காங்க...

ஆமா... அதை வேற யாருக்காவது வித்துட்டு ரிலீஃப் ஆயிடேன். தாராசிங் கவனமும் அந்த பக்கம் திரும்பிடும்.''

''போடா ஃபூல். நீயும்தான் பத்து வருஷமா பிசினஸ் பண்றே. நானும்தான் பண்றேன். இரண்டு பேரும் எந்த விதத்துல முயற்சியில குறை வெச்சிருப் போம்?

ஆனா என் டர்ன் ஓவர் 10 கோடி பக்கம்...

நீ இன்னும் இருபது முப்பது லட்சத்துலையே இருக்கே. எல்லாம் எதனாலன்னு நினைக்கறே...?''

''அப்ப நீ உசுரை விட்டாலும் விடுவே. வைரத்தை விடமாட்டே. அப்படித்தானே?''

''நிச்சயமா... அது என் வளர்ச்சிக்கு காரணம்கற தாலதானே தாராசிங் லட்சக் கணக்குல செலவு பண்றான்.''

''மாடர்ன் வேர்ல்டுல இதை எல்லாம் வெளிய சொன்னா நம்புவாங்களா?''

''புடலங்கா, என்னடா பெரிய மாடர்ன் வேர்ல்ட்?

''சந்திரனுக்கு போன ஆம்ஸ்ட்ராங் சிலுவை போட்டுக்கலையா? இந்தியாவையே கைக்குள்ற வெச்சிருக்கற பிரதமரும், ஜனாதிபதியும் கோவிலுக்கும் போகலையா...?

அவ்வளவு ஏன்...?

மோனிகா விவகாரத்துல வாக்குமூலம் கொடுத்த கிளிண்டன் என்னடா சொன்னார்? நான் குற்ற மற்றவன் என்பது அந்தக் கடவுளுக்குத் தெரியும்னு சொல்லலை...?''

''இப்ப நீ என்ன சொல்றே...?''

''என்கிட்ட வைரம் இருக்கற வரை என்னை யாராலையும் எதுவும் செய்ய முடியாது சுவாமி. நா



நினைக்கிற படிதான் எல்லாம் நடக்கும். என் மகனோட காதல் விஷயத்தையே எப்படி சமாளிச்சேன் பார்த்தேல்ல...''

''அப்ப போராட்டம்தான் இனி உன் வாழ்வா?''

''ஆமா... அதே சமயம் வெற்றியும் எனக்குதான்''

—கிருஷ்ணமோகனின் ஆக்ரோஷம், தீவிரம் எல்லாமே சுவாமிநாதனுக்கு பெருத்த ஆச்சரியத்தை தான் தந்தது.

'ஆமா உன்னை பிராக்கெட் பண்ண ஒருத்தி சாரதா சௌத்ரின்னு வந்துருக்காளே—அவளை என்ன பண்ணப்போறே?''

''அவதான் எனக்கு கிடைச்சிருக்கற ரெட் காய்ன் சுவாமி. அவளோட ஃபாலோ அப்தான் தாராசிங். பாக்கத் தானே போறே...?''

''டேய்...இதைப் போராட்டத்துல பிசினஸை விட்டுடாதேடா. உன்னை நினைச்சா எனக்கு பயமா இருக்கு...''

''சுவாமிநாதன் நல்ல நண்பனாக கரிசனம் காட்டினார்.

''நான்தான் சொன்னேனில்லியா...வைரம் என் கிட்ட இருக்கற வரை என்னை யாராலையும் அசைக்க முடியாதுன்னு...''

—கிருஷ்ணமோகன் சொல்வதுதான் உண்மையா? சுவாமிநாதன் முகத்தில் ஈயாடவில்லை. கூடவே ஒரு அசிப்பு...

''ஆமா...அத என் கண்ணுல கூட காட்ட மாட்டேங் கிறியே. என் மேலையும் உனக்கு சந்தேகமா?''

—சுவாமிநாதன் கேட்கும் விதமே ஒரு மாதிரி இருந்தது. அந்த அலாதியான வைரத்தைப் பார்க்கும் ஆசை கண்களில் பாஸ்பரஸ் போலமின்னிக்காட்டியது.

''காட்றேன்டா... இன்னிக்கு அது என் வீட்லதான் இருக்கு. இவ்வளவு தெம்பா உன்கிட்ட நான் பேசக் காரணமே அந்த வைரம்தான். கிளம்பு. போகலாம்.''

—அடுத்த நொடி சீட்டை விட்டு எழுந்தார் கிருஷ்ணமோகன்.

சுவாமிநாதனுக்குள்ளும் உற்சாகம் தலைக்கேறத் தொடங்கிவிட்டது.

காரில் போய் கொண்டிருக்கும்போது கிருஷ்ண மோகனிடம் அதன் பிரதாபம்தான்....

''எப்ப நான் அதை அந்தபுத்த பிட்சு கிட்ட இருந்து வாங்கினேனோ அப்ப இருந்தே என் லைஃப் ஸ்டைலே மாறிப் போச்சு தெரியுமா?''

''எப்படி?''

''புதுசா ஒரு வேலைக்காரன் வெச்சுக்கலை... எல்லாம் பழைய ஆட்கள்தான். அவங்கமேலையும் எப்பவும் ஒரு கண் வெச்சிருக்கேன். ஏன்னா... யாரா வேணும்னாலும் இந்த தாராசிங் விலைக்கு வாங்கலா மில்லையா...?

—அவனும் முட்டி மோதிப் பார்த்தான்.

—ஊஹூம் பலிக்கலையே...''

—பேச்சில் செம கித்தாப்பு.

''இவ்வளவு நாள்ல நான் அதை தனஞ்ஜெயன் கிட்ட கூட காட்டனது இல்லேன்னா பாத்துக்கோயேன். அவனுக்கும் இண்ட்ரஸ்ட் இல்லை. எப்படி இருந்தாலும்



அப்பாவுக்கு அப்புறமா எனக்குத்தானேங்கறது அவனோட எண்ணமோ என்னவோ...''

மகனைப்பற்றிய கருத்தோடு பக்கவாட்டில் திரும் பினார் கிருஷ்ணமோகன் சுவாமிநாதன் முகத்தில் ஆமோதிப்புப் புன்னகை.

''ஆமா இந்த வைரத்த எப்படி கையாளணும்னு ஏதாவது வரைமுறை இருக்கா?''

''ஏன் இல்லாம... இதோட மதிப்பு சொன்னவரே சருடாத்ரிதானே..? கைல வெச்சுண்டு தியானம் செய் வேன். சார்ஜ் பண்ணின மாதிரி ஆயிடும் உடம்பு ''

''சரி...இப்போ அதோட மதிப்பு எவ்வளவு இருக் கும்னு நினைக்கறே?''

''யாருக்குத்தான் தெரியும்... நான் ஐம்பது லட்சம் கொடுத்து வாங்கும்போதே அதோட மதிப்பு பல கோடி... இருந்தாலும் உடனடியா பணம் நான் தந்ததா லேயும் சருடாத்ரி யோகி சொன்னதாலேயும் அந்த பிட்சு எனக்கு கொடுத்தான்...''

''அதை நீ வைர வியாபாரிகள் கிட்ட காட்டி தரப் பரிசோதனை எல்லாம் பண்ணலியா?''

''பிட்சுவே வியாபாரிதானே...அதோட சருடாத்ரி யோகியே சொல்லிட்ட பின்னால அத சந்தேகப் பட்றது அழகா என்ன...?''

''அப்ப நீ அதை சோதிச்சே பார்க்கலை. அப்படித் தானே?''

''ஆமான்டா.... அது எத்தனை காரட், அதோட மார்க்கெட் மதிப்பு என்ன ஏதுன்னு எதுவுமே தெரி யாது. தெரியவும் வேண்டாம். அதான் பலனை அனுபவிக்கிறேனே... இன்னும் என்ன சந்தேகம்...?''

''அதுவும் சரிதான்...'' -சுவாமிநாதன் ஆமோதிக்க பங்களாவை நெருங்கியது கார். இருவரும் இறங்கி உள்ளே சென்றனர்.

கிருஷ்ணமோகன் பவித்ரமாக பாத்ரூமுக்கு போய் ஒரு முக்குபோட்டு விட்டு பட்டுவேட்டி சட்டையோடு வந்தார்.

உற்சாகமாக சுவாமிநாதனையும் அழைத்துக் கொண்டு பூஜை அறைக்குள் நுழைந்தார்.

அறையில் சம்பிரமாக திருப்பதி ஸ்வாமி.

முன்னால் வெள்ளிப்பேலா, பேலாவினுள் பாலில் மூழ்கியிருக்கும் நிலையில் அந்த வைரம். ஐந்து விரல் களை உள்ளே விட்டு வைரத்தை வெளியே எடுக்கவும். ஒளிக் கூத்துக்கட்டி மின்னலாட்டம் போட்டது அது.

சுவாமிநாதனுக்கு கண்கள் காதுவரை விரிந்தன.

''கிருஷ்ணா...கிருஷ்ணா...இப்படி கொஞ்சம் என் கைல வையேன். நானும் கொஞ்சம் தியானம் பண்ணிக் கறேன்.''

-அவர் குரலில் ஆசையும், ஏக்கமும் போட்டி யிட்டன.

கிருஷ்ணமோகன் வைரத்தை பட்டு இடுப்புத் துண்டால் நன்றாக துடைத்துவிட்டு அப்படியே தூக்கி பரக்க பரக்க கை நீட்டிய சுவாமிநாதன் கையில் வைத்தார்.

ஒரு பேப்பர் வெயிட் அளவு பாரம். சூரியத் துண்டை பிடித்தாற் போல ஒரு உணர்ச்சி.

இருவரின் பரவச அனுபவத்திற்கு நடுவில் அறை வாசலில் தனஞ்ஜெயன் உருவமும் தெரிந்தது.

சுமாரான போதையில் இருந்தான்.



தள்ளாடலோடு உள்ளே நுழைய ஆரம்பித்தான்.

''நில்லுடா... குடிச்சிருக்கியா?'' -அலறினார் கிருஷ்ணமோகன்.

-அவன் உடனே நின்றான்.

''போடா... போய்டு இது பவித்ரமான இடம். குடிச்சுபிட்டு வராதே போய்டு...''

-அவன் நின்று சில விநாடி முறைத்துவிட்டு திரும்பிப் போனான்.

கிருஷ்ணமோகனுக்கு மூச்சுக் குழல் சீர்பட்டது.

சுவாமிநாதன் கவனமோ வைரம் மேலேயே இருந் தது. கிருஷ்ணமோகன் அனுமதித்தது போதும் என்கிற மாதிரி சுவாமிநாதன் கையிலிருந்து அதைப் பிடுங்கி திரும்ப பால்கிண்ணத்தில் போட்டார்.

''சரி வாடா சுவாமி... வெளிய போய் பேசுவோம்,'' -என்று சொன்னபடியே வெளியே வந்து ஞாபகமாக அந்த அறையை ரிமோட்டால் பூட்டினார்.

''என்னடா...எலக்ட்ரானிக்ஸ் கன்ட்ரோலா?',

''ஆமாம். பொக்கிஷத்தைல்ல உள்ள வெச்சருக் கேன். எப்படிடா இருக்கு சாமி...?''

''என்னத்தடா சொல்வேன்... புத்தபிரான் கைபட்ட ஒரு விஷயம் உன்கிட்ட இருக்குங்கறதுக்காக சந்தோ ஷப் பட்றதா... அது சர்வசக்தியோட உன்னை காப் பாத்தி உன் எல்லா சாதுர்யங்களுக்கு துணை இருக்கற துக்காக சந்தோஷப்பட்றதா, இல்லை அதை நீ தக்க வெச்சுக்க உன் மகன் காதலல இருந்து எல்லாத்தையும் நீ விலைக்கு வாங்கறியே... அதை நினைச்சு சந்தோ ஷப்பட்றதா... ஒண்ணுமே புரியலடா...'' -நடந்தபடி வந்து கூடத்தில் அமர்ந்து பேசும் சுவாமிநாதனின்

''அதுவும் சரிதான்...'' -சுவாமிநாதன் ஆமோதிக்க
பங்களாவை நெருங்கியது கார். இருவரும் இறங்கி
உள்ளே சென்றனர்.

கிருஷ்ணமோகன் பவித்ரமாக பாத்ரூமுக்கு போய்
ஒரு முக்குபோட்டு விட்டு பட்டுவேட்டி சட்டையோடு
வந்தார்.

உற்சாகமாக 'சுவாமிநாதனையும் அழைத்துக்
கொண்டு பூஜை அறைக்குள் நுழைந்தார்.

அறையில் சம்பிரமாக திருப்பதி ஸ்வாமி.

முன்னால் வெள்ளிப்பேலா, பேலாவினுள் பாலில்
மூழ்கியிருக்கும் நிலையில் அந்த வைரம். ஐந்து விரல்
களை உள்ளே விட்டு வைரத்தை வெளியே எடுக்கவும்.
ஒளிக் கூத்துக்கட்டி மின்னலாட்டம் போட்டது அது.

சுவாமிநாதனுக்கு கண்கள் காதுவரை விரிந்தன.

''கிருஷ்ணா...கிருஷ்ணா...இப்படி கொஞ்சம் என்
கைல வையேன். நானும் கொஞ்சம் தியானம் பண்ணிக்
கறேன்.''

-அவர் குரலில் ஆசையும், ஏக்கமும் போட்டி
யிட்டன.

கிருஷ்ணமோகன் வைரத்தை பட்டு இடுப்புத்
துண்டால் நன்றாக துடைத்துவிட்டு அப்படியே தூக்கி
பரக்க பரக்க கை நீட்டிய சுவாமிநாதன் கையில்
வைத்தார்.

ஒரு பேப்பர் வெயிட் அளவு பாரம். சூரியத்
துண்டை பிடித்தாற் போல ஒரு உணர்ச்சி.

இருவரின் பரவச அனுபவத்திற்கு நடுவில் அறை
வாசலில் தனஞ்ஜெயன் உருவமும் தெரிந்தது.

சுமாரான போதையில் இருந்தான்.



தள்ளாடலோடு உள்ளே நுழைய ஆரம்பித்தான்.

''நில்லுடா... குடிச்சிருக்கியா?'' -அலறினார்
கிருஷ்ணமோகன்.

-அவன் உடனே நின்றான்.

''போடா... போய்டு இது பவித்ரமான இடம்.
குடிச்சுபிட்டு வராதே போய்டு...''

-அவன் நின்று சில வினாடி முறைத்துவிட்டு
திரும்பிப் போனான்.

கிருஷ்ணமோகனுக்கு மூச்சுக் குழல் சீர்பட்டது.

சுவாமிநாதன் கவனமோ வைரம் மேலேயே இருந்
தது. கிருஷ்ணமோகன் அனுமதித்தது போதும் என்கிற
மாதிரி சுவாமிநாதன் கையிலிருந்து அதைப் பிடுங்கி
திரும்ப பால்கிண்ணத்தில் போட்டார்.

''சரி வாடா சுவாமி... வெளிய போய் பேசுவோம்,''
-என்று சொன்னபடியே வெளியே வந்து ஞாபகமாக
அந்த அறையை ரிமோட்டால் பூட்டினார்.

''என்னடா...எலக்ட்ரானிக்ஸ் கன்ட்ரோலா?',

''ஆமாம், பொக்கிஷத்தைல்ல உள்ள வெச்சுருக்
கேன். எப்படிடா இருக்கு சாமி...?''

''என்னத்தடா சொல்வேன்... புத்தபிரான் கைபட்ட
ஒரு விஷயம் உன்கிட்ட இருக்குங்கறதுக்காக சந்தோ
ஷப் பட்றதா—அது சர்வசக்தியோட உன்னை காப்
பாத்தி உன் எல்லா சாதுர்யங்களுக்கு துணை இருக்கற
துக்காக சந்தோஷப்பட்றதா, இல்லை அதை நீ தக்க
வெச்சுக்க உன் மகன் காதல்ல இருந்து எல்லாத்தையும்
நீ விலைக்கு வாங்கறியே... அதை நினைச்சு சந்தோ
ஷப்பட்றதா—ஒண்ணுமே புரியலடா...'' -நடந்தபடி
வந்து கூடத்தில் அமர்ந்து பேசும் சுவாமிநாதனின்

புளகாங்கிதம் அறைக்குள் திரும்ப பிகார்டியோடு படுக்கையில் விழுந்துவிட்ட தனஞ்ஜெயன் காதுவரை போய் விழுந்தது. அவன் முகத்தில் தேள் கொட்டுபட்ட மாதிரி அதிர்ச்சி.

சுவாமிநாதன் வரிசையாக விவரித்ததில் என் காதலை அப்பா விலைக்கு வாங்கினதாக சொல்லியிருந்தாரே..?

அப்பா எதாவது திருவிளையாடல் செய்து அதனால்தான் ரம்யாவும் அவள் அம்மாவும் அன்று அப்படி அடியோடு மாறிப் போனார்களா?

அவன் எழுந்து அமர்ந்து காதை கூர்மைப்படுத்திக் கொண்டான்

தொடர்ந்து அவர்கள் பேச்சு காதில் விழுந்தது.

''சரிடா... முதல்ல சாரியை பார்த்து ஆகவேண்டியதப் பாரு. உன் பிள்ளையை இப்படியே விட்டேன்னா குடிச்சே அவன் அழிஞ்சு போயிடுவான். கல்யாண காரியத்தை கவனி...''

''அதெல்லாம் சாரிக்கு எப்பவோ தகவல் போயாச்சு. சாரியும் அப்படியே ஆடிப் போயிட்டார், அண்ணா நீங்க எங்க, நான் எங்க.. நான் உமக்கு சம்பந்தியான்னு கேட்டு அந்த ஆளுக்கு வாயெல்லாம் பல்...''

''அவருக்கு என்ன... எதுக்கும் நீ தனஞ்ஜெயன் கிட்டேயும் பேசிடு. அந்த பொண்ணு நினைப்புல அப்றமா உன் கழுத்தை அறுத்துடப் போறான்.'

''அவனை எனக்கு நல்லா தெரியும் சுவாமி. எந்த ஒரு சின்ன பிரச்னைன்னாலும் கொஞ்சம் தண்ணி சாப்டுவான். நாலு நாள் ஒரு மாதிரி இருப்பான். அப்புறமா சரியாயிடுவான். இரண்டு மூணு வருஷமாவே இதானே அவன் நிலை...''



அப்பா நண்பரோடு பேசுவது 'தனஞ்ஜெயன் காதில் அமிலக் கரைசலாக இறங்கிற்று.

''அப்பா... என்னைப் பற்றி இவ்வளவு மோசமாகவா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்...?'

அவன் மனது கனலாக கனன்றது.

வெளியே பேச்சு நின்று சுவாமிநாதன் புறப்பட்டு விட்டிருந்தார்.

எட்டிப்பார்த்த தனஞ்ஜெயன் திரும்பி வந்து படுக்கையில் விழுந்தான். பக்கவாட்டு ஷெல்ப்பில் ரம்யா வாங்கித் தந்திருந்த ஒரு நீர் அருந்தும் வித்யாசமான கொக்கு பொம்மை அவள் ஞாபகத்தை அவனுக்குள் மூட்டிற்று

அதன் தொடர்ச்சியில் அவள் அவனை எடுத்தெறிந்து பேசியதும், புறக்கணித்ததும் அந்தகொக்கின் கூர்மையான அலகுபோலவே கொத்திற்று.

ஒரு பக்கம் காதலித்தவளின் புறக்கணிப்பு.

மறுபக்கம் அப்பாவின் சாதாரண கணிப்பு.

இரண்டுக்குமே ஒரு பதிலடி தரும் ஆத்திரம் அவனுக்குள் மூண்டது.

## 11

காதலைப் போல ஒரு கெட்ட விஷயம் உலகத்தில் இல்லை. காமத்துக்கு பாலீஷ் போட்டால் காதல். இது கிருஷ்ணமோகனின் நம்பிக்கை!

இன்ஸ்ட்டியூட் வாசலில் காரை நிறுத்திவிட்டு உதார் நடையோடு உள்ளேயும் நுழைகிறான் தனஞ்ஜெயன்.

மகேந்திரன் மாஸ்டர் பார்த்துவிட்டு முன்வந்தார்.

''வாப்பா...எங்க இப்பல்லாம் கிளாஸ்க்கே வர்றதில்ல...''

—அவன் பதில் சொல்லாமல் இன்ஸ்ட்யூட்டை நோட்டமிட்டான்.

''என்ன பாக்கறே...ரம்யாவையா? அவளும் வர்றதில்ல...''

அவன் முகத்தில் கணிசமான அதிர்ச்சி.

''ஆமா நீ நிஜமாலுமே அவளை காதலிக்கறியா?''

—மாஸ்டர் மெல்லிய குரலில் கேட்டார்.

''நான் காதலிச்சா ஆச்சா, அவ காதலிக்கணுமே... அதான் கழுத்தறுத்துட்டாளே...''

''இதோ பார் தனஞ்ஜெயன். நீ ஒரு மில்லியினர் மகன். பல நிறுவனங்களுக்கு எம்.டி. நீ இப்படி ஒரு அப்பன் பேர் தெரியாத பெண்ணுக்காக அலைபாயறது கொஞ்சம் கூட நல்லா இல்லை.

அவளும் சரி...அவ அம்மாவும் சரி...பணத்துக்காக எதையும் செய்யறவங்க.''

''என்ன சார் புதுசு புதுசா எதை எதையோ சொல்றீங்க?''

''உனக்குதான் வெளுத்ததெல்லாம் பாலாச்சே. எல்லாம் புதுசாதான் தெரியும்.

நான் இப்ப சொல்றேன். நல்லா கேட்டுக்கோ— அவ உன்னை காதலிக்கறதுக்காக தாராசிங்கிட்ட



பணம் வாங்கினா, உன்னை மறக்கறதுக்காக உன் அப்பா கிட்டேயும் பணம் வாங்கினா.

மொத்தத்துல காதலை வெச்சு ஒரு வியாபாரத்தை அழகா பண்ணினா. இப்படிப்பட்டவளா உனக்கு வேணும்...?''

மகேந்திரன் மாஸ்டரின் விளக்கத்தை கேட்டு சற்று இடக்காகச் சிரித்தான் அவன்.

''என்ன சார்...இப்படி சொல்லச் சொல்லி என் அப்பா சொன்னாரா...? இதுக்கு உங்களுக்கு எவ்வளவு அவர் தந்தார்...?''

''என்னது எனக்கு பணமா...சசிப்பா, இனி நான் உன்கிட்ட பேசறதுல அர்த்தமல்ல. நீ எப்படி வேணும்னா நடந்துக்கோ. ரம்யா ரொம்ப உத்தமமான பொண்ணு. நான்தான் தப்பா நடந்துகிட்டேன்.''

-மாஸ்டர் உடனேயே அந்தர் பல்டி, ஆகாச பல்டி அடித்தார்.

அவனுக்கு கூட தான் சற்று அவசரப்பட்டு பேசி விட்டோமோ என்று தோன்றிற்று.

அந்த சஞ்சலம் குறையாதபடி அங்கிருந்து விலகினான். அவரும் கிருஷ்ண மோகனுக்கு தகவல் தரத் தவறவில்லை.

''சார்...தனா இங்க அந்தப் பொண்ணைத் தேடி வந்தான். அட்வைஸ் பண்ணினேன். ஒர்க் அவுட்டாகலை, அந்த பெண்மேல இன்னும் காதல் குறையலன்னுதான் சொல்லணும். நீங்கதான் ஏதோ பண்ணிட்டதா நினைக்கறாரு...''

''சரி...நான் பாத்துக்கறேன். நீங்க போனை வைங்க''-அவர் கத்தரித்து முடித்தார்.

வாசலில் கார் நிற்கும் சப்தம் கேட்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்த ரம்யாவிற்கு ஆச்சரியமாக இருந்தது.

காரில் இருந்து இறங்குபவர் கிருஷ்ணமோகன்.

உள்ளே நுழைபவரை விழுந்தடித்துக் கொண்டு வரவேற்பது தன்வீர்சிங்.

''என்ன சார்...எப்பவும் என்னைதான் வரச்சொல் லிங்க. இப்ப நீங்களே தேடி வந்துட்டீங்க...''

''காரணமில்லாம வருவேனா என்ன...ஆமா என் பையன்கிட்ட தெளிவா சொல்லிட்டீங்க இல்ல...''

''அதுல என்ன சந்தேகம்?''

''இல்ல...என் பையன் இந்த விஷயத்துல என்னை சந்தேகப் பட ஆரம்பிச்சுட்டான். நான் சொல்லிதான் ரம்யா அவனை வெறுக்கறதாவும் அதுக்கு பின்னால ஏதோ மர்மம் இருக்குன்னும் நம்பறான்.''

''அச்சா...இது இந்த காலத்துல சகஜம். எவ்ளோ சினிமா பாக்கறாங்கோ...''

''நான் விளக்கம் கேக்கவரலை தன்வீர். பிரிஞ்சது பிரிஞ்சதா இருக்கணும். அதைச்சொல்லவந்தேன். இந்தா இன்னொரு பத்து லட்சம். இந்த ஊரைவிட்டே அவங் களை அனுப்பிடு எங்க இருக்கா எப்படி இருக்காங்கறது கூட இனி தனஞ்ஜெயனுக்கு தெரியக் கூடாது.''

''சாப்...நான் ஏற்கனவே அவளை ஒரு சேட்டுக்கு ஏற்பாடு செய்துட்டேன். அவ இன்னும் ஒரு வாரத்துல ராஜஸ்தான் போய்டுவா...''

''ஏற்பாடுன்னா என்னய்யா அர்த்தம்?''



''அந்த சேட்டுக்கு ஐம்பது வயசு. கீப்பா வெச்சுக்கப் போறாரு. அதைத்தான் அப்படி சொன்னேன். நீங்க கவலைப் படாம போங்க...''

''ஒருவாரம் கழிச்சு போறவளை இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ற கிளப்பேன்யா...''

''அவளோ அவசரமா?''

''ஆமாம்...என் பையனை பத்தி எனக்குதான் தெரியும். அவனும் என்னை மாதிரி. ஒரு விஷயத்துல இறங்கிட்டா நல்லதோ கெட்டதோ கடைவரை போராட்றவன் அவன்.

கொஞ்ச நேரத்துல இங்க வந்துடுவான். கதற ஆரம்பிச்சுடுவான். உம் பொண்ணு அதைப்பார்த்து இளகிட்டா கதை அப்றமா கந்தல்தான்.''

-கிருஷ்ணமோகன் இனி பேசமாட்டேன் என்பது போல எழுந்து கொண்டார்.

மேஜைமேல் பத்து லட்ச ரூபாயும் ஐநூறு ரூபாயாக...

தன்வீரின் கைகள் ஆசையாக அதை எடுத்து ஜிப்பா பாக்கெட்டில் செருகிக் கொண்டன.

மொத்த வீடுமே ஒரு மணி நேரத்தில் காலி!

தனஞ்ஜெயன் தன் காரில் வந்து நின்று பார்த்த போது பூட்டு கண்களைப் பிடுங்கியது.

'அவங்க ராஜஸ்தான் போய்ட்டாங்கோ. அந்தப் பொண்ணுக்கு அங்க கல்யாணமாம்.''

-பக்கத்து வீட்டுக்காரன் தன்வீரின் வேண்டு கோளை நிறைவேற்றி விட்டு உள்ளே சென்றான்.

''புல்ஷிட்...'' தனஞ்ஜெயன் ஸ்டியரிங்கை பிடித்து முறிக்கப் பார்த்தான். தவறுதலாக ஹாரனில் கைபட்டு அவன் உள்மனம் போல பே' என்ற அலறியது அது.

தெருவில் போகிற வருகிறவர்கள் பார்த்துவிட்டு முறைத்தார்கள்.

சில நொடிகள் ஏராளமாக தடுமாறி விட்டு காரைக் கிளம்பினான்.

அப்பாலவயே கிழிப்பது என்று மனதில் புதிதாக ஒரு தீர்மானம்.

காரை ஆபிசிற்கும், வீட்டிற்கும் விட்டபோது எங்கேயும் அவர் இல்லை.

எங்கே தொலைந்தார் இந்த மனிதர்?

## 12

'ராமேஷ்வரின் தொழில் விதிகளில் 'ஒன்று புலிக்கு இரையாக நேர்ந்தால் அதை கௌரவமாகவும் சந்தோஷமாகவும் ஏற்றுக் கொள்வது...'

கோவளம் தோட்டத்தில் கிருஷ்ணமோகனின் கார் நுழைந்து கொண்டிருந்தது.

சின்சியராக பாத்திகள் அருகே நின்று கொண்டு உரம் போடுவது பற்றி பண்ணையாட்களிடம் பேசிக் கொண்டிருந்தாள் சாரதா சௌத்ரி.

கிருஷ்ணமோகன் வரவும் பார்த்துவிட்டு-

''குட்மார்னிங்!'' என்றபடி நெருங்கி வந்து அவளே காரின் கதவைத் திறந்தாள்.



''வெரி குட்மார்னிங்..'' அவரும் இறங்கினார். நாலாபுறமும் பார்வை ஓடியது.

பரவாயில்லை என்கிற மாதிரி பண்ணை மாறியிருந்தது.

''என்னல்லாம் போட்டுருக்கே?''-கைகளை கட்டிக் கொண்டு நடந்தபடியே கேட்டார்.

''பெங்களூர் டொமட்டோ, கிரீன் பீன்ஸ், காலிஃப்ளவர்..''

''பீன்ஸ், காலிஃபிளவர்லாம் இந்த மண்ணுக்கு வருமா?''

''வரவைப்பேன். அது ஒண்ணும் பெரிய விஷயமில்ல பாஸ்''

-என்று புதுமரியாதை காட்டினாள்.

இருவரும் பண்ணை வீட்டினுள் நுழைந்தார்கள்.

சுற்றிலும் கண்ணாடிச் சுவர் இருக்க நடுவில் மார்பிள் தரையோடு இங்கிலாந்து ஃபர்னீச்சர்களோடு மிரட்டியது சூழ்நிலை.

வாசம் கமழும் ஏ.சி. காற்று.

''உனக்கு இந்த இடம் பிடிச்சிருக்கா...?'' என்றபடி அவளைப் பார்த்தார்.

''ரொம்ப பிடிச்சிருக்கு...'' -என்றபடி அவள் ஃபிரிட்ஜிலிருந்து ரம் பாட்டிலை எடுத்தாள். கண்ணாடி கோப்பையை முன்வைத்து அதை ப்ளக்...ப்ளக்...என்று குதிக்க விட்டாள்.

எதற்கு இருக்கிறது மார்பு...?

இந்த மாதிரி சமயங்களில் மயக்கத்தானே?

ஆனால் கிருஷ்ணமோகன் ஒரு மில்லியளவு கூட சபலம் ஆகவில்லை.

மிக நிதானமாக கேட்டார்.

''ரம்ல...ஆல்கஹால் மட்டும்தானே இருக்கு? நீ விசேஷமா சேர்த்த வேற எதாவது இருக்கா...''-கேட்டுக் கொண்டே தைரியமாக இரண்டு சொட்டு பருகி உதட்டை நனைத்தார்.

அவளிடம் மிரட்சி.

''என்ன பாக்கறே சாரதா.. உன்னையே நீ கலந்து கொடுக்கறியோன்னு நினைச்சேன்..''

அவள் அதைக் கேட்டு ரசித்துச் சிரித்தாள்.

அவள் அதைக் கேட்டு ரசித்துச் சிரித்தாள்.

ரம் பாட்டிலை திரும்பத் திறந்தாள். அவரது பதிலையே அட்வான்டேஜ் ஆக எடுத்துக் கொண்டு பக்கமாக தைரியமாக ஒட்டியபடி உட்கார்ந்தாள்.

''ஆமா ரேகா. இந்த அசைன்மென்ட்டுக்கு ராமேஷ்வர் உனக்கு எவ்வளவு தரப் போறான்?''

-சர்வ சாதாரணமாக ரம்மை நுனி நாக்கில் சப்பிய படி அவர் கேட்ட அந்த கேள்வி அவளை ஸ்பிரிங்போல் எழும்பி நிற்க வைத்தது.

''என்னம்மா நின்னுட்டே..? உக்காரு. அட உக்காருன்னா'' கணிசமாக கிமோ விடம் இப்போது அதட்டல் அவள் தடுமாற்றத்துடன் கேட்டாள்.

''நான் ரேகா இல்ல.. சாரதாசௌத்ரி. .அதோட-ராமேஸ்வர். அசைன்மென்ட் அது இதுங்கறீங்களே... என்ன அதெல்லாம்?''

-கி மோ கம்பும் கையுமாக ஒரு ஓணான் பார்வை பார்த்து, லேசாக சுழித்துக் கொண்டு சிரிப்பதற்குள் அவளிடம் உதறல் எடுத்து விட்டது.

''நான் யார் தெரியுமா?'' -அவளிடம் சித்தாப்பான கேள்வி.

அவளிடம் மௌனத்தின் தொடர்ச்சி.

''திமிங்கலம், திமிங்கலம் தெரியுமா திமிங்கலம்?''-திரும்பவும் அவரிடம் கேள்வி.

''பாஸ்...நீங்க சொல்றீங்க?''

''நான் திமிங்கலம்கறேன்! என்னை எல்லாம் உன்னைப்போல தூண்டிலால பிடிக்கப் பாக்கறான் அந்த இந்திரஜித் தாராசிங். எங்கேயாவது தூண்டில்ல திமிங்கலம் சிக்கினதா வரலாறு உண்டா?'' -பெரிதாக அலறினார் கிருஷ்ணமோகன் அந்த விளக்கம் சாரதா



சௌத்ரி எனும் ரேகாவின் கண்களை அவளது கை வளை சைசுக்கு பிசுக்கவிட்டு கதி கலக்கியிருந்தது.

''உன்னை யோகியோட ஆசிரமத்துல சந்திச்ச அன்னிக்கே கணக்கு பண்ணிட்டேன் காரணமாக தான் விட்டு வெச்சிருக்கேன். எதுக்கு தெரியுமா?''

-திரும்பவும் சத்யராஜ் பாணியில கேள்வி. அவள் எதற்கென்றே தெரியாமல் முழிக்கும் போது பக்கமாக டேபிள் மேல் உள்ள அவளது பேஜர் சிணுங்கியது.

அவர் கவனமும் உடனே அந்த பக்கம் திரும்பியது.

''பேஜரா?''

''உம்...''

''பேஜர்லதான் உனக்கு ராமேஷ்வர் மெஸ்சேஜ் பாஸ் பண்றானோ?''

''.........................''

''திருதிருன்னு முழிக்காம அதை எடுத்துப்பார் இப்ப என்ன சேதி சொல்லியிருக்கான்னு சொல்லு கேப்போம்.''

-அவள் நடுக்கத்தோடு டேபிளில் பேஜரை எடுத்தாள் பட்டனை தட்டிவிட்டுப் பார்த்தாள். தமிழிலேயே செய்தி ஓடியது.

''டியர் ரேகா—

அசைன்மென்ட்டை தொடர வேண்டாம், அது முடிவடைந்து விட்டது. அதற்கு இனி அவசியமில்லை. திரும்பி விடவும்.''

-செய்தி பல ஆச்சரியத்தை தந்தது. அதை அப்படியே எடுத்து கிருஷ்ணமோகன் எதிரே நீட்டினாள்.

கிருஷ்ணமோகன் பார்த்துவிட்டு சிரிக்க ஆரம்பித்தார்.

சட்டென்று சிரிப்பை அறுத்துக் கொண்டு சொன்னார்.

''நான் சுதாரிப்பா இருக்கேங்கறது ராமேஷ்வருக்குத் தெரிஞ்சுபோச்சு. பருப்பு வேகாதுன்னும் தெரிஞ்சுகிட்டான். அந்த பக்கம் என் பையனுக்கு குறிவெச்

இங்கே உன்னையும் கலாய்ச்சு
சான்,சுமாளிச்சுட்டேன். அதான் திரும்பிடுன்னு மெஸ்ஸேஜ்
கிட்டு இருக்கேன். நான் யாரு...? திமிங்கலம்...''
கொடுத்திருக்கான்.

-கிருஷ்ணமோகனை லேசாக போதை வெறு கவ்வத் தொடங்கியிருந்ததால் பேச்சில் எகத்தாளம் கொடிகட்டிப் பறந்தது

சாரதா சௌத்திரி என்கிற ரேகாவின் பார்வை அங்கிருந்து ஓடுவதற்கு வழி பார்க்கத் தொடங்கிற்று.

''என்ன... எப்படிடா என்கிட்ட இருந்து தப்பி ஓடலாம்னு பாக்கறியா? அவ்வளவு சுலபத்துல விட்ருவேனா...?

-அவர் குழறலான குரலில் கேட்க, அடுத்தகணம் நான்குபேர் சுற்றி வந்து நின்றனர்.

''டேய் இவளை தூக்கிட்டுபோய் இவதலைல ஒரு முடி இருக்கக் கூடாது, நல்லா மொட்டையடிச்சு ஒரு டாக்சில ஏத்தி அந்த ராமேஷ்வர் கிட்ட அனுப்பி வைங்கடா...''

-அவள் உயிர்போனது போல அதைக் கேட்டுப் பதைக்க அந்த நான்கு பேரும் அவரது கட்டளையை செயல்படுத்தத் தொடங்கினர்.

அவள் கத்திப் பார்த்தாள். திமிறினாள்...பலனே இல்லை. மொட்டைத் தலையாக அவளைப் பார்த்த பிறகுதான் கிருஷ்ணமோகனுக்குகோபமே அடங்கிற்று.

அவள் கருவினாள்.

''கிருஷ்ணமோகன்... இத்தனைக்கும் நீ அனுபவிப்பே. நான் பண்ணினது தப்புதான். ஆனா உன் கிட்ட பெரிய மனுஷனுக்குண்டான பெருந்தன்மையே கொஞ்சம் கூட இல்லை. இதுக்கெல்லாம் நீ அனுபவிப்பே.''-என்று சாபமாய் இட்டாள்.

''சர்தான் போடி...''

# 13

யானைக்கு அடி சறுக்கும்...இது பழமொழி. அது சறுக்கி விழுந்து பார்த்திருக்கிறோமா? பார்க்க நேர்ந்தால் எப்படி இருக்கும்...கிருஷ்ண மோகனை பார்த்ததுபோல் இருக்குமா?

பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த சுவாமிநாதன் முகத்தில் பேயறை பட்ட மாதிரி ஒரு அதிர்ச்சி. செய்தி அந்த மாதிரி ஆக்கியிருந்தது.

'பிரபல யோகி கருடாத்ரி அமெரிக்காவில் கைது அவரது கும்பல் பிரவுன் ஷுகர் கடத்தியது நிருபணமாகி விட்டது அவருடன் நேபாளத்து யுத்த பிட்சுவான க்யானியும் கைதானார்! இவர் ஒரு போலி வைர வியாபாரியும் கூட...'

'ஐய்யோடா... இந்த ஆள் ஒரு டுபாக்கூரா! இவனை நம்பி கிருஷ்ணமோகன் ஏதேதோ பண்ணி வெச்சிருக்கானே...?'

-வாய் விட்டு புலம்பும்போது உள்ளே நுழைந்து கொண்டிருந்தான் தனஞ்ஜெயன்.

அவனைப் பார்க்கவும் பதட்டம் சுவாமிநாதனிடம் கூடியது.

''வா தனா...''

''நான் வர்றது இருக்கட்டும். உங்க கிட்ட சில முக்கியமான விஷயங்கள் பேசணுமே...''

''என்னப்பா...?''

''வீட்டுக்கு வந்தபோது அப்பா கூட நீங்க பேசிகிட்டிருந்தது என் காதுலையும் விழுந்தது...''

-அவன் துளி இடைவெளி விட்டான்.

''அதுக்கென்ன தனா...சரி என்ன சாப்பிட்றே?''

''விஷம்... விஷம் கிடைக்குமா அங்கிள்.''

''ஐய்யோ...என்னப்பா ஆச்சு உனக்கு?''

''இனிதான் ஆகப்போகுது, உண்மைய சொல்லுங்க என் காதல் விஷயத்துல அப்பா எதாவது திருவிளையாடல் பண்ணினாரா?'

''அது...அது...''

''சொல்லுங்க அங்கிள்— ரம்யாவை பாக்கப் போனேன். அவளை காணோம். அவ ஊரை விட்டே போய்ட்டா. அப்பாதான் ஏதோ பண்ணியிருக்கறதா நினைக்கறேன். உங்களுக்கு எல்லாம் தெரியும். தெரிஞ்சும் மறைக்காதீங்க...''

-அவன் குமுறிக் கொட்டினான்.

''என்ன தனா என்னை இப்படி தர்ம சங்கடப்படுத்தறே. எல்லாம் அந்த வைரம் படுத்தற பாடுப்பா. அதை அடைய அந்த தாராசிங் நடத்தற போட்டில உன் காதலும் பலி ஆயிடித்து. ஆனா எனக்கு அந்த வைரம் மேலையே இப்ப சந்தேகம்...''

''என்ன சொல்றீங்க?''

-சுவாமிநாதன் பேப்பரை எடுத்துக் காட்டினார். அதைப் பார்த்தவனுக்கு பகீரென்றது. அடுத்தக்ஷணமே சிரிப்பும் வந்தது.

''ஏன்ப்பா சிரிக்கறே...உன் அப்பா ஏமாந்துட்டானோன்னு நான் நினைக்கறேன்.''

''நானும்தான் அங்கிள்...'' அவன் மிகப் பரிதாபமாக சொன்னான்.

''என்னப்பா சொல்றே?''

''அந்த வைரத்தை எடுத்து பொடி பண்ணி பால்ல போட்டு குடிச்சிட்டுத்தான் இங்கேயே வந்தேன்! என் காதலி எனக்கு கிடைக்காமல் போகக் காரணம் அந்த வைரம்தான். அதற்காக என் காதலை அழிச்ச அதை முதல்ல அழிச்சேன். அப்றமா நானும் அழிஞ்சிடலாம்னு அதை குடிச்சேன்.

ஆனா அது, அப்பாவை மட்டுமில்ல என்னையும்ல ஏமாத்திடிச்சு...?''



-அவன் சொல்லச் சொல்ல சுவாமிநாதன் முகத்தில் நிம்மதிப் பெருமூச்சு.

''அப்ப ஏமாந்ததால்தான் உங்கப்பனை காப்பாத்தியிருக்கு.

''வைரம் போயிருந்தா இன்னொண்ணு வாங்கிக்கலாம். ஆனா நீ போயிருந்தா...?''

''அட போங்க அங்கிள்...அந்தக் கண்ணாடிக்காக என் காதலை விலை பேசிட்டாரே என் அருமை அப்பா...''-அவன் கண்களில் கண்ணீர் பீறிட்டது.

''கவலைப்படாதே... எல்லா உண்மையும்தான் தெரிஞ்சு போச்சே. உன் காதலி எங்க இருந்தாலும் தேடிப்பிடிச்சு அவளை உனக்கே கல்யாணம் பண்ணி வைக்க உன் அப்பன் கிட்ட நான் சண்டை போட்றேன்.''

-தோளில் கைபோட்டு ஆறுதல் சொன்ன அந்த மனிதரை சற்று நிம்மதியோடு பார்த்தான் அவன்.

''வா. உங்கப்பனை பார்ப்போம். இந்த நியூஸ் அவனுக்கு தெரியுமோ தெரியாதோ...''

-இருவருமாக புறப்பட்டார்கள்!

## 14

'கிருஷ்ணமோகன் ஒரு அசலான பெரிய மனிதன். அதுதான் இப்படி ஆகிவிட்டதோ?'

ஆபீஸ் வாசலில் முன்பு கருடாத்ரியோகி படம் இருக்கும். இப்பொழுது அந்த இடம் வெற்றிடமாக இருந்தது.

உள்ளே நுழையும் தனஞ்ஜெயனையும், சுவாமிநாதனையும் பார்த்த ஆபீஸ் ஸ்டாப்ஸ் எழுந்து நின்று குட்மார்னிங் என்கின்றனர். அதில் சுரத்தே இல்லை

இருவரும் கிருஷ்ணமோகனின் அறை வாசலை அடைந்தபோது கிருஷ்ணமோகனின் பி. ஏ. தடுத்தார்.

"சார்... தயவுசெய்து உள்ளே போக வேண்டாம் சார்...அவர் நிலைமையே சரி இல்லை.."

'ஏன்...எப்படி எங்க முகத்துல முழிக்கறதுங்கற பயமா? வழியை விடுய்யா...'-தனஞ்ஜெயன் தாண்டி கொண்டு உள்ளே சென்றான். உள்ளே கிருஷ்ண மோகனை பார்த்த க்ஷணம் விக்கித்து நின்றான்.

மேஜைமேல் ஒரு மாதிரி நின்றுகொண்டு ஒரு ரீஃபில் பேனாவை சிகரெட்டாய் கருதி புகைவிட்டபடி அந்த மனிதர் ஏதோதோ உளறிக் கொண்டிருந்தார்.

ஐந்தாண்டுக்கும் மேலாக வியாபாரத்தில் புலியாக இருந்தாலும், ஒரு கண்ணாடித் துண்டை கொடுத்து இரண்டு பேர் அவரை ஏமாற்றி எலியாக்கி விட்டதில் அவரது சித்தம் கலங்கிப் போய்விட்டிருந்தது.

விக்கித்து நின்ற தனஞ்ஜெயனை சுவாமிநாதன் ஆறுதலாக கட்டி அணைத்தார். அவனை வெளியே அழைத்துச் சென்று பி.ஏ.வின் டேபிளில் இருந்து மெண்டல் ஹாஸ்பிடலுக்கு போன்செய்ய ஆரம்பித்தார்!

முற்றும்